விலை சதம் 25

# சுதந்திரன்
SUTANTIRAN

திருவள்ளுவர் ஆண்டு 1999, மார்கழி 8 உ (23-12-67) சனி ரம்ழான் 20 — புத்தகம் 22 இதழ் 18

# 1968 சனவரி 30ந் திகதி அரசாங்கத்திலிருந்து வெளியேறுவது யார்? தமிழரசா? காங்கிரசா?

தேசிய அரசாங்கத்திலிருந்து 1968 சனவரி 30-ந் திகதிக்குப் பின்னர் வெளியேறுவது தமிழரசுக் கட்சியினரான நீங்களா? அல்லது தமிழ் காங்கிரசினராகிய நாங்களா? நாங்கள் அல்லது நீங்கள் கண்டிப்பாக வெளியேற வேண்டியே ஏற்படும்" இவ்வாறு தமிழ் காங்கிரஸ் பொதுச் செயலாளரும் உடுப்பிட்டி எம். பி. யுமான திரு. மு. சிவசிதம்பரம் உடுவில் எம். பி. திரு. வி. தர்மலிங்கத்திடம் கூறியிருப்பதாக தெரிகிறது.



1968 சனவரி 30-ந் திகதிக்கு முன்பு தமிழ் பேசும் மக்களின் சில அடிப்படை உரிமைகளை வழங்குவதற்கு தேசிய அரசாங்கம் நடவடிக்கையெடுக்காவிடின் சனவரி 30-ம் திகதி தமிழரசுப் பொதுச்சபை கூடி, தொடர்ந்தும் தேசிய அரசாங்கத்தில் அங்கம்வகிக்கவேண்டுமா என்பதை தீர்மானிக்கும் என்று கடைசியாக நடைபெற்ற தமிழரசுப் பொதுச் சபைக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டுள்ளது தெரிந்ததே.

தமிழரசுக் கட்சியின் கோரிக்கைகளில் மிக முக்கியமானது மாவட்ட சபை மசோதாவை கொண்டு வந்து நிறைவேற்றுவதேயென்று கட்சி வட்டாரங்களிலிருந்து தெரியவருகிறது.

மாவட்ட சபை மசோதா மந்திரி சபையால்



பரிசீலனை செய்யப்பட்டு

(9-ம் பக்கம் பார்க்க)

## வானொலிப் புளுகு

புளுகுவதற்கும் ஓர் எல்லை வேண்டும் என்பது இலங்கை வானொலி கூட்டுத்தாபனத்தினருக்கு தெரியவில்லைப் போலும்! இல்லாவிட்டால் இ.தொ. காங்கிரசுக்கு 6 லட்சம் உறுப்பினர்கள் என்று மிகப் பெரிய பொய்யை வெட்கமின்றி கட்டவிழ்த்து விடுவார்களா? என்று சுதந்திரன் நிருபரிடம்பேசும்போது இ.தொ. கழகப் பிரமுகர் ஒருவர் கேட்டார்.

'இலங்கை வானொலி 6 லட்சம் பேரைக் கொண்ட இ. தொ. கா. வேலைநிறுத்தத்தில் பங்குபற்றவில்லையென அடிக்கொருதரம் அலறித்தள்ளுகிறது. ஒரு சமயம் 16 லட்சம் இ. தொ. கா. உறுப்பினர்கள் என்றும் எனது காதில் விழுந்தது.

'3 லட்சத்துக்கும்குறைவான உறுப்பினர்களை கொண்ட இ. தொ. கா. வேலைநிறுத்தத்தில் கலந்து கொள்ளாததால் அதன் உறுப்பினர்கள் தொகை திடீரென ஒரு சிலநிமிடங்களில் 6 லட்சமாக உயர்ந்துவிட்டது. வேலைநிறுத்தத்தில் கலந்துகொண்டிருக்குமானால் 6 லட்சம் ஒன்றரை லட்சமாக குறுகியிருக்கும். எங்கள் வானொலி ஏன் இப்படி மக்களை ஏமாற்றுகிறதோ.' இவ்வாறு மேற்படி பிரமுகர் சலித்துக் கொண்டார்.


## இ. தொ. க. வேலை நிறுத்தத்தை கைவிட்டதேன்? நவரத்தினம் விளக்குகிறார்

இலங்கைத் தொழிலாளர் கழகம், இம்மாதம் 21ம் திகதி நடத்தவிருந்த உத்தேச வேலை நிறுத்தத்தை கடைசி நேரத்தில் கைவிட முடிவு செய்ததேன் என்பதை இ. தொ. க. தலைவர் திரு. வி.என். நவரத்தினம் எம்.பி.சுதந்திரன் நிருபரிடம் விளக்கினார்.

"வர்த்தகத் தொழிலாளர்களுக்கும் தோட்டத் தொழிலாளர்களுக்குமிடையே அலவன்ஸ் வழங்குவதில் பாரபட்சம் காட்டப்பட்டதை எதிர்த்தே இ. தொ.க.வேலை நிறுத்தத்தில் குதிக்க முடிவு செய்தது. ஆனால், இப்போது அரசாங்கம் தோட்டத் தொழிலாளர்களுக்கும் அலவன்சை அதிகரித்திருப்பதால் உத்தேச வேலை நிறுத்தத்தை கைவிட்டோம்' என்று அவர் குறிப்பிட்டார்.

இ.தொ.கழகம்வேலை நிறுத்தத்தில் கலந்து கொள்ள முடிவு செய்ததேன் என்பதையும் திரு. நவரத்தினமவிளக்கமாக நமது நிருபரிடம் எடுத்துக் கூறினர். அவர் கூறியதாவது:

(9-ம் பக்கம் பார்க்க)




ஒப்பந்தத்துக்கு ஆபத்து

இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களின் உரிமைக் குரல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண்களுக்கு உயர்தரக் கல்வி அவசியம்

பெண்களே ஒரு சமுதாயத்தின் முதுகெலும்பு. ஒரு சமுதாயத்தை நல்ல வழியில் நடத்தும் பொறுப்புப் பெண்களுடையதே. இப்படிப்பட்ட பெண்களுக்கு உயர்தரக் கல்வி அவசியம்.

ஓர் குழந்தை தன் சிறுவயதிலே தாயின் மடியில் இருந்து தாய் செய்யும் பழக்க வழக்கங்களை நல்லது, தீது என்ற பேதமின்றி அப்படியே பிரதி பண்ணுகிறது. இப்படி இக்குழந்தை அதிலுள்ள தீய பழக்கங்களைக் கடைப் பிடித்துத் தொட்டிற் பழக்கம் சுடுகாடு மட்டுமென்ற மாதிரி வந்து விடும். இக் குழந்தை இப்படிக் கெடவேண்டியதன் காரணம் தாய்க்குக் கல்வியறிவு இல்லாமையே.

தாய் கல்வியறிவுடையவளாயின் கற்றறிந்த படி நல்லொழுக்கத்திலே ஒழுகுவாள். அவளின் பிள்ளைகளும் அதன்படியே ஒழுகுவர். பின்னர் அவர்களினுடைய குழந்தைகள் தாய் தந்தையருடைய மனம் கோணுமல் நடந்து வருவர். ஆகவே பெண்களுக்கு உயர்தரக்கல்வி அவசியம்.

க. அருளம்பலம்
நெல்லியடி.

---

## தீண்டாமை பற்றி அறிஞர் அண்ணு

கள்ளக் கையொப்பக்காரன் கரம் கூப்புகிருன்—விபசாரி விசேஷ அபிஷேகம் செய்கிருள்—குடி கெடுப்பவன் கும்பாபிஷேகம் செய்கிருன்—கொள்ளை லாபமடித்தவன் வெள்ளி ரிஷபம் செய்து வைக்கிருன்—ஒழுக்கக் குறைவுள்ளோன், அழுக்கு குணம் படைத்தோர், இழுக்கான வழி செல்பவர்கள், ஆலயங்களிலே நுழைய முடியாதபடி தடை உண்டோ? இல்லை,

ஆனுல் ஆதித்திராவிடரை மட்டும் ஆலயத்துக்கு வரக்கூடாது என்று தடுக்கிருேம்—நியாயமா?

(சென்னை வானெலி நிலையத்தில் அண்ணு பேசியதின் ஒரு சிறு பகுதி)

தகவல்:— மாவி. ஆனந்தன்
திருக்கோணமலை

மாணவர் அரங்கு

அரம் போலும் கூர்மையரேனும்
மரம் போல்வர்
மக்கட் பண்பில்லாதவர்

மாணவர் சிறுகதை

# மந்திரியின் தந்திரம்

அன்ருெருநாள் ஈழநாட்டு மன்னனெருவன் சோழநாட்டிற்குச் சென்றிருந்தான். சோழ மன்னன் ஈழநாட்டு மன்னனை அகமும் முகமும் மகிழ்ந்து வரவேற்ருன் காவிரிப்பூம் பட்டினம் சிறந்த முறையில் அலங்கரிக்கப்பட்டிருந்தது. ஈழநாட்டு மன்னன் பலவகையாலும் சிறப்பிக்கப்பட்டான். அரண்மனை வாசலில் அரம்பையர் பலர் கூடிநின்று முறைப்படி விருந்தினரை வரவேற்றனர். மான்விழி மங்கையர் தேன் மொழியாற்பாடி மன்னனை வரவேற்றனர்.

மங்கையர் அழகினைக்கண்ட மன்னன் தன்னைமறந்து அழகென்னும் மதுவை உண்டு அளப்பெரும் மகிழ்வெய்திஞன். அவ்வழகிகளில் ஒருத்தி மன்னனின் உள்ளத்தில்உறைந்தாள். ஈழநாட்டு மன்னன் சோழவேந்தனைக் கேட்டுத்தன் உள்ளம் கவர்ந்தவளை அறிந்து கொண்டான், அவள் பெயர் தேன்மொழி என்றும் அவள் சோழ அரசின் முதலமைச்சரின் மகள் என்றும் கேட்ட ஈழ வேந்தன் பெருமகிழ் வெய்திஞன் அவளை அடையும் வழிகளை நாடிஞன். முதலமைச்சன் தன் மகளை ஈழவேந்தனுக்குக் கொடுக்க இசைந்தான்.

மந்திரியின் இல்லத்தில் ஈழத்து மன்னனுக்கு ஒருநாள் விருந்து நடந்தது அதில் பங்கு கொண்ட சோழவேந்தனுக்கு ஓர் தங்கக் கிண்ணத்தில் பால் கொடுக்கப்பட்டது. அக் கிண்ணத்தின் அழகையும் அதிற் கண்ட சித்திர வேலைப்பாட்டையும் கண்ட மன்னனுக்கு பொருமைத் தீ பற்றி எரிந்தது. மணிமுடிதரித்த மன்னவிடம் இல்லாத ஒரு பொருள் மண்டியிட்டு வாழும் மந்திரியிடம் இருக்கக்கூடாது' என்று எண்ணியது அவன் பொருமை உள்ளம். எப்படியும் அதைக் கைப்பற்ற எண்ணிய சோழ வேந்தன் கிண்ணத்தைத் தன் ஆடையுள் மறைத்து வைத்துக்கொண்டான்.

முகில்வண்ணன்

இதனை எப்படியோ மந்திரி கண்டு கொண்டான். மன்னனின் மட்டான செயல் மந்திரியின் உள்ளத்தை உறுத்தியது. ஆனுல் அதனை வெளியிற் காட்டிக்கொள்ளவில்லை. 'முகந்திருந்தி நோக்கக் குறையும் விருந்து' என்பதை உணர்ந்திருந்தமையால் ஒன்றும் பேசாதிருந்தான்.

திடீரென மந்திரிக்கு ஒரு யோசனைஏற்பட்டது. உடனே அவர் அங்கிருந்து மறைந்து சற்றுநேரத்தில் ஒரு மந்திரவாதியைப்போல் மாறுவேடத்தில்தோன்றினர். ஒருகையிலே பொல்லும் மறுகையிலே மன்னனிடம் இருந்தது போன்ற ஒரு தங்கக் கிண்ணமும் வைத்திருந்தார். எல்லாரும் மந்திரவாதியையே வைத்தகண்வாங்காமல் பார்த்துக் கொண்டிருந்தனர்.

'இதோ பாருங்கள் நான் கையில் வைத்திருக்கும் இக் கிண்ணத்தை எனது உடையில் மறைத்துவைத்துச் சோழ வேந்தனின் உடையிலிருந்து இதனை எடுக்கிறேன்' என்று மந்திரவாதி தன் உடையில் வைத்தார்.

அனைவரும் வியப்புடன் மன்னன் பக்கம் திரும்பினர். உடனே மன்னன தான் வைத்திருந்த கிண்ணத்தைத் தாங்க முடியாத அவமானத்தால் தலைகுனிந்தவாறே மந்திரவாதியாகிய மந்திரியிடம் கொடுத்தார், உள்ளே சென்று மறைந்தான் மந்திரவாதி.

மன்னனின் உளமறிந்த மந்திரி அக்கிண்ணங்கள் இரண்டையும் அரசர்கள் இருவருக்கும் ஆளுக்கொன்ருகப் பரிசளித்தான்.

பரிசைப் பெற்றுக்கொண்ட மன்னனும் தன் மந்திரியின் திறமையை மெச்சினுன்.

---

## வெற்றி

வின்சன் சர்ச்சில்:- எதற்கும் பயந்து ஓடும்போது ஓட்டமெடுக்காதே.

ஹாரிமன்:- பயமென்னும் கண்களுடன் நீ வருங் காலத்தை பார்க்க வேண்டாம்.

மெக் ஆத்தவர்:- மரணத்திற்கு அஞ்சாதவர்களே உயிர் வாழ தகுதியுடையவர்கள்.

தியோடர் ரூஸ்வெல்டின்:- திடமான எண்ணத்தைவிட அருமைசால் குணம் வேறென்றுமில்லை.

விவேகானந்தர்:- எதிர்த்து நின்ற போதிலும் கொண்ட கருமத்தைக் கைவிடாதே!

நெப்போலியன்:- நான் ஒரு அடி எடுத்து வைப்பதற்கு முன்னல் இரண்டடி திரும்பிப் பார்ப்பேன்.

—பாட்சி வண்ணன்.
திருமலை.


# உணர்ந்து வாழ்வீர்!

— மூ. துரைசாமி —

உலகின் மணி விளக்காய் — உயர்
இயேசு அவதரித்தார்!
நலமாம் நாமவரைத் — தினம்
நயந்து துதித்திடுவோம்!

மாந்த ருயர் வெய்த — மணி
நாத வழியுரைத்தார்!
சாந்தர வருகையைச் — செவி
சாய்த்துக் காத்திடுவோம்!

இன்ப மெழில் கொஞ்ச — நல்
லிறைவனை தேடென்ருர்
அன்பின் வழிச் சென்று — அவ
ரருளைத் தேடிடுவோம்!



நவம்பர் 9ம் திகதி கேப் கென்னடியிலிருந்து அமெரிக்காவின் பிரமாண்டமான சட்டர்ன் 5 ரெக்கெட் புறப்படுகிறது. சந்திரனுக்கு மனிதனை அனுப்பும் அமெரிக்காவின் முயற்சிக்கு இது பின்னர் உதவி புரியும்

# ஏசுவைப் போற்றிடுவோம்!

— வெளிமடை, மனோரஞ்சிதம் —

ஏசுவைப் போற்றிடுவோம் — புனித
ஏசுவைப் போற்றிடுவோம்
மாசிலா வாழ்வு வாழ்ந்த
ஏசுவைப் போற்றிடுவோம்.

கண்ணியம் வளர்ந்திடவே — நல்ல
கருத்துக்கள் மலிந்திடவே — மண்ணில்
புண்ணியம் பெருகிடவே — இந்தப்
பூமி செழித்திடவே

(ஏசுவைப் போற்றிடுவோம்)

புனிதநெறி பூத்திடவே — இங்கு
பொறுமை தழைத்திடவே — எல்லாருக்கும்
மனிதவுரிமை கிடைத்திடவே — இந்த
மாநிலம் செழித்திடவே

(ஏசுவைப் போற்றிடுவோம்)

உண்மை ஓங்கிடவே — உலகில்
உயர்வு கிடைத்திடவே — இங்கு
நன்மை நிலைத்திடவே — நம்
நாடு செழித்திடவே

(ஏசுவைப் போற்றிடுவோம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




வாசுகி,
மன்னம்பட்டினம்.

கே: சம அந்தஸ்துத்தான் தனது கொள்கை என முல்லைத் தீவில் கூறும் திரு. பொன்னம்பலம் பாராளுமன்றத்தில் கூறுவது என்?

ப: இரட்டை அரசியல் வாழ்க்கை நடத்த விரும்புகிறவர்களுக்கு வழிகாட்ட வேண்டும் என்பதற்காக.

ஃ

சின் கென்னடி
யாழ்ப்பாணம்

கே: ரசியா—சீனு — அண்ணு இந்த மூன்றிலும் எது வலிமையானது?

ப: 'ரஷியாவிடமும் சீனுவிடமும் அணுகுண்டுகள் உண்டு அண்ணுவிடம் அதுகிடையாது ஆகவே அண்ணுவை விட சீனுவும் ரஷியாவும வலிமை பெறறவை. ரஷியாவிடம் பறக்கும் குண்டு உணடு. சீனுவிடம் அது கிடையாது. ஆகவே சீனுவிலும் ரஷியா வலிமை கூடியது.

ஃ

ஐ. தேவராசா
நெல்லியடி

கே: குயுக்தியே, நீர் பிரதமரானுல் எனக்கு என்ன தருவீ?

ப. நான் பிரதமரானுல் எதிர்க்கட்சியினரின் கேள்விகளுக்கெல்லாம் பதிலளிக்க வேண்டியிருந்தாலும், உங்களின் கேள்விகளுக்கும் கட்டாயம் பதில் தருவேன்.

ஃ

மு. கருணநிதி
ஏழாலைமேற்கு

கே: ஓய் குயுக்தி மாமா வே வெள்ளப் பெருக்குஏற்பட்டதன், காரணம் என்ன?

ப: சீனுவும் அமெரிக்காவும் அணு குணடுகளை வெடிக்கச் செயததுதான் காரணம் என்று கூறப்படுகிறது.

கே: எதிர்வரும் பொதுத் தேர்தலில் அமமாவின் அரசாங்கம் வந்தால்?

ப: ஐயா எதிர்க்கட்சித் தலைவராவார்.

கே: அடுத்த வருடக் கலண்டரில் அழகிய வர்ணங்களில் குயுக்தியாரின் ஓர் உணமைப் படத்தை அச்சிட்டு ஒவ்வொரு 'சுதந்திரன்' இதழுடனும் தருவீர்களா?

ப: குயுக்தியாருக்கு பொய் உருவம் என்றும் மெய் உருவம் என்றும் இரு உருவங்கள் குடையா. அவர் படம் எப்பொழுதும் உண்மையானதே! படத்தை அச்சிட்டு பத்திரிகையுடன் இலவசமாக விநியோகிக்கும் அளவுக்கு குயுக்தியார் இன்னும் மலிந்துவிடவில்லை.

கே: என். எம். தற்பொழுது என்ன செய்து கொண்டிருக்கிறார்?

ப: காத்துக் கொண்டிருக்கிறார் தேசிய அரசுவிழும்வரை.

கே: யாழ்ப்பாணத்தில் அரிசி விலை கூடியது ஏன்?

ப: ருபாயின் மதிப்பு குறைந்தும் அரிசியின் மதிப்பு குறையாமலிருப்பதே.

ஃ

சிவநாதன்
நெலலியடி

கே: பிரதமர் யாழ்ப்பாணம் வந்தபோது ஜி. ஜி.யும திருவும் ஒன்று சேர்ந்து விட்டனரே.

ப: இல்லை—அவர்கள் இருவரும் இன்னும் இருவராகவே இருக்கின்றனர்.

ஃ

'ஏந்தெழில் மிக்கான்'
பதுளை

கே: ஒருவரது கல்வி ஏழு தலைமுறைக்கு நிலைத்திருக்குமாமே அத்தகைய வித்தியாதானத்துக்கு ஊறு விளைவிக்கும்கொருர பாவம் எத்தனை ஜென்மங்களுக்கு நீடிக்கும்?

ப: சுமார் ஏழே முக்கால் ஜென்மங்களுக்கு

ஃ

குமார்
முல்லைத்திவு

கே: அண்மையில் முல்லைத் தீவில் நடைபெற்ற காங்கிரஸ் கூட்டத்தில் எல்லோரையும் எப்பொழுதும் ஏமாற்றிக் கொண்டிருக்க முடியாது என்று ஆனைப் பதத்தலைவன் கூறினுராம! யாரைப்பற்றி கூறினுர்?

ப: அவர் அதனைக் கூறும் போது தனது நெஞ்சில் கை வைத்துப் பேசினுரா? அப்படியானுல் அவர் தன்னைப் பற்றியே அப்படிக் கூறியிருக்க கூடும்.

ஃ

பி. எஸ். மார்க்கண்டு
களுதாவளை

கே: இந்திய அரசாங்கத்தின் ஊழியர்கள் மூன்று குழந்தைகளுக்கு மேல் பெறாமல் கர்ப்பத் தடை செய்து கொண்டால் அவர்களுக்கு டிரான்சிஸ்டர்வானெலி பெட்டிகள் கொடுப்பதாக மந்திரி சந்திரசேகர் கூறியிருந்தாரே! இது நடக்குமா?

ப: நடக்காது, ஏனெனில் இப்பொழுது திரு. சந்திரசேகரன் கர்ப்பததடை பற்றி வாய் திறப்பதேயிலலை. அத்துடன் அவர் இப்பொழுது ஓர் அரை மந்திரியாகி விட்டாரே!

ஃ

பி. எஸ். மார்க்கண்டு
புல்மோட்டை

கே: ஒரு பெண் எப்படிப் பட்டவளாக இருக்க வேண்டும் மாமா?

ப: வரதட்சணை கேட்கும் மனிதப் பிண்டத்தை மணமுடிக்க விரும்பாதவளாக இருக்க வேண்டும் மருமகனே!

பகீதரன்,
திருக்கோணமலை.

கே: நான் ஒரு பெண்ணை காதலிகக விரும்புகிறேன் அவளிடம் சென்று எப்படி கேட்டது?

ப: நீங்கள் காதலிக்க விரும்புகிறீர்களேயன்றி இன்னும் காதலிக்கவில்லை. காதல் சம்பந்தப்படாத பல்வேறு விடயங்களை பற்றி அப்பெண்ணுடன் அடிக்கடி பேசுங்கள். பின்னர் பேச்சுக்களிடையே சந்தர்ப்பம் பார்த்து உங்கள் கருத்தைச் சூசகமாகத்தெரிவியுங்கள். அவளின் பதிலும் சூசகமாக இருந்தால அத்துறையில் நீங்கள் முனனேறலாம். வெட்டொன்று துண்டு இரண்டாக அவள் மறுத்து விட்டால்உங்களின்அந்த விருப்பத்துக்குச் சமாதி கட்டுங்கள்.

ஃ

நாகராஜன்,
தாளஙுடா.

கே: என் பேனு எழுத மறுக்கிறது. உங்கள் பேனுவை இரவல் தரமுடியுமா?

ப: என் பேனுவில் மை இல்லையே!

கே: என் பெண்டாட்டி அடங்க மாட்டேன் என்கிறுள் ஏன்?

ப: உங்களிடம் எழுத முடியாத பேனு இருப்பதுதான் காரணம்.

ஃ

சி. செல்வநாதன்,
உடப்பு.

கே: சிலருக்கு எவ்வளவு சாப்பிட்டாலும் பசி அடங்காது ஏன்?

ப: உடற் பசியைக் குறிப்பிடுகிறீர்களோ! அதனை அடக்குவதற்கு 'சாப்பாடு' மட்டும் போதாது. மன வலிமையும் வேண்டும்.

ஃ

எஸ். பி. நாதன்,
முள்ளிவளை.

கே: திருவாளர் குயுக்தி யாரே, வவுனியா எம். பி. பற்றி தங்கள அபிப்பிராயம் என்ன?

ப: அவர் சேவையில் ஆர்வம் கொண்டவர். இடமாறற விடயங்களில் அவர் செய்த சேவையை அடுத்தபொதுத் தேர்தலின் போது மக்கள் மறக்கவே மாட்டார்கள்.

ஃ

திருமதி 'ளாவ'
திருநெல்வேலி.

கே: வாரப் பத்திரிகையாகிய சுதந்திரனில் எதற்காக பொ. வைப் பற்றி ஒவ்வொரு வாரமும் எழுதுகிறீர்கள்.

ப: சுதந்திரன் தினசரி பத்திரிகையாக இல்லாதிருப்பதால்... இல்லையேல்அவர்பற்றி தினசரி எழுதுவதற்கு விஷயங்கள் குவிந்து கிடக்கின்றன.

ஃ

பழனிவேல்,
புதுவட்டககொடை.

கே: நான் ஒரு பெண்ணை காதலிபபது என வீட்டுக்குத் தெரிந்து விடுமோ என்று பயப்படுகிறேன் என்ன செய்வது?

ப: பயமாக இருக்கிறதா? காதலிக்கு பின்னுல் ஒளிநது கொள்ளுங்கள்.

ஃ

எஸ். எஸ். நாதன்
ஏருவூர்.

கே: தன்னுல் சாதிக்க முடியாததை இன்னொருவன் சாதிக்க முயலும் போது குறுக்கிட்டு இடைஞ்சல் செய்பவனுக்கு என்ன பெயா சூட்டலாம?

ப: பொன்னம்பலம் என்று பெயர் சூட்டுங்கள்.

ஃ

எஸ். நடராஜா,
நொச்சியாகம.

கே: யாழ்ப்பாண குடா நாட்டில் "சாதி வேற்றுமை ஒழிக! ஒழிக! என கூட்டஙகள் நடத்தினுர்களே சாதி வேற்றுமை இன்னும் ஒழிந்த பாடில்லையே! ஏன?

ப: ஒழிக! ஒழிக! என்று கூச்சலிடுவதால் எதையும் ஒழித்து விட முடியாது. ஆக்க பூர்வமான நடவடிக்கை மூலம் மனமாற்றம் ஏற்படுத்தினுலன்றி அது ஒழியாது. அதுவும படிப்படியாகத்தான் ஒழியும். ஒரேயடியாக ஒழியாது.

ஃ

டி. கருப்பையா,
கண்டி.

"வேலை நிறுத்தம்" என்று போர் முழக்கம் செய்த இ. தொழிலாளர் காங்கிரஸ் திடீரென அதனைக் கைவிட்டுவிட்டதே!

ப: [illegible]க்கும் வேலை நிறுத்தத்திற்கும் ஏணி வைத்தாலும் எட்டாதே!


# மெய்கண்டான் வழங்கும்

# ரூ-1000·00

## பெறுமதியான 168 பரிசுகள்!

**சித்திரகலா —** என்ற சொல்லில் சித்திரமும் கலையும் பிணைந்திருக்கின்றன. அத்தோடு மெய்கண்டான் வெளியிடும் மற்றொரு புதிய கலண்டரான சித்திரகலா பஞ்சாங்க சித்திரக் கலண்டரையும இது குறிக்கும்.

**குருபரன் —** என்ற பதத்தில் சிவா விநோதனை பரனுக்குக் குருவாகிய குமரன் என்ற பொருள் பொதிந்திருக்கிறது. அத்தோடு மெய்கண்டான வெளியிடும் மற்றொரு சிறிய சைஸ பஞ்சாங்க சித்திரக் கலண்டரையும் இது குறிக்கும்.

தமிழுலகில் முதன் முதல் சித்திர சகிதமான திருக்குறட் கலண்டரினை வெளியிட்டு வெற்றிகரமாக விற்பனை செய்து வருபவர்கள் மெய்கண்டான் ஸ்தாபனததார்.

மெய்கண்டான் திருக்குறட் கலண்டரில் சமய ஞானிகள், உத்தமப் பெரியார்கள் தெய்வப் புலவர்கள், தேசத் தியாகிகள் போன்றோரின சித்திரங்களே இடம்பெற்று வருகின்றன. அறிஞர்களின், பெரியோர்களின், பிரமுகர்களின் தரத்திற் கேற்பவே மெய்கண்டான் திருக்குறட் கலண்டர்களில் படங்கள் பொறிக்கப்படுகின்றன.

இது தவிர

முழுக்க முழுக்க, பக்கத்துக்குப் பக்கம், சித்திரங்களைக் கொண்ட (நப்பர் 2, நம்பர் 3) தனிச் சித்திரக் கலண்டர்களாக மலிவு விலையில். இரண்டு புதிய கலண்டர்களையும் இவ்வாண்டு முதல் வெளியிடுகிறுர்கள் மெய்கண்டான் ஸ்தாபனத்தார்.

விபரங்களைத் தெரிந்துகொண்டீர்கள் அல்லவா? இப்போது இங்கு தரப்படும் வினுவுக்கு ஏற்ற விடையைத் தெரிந்தனுப்பி பரிசை பெற்றுக்கொள்ளுங்கள்.

**வினு:** "சித்திர கலா" — "குருபரன்" என்ற அழகிய சொற்களை மெய்கண்டான் ஸ்தாபனத்தார் பிரயோகித்தால் அவை எதைக் குறிக்கும்?

மேலே தரப்பட்டிருக்கும் 6 விடைகளில் பொருத்தமான 2 விடைகளை ஒரு போஸ்கார்ட்டில் எழுதி அனுப்பிவையுங்கள்.

விடை 1. சித்திர கலா — ஒரு நடிகையின் பெயர்.

விடை 2. சித்திர கலா — ஒரு நடன மன்றத்தின் பெயர்.

விடை 3. சித்திர கலா — மெய்கண்டான் ஸ்தாபனம் வெளியிடும் சித்திரங்களும் கலையம்சங்களும் நிறைந்த ஒரு புதிய பெரிய 'சைஸ்' கலண்டரின் பெயர்.

விடை 4. குருபரன் — பழனி முருகனின் திருப்பெயர்.

விடை 5. குருபரன் — ஒரு தமிழ்ப் பத்திரிகையின் பெயர்.

விடை 6. குருபரன் — மெய்கண்டான் ஸ்தாபனம் வெளியிடும் சித்திரங்களும் கலையம்சங்களும் நிறைந்த ஒரு புதிய சிறிய 'சைஸ்' மலிவு விலைக் கலண்டரின் பெயர்.

## பரிசு விவரங்கள்

1-ம் பரிசு ரூ. 100-00 ரொக்கம்
2-ம் பரிசு ரூ. 50-00 ரொக்கம்
3-ம் பரிசு ரூ. 25-00 ரொக்கம்.

மற்றும் 165 பரிசுகள் ஒவ்வொன்றும் ரூபா 5/- பெறுமதியான பொருட்கள்

சரியான விடை அனுப்புபவர்களின் பெயர்கள் குலுக்கி எடுத்துப் பரிசுகள் வழங்கப்படும். பரிசு பெறுபவர் விவரம் பத்திரிகைகளில் வெளியிடப்படும்.

**மெய்கண்டான் பிரஸ் லிமிட்**
161, செட்டியார் தெரு,
தொலைபேசி: 79141 கொழும்பு — 11.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உத்தியோக மொழி சட்டத்தை அமுல் நடத்த

# தமிழ்ப் பகுதிக்கு சிங்கள 'ஊழியர்' படை!

## சனவரியில் அனுப்ப திறைசேரி நடவடிக்கை

வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு 1968 சனவரி முதல் தேதியிலிருந்து பெருந் தொகையான சிங்கள லிகிதர்களையும் அதிகாரிகளையும் அனுப்பி வைக்க திறைசேரி நடவடிக்கை யெடுத்துவருவதாக தெரிகிறது. உத்தியோக மொழிச் சட்டத்தை தீவிரமாக அமுல் நடத்துவதற்காகவே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் கூறப்படுகிறது.

வடக்கு, கிழக்கு மாகாணங்களிலுள்ள எல்லா அரசாங்க திணைக்களங்களிலும் 1968 சனவரி முதலாந் தேதி முதல் உத்தியோக மொழிச் சட்டத்தை தீவிரமாக அமுல் நடத்த திறைசேரி நடவடிக்கை யெடுத்து வருவதாகத் தெரிகிறது. இதற்காக பெருந் தொகையான ஊழியர்களை வடக்கு, கிழக்குக்கு அனுப்பி வைக்க திறைசேரி நடவடிக்கை யெடுத்து வருகிறது.


வடக்கு, கிழக்கிலுள்ள அரசாங்க திணைக்களங்களில் உத்தியோக மொழிச் சட்டத்தை திறமையாக அமுல் நடத்துவதற்கு யார் யாரை அனுப்பலாம் என்பதை தெரிவு செய்து அறிவிக்கும்படி சகல திணைக்களங்களின் தலைவர்களுக்கும் திறைசேரி உத்தரவிட்டுள்ளதாக அறியப்படுகிறது.

திறைசேரியின் உத்தரவின்படி திணைக்களங்களின் தலைவர்கள் தத்தம் திணைக்களங்களிலிருந்து வடக்கு கிழக்குக்கு அனுப்பக்கூடிய தகுதிவாய்ந்த சிங்கள ஊழியர்களின் பட்டியலைத் தயாரிப்பதில் இப்போது ஈடுபட்டிருக்கிறார்களென்று தெரிகிறது.

உத்தியோகச் சட்டத்தை அமுல் நடத்துவதற்காக வடக்கு கிழக்குக்கு அனுப்பப்படும் சிங்கள லிகிதர்களுக்குள்ள சிங்கள அறிவை ஆராய்வதுடன் அவர்களுக்கு தமிழ் மொழியிலும் அறிவு உண்டா என்பதும் கவனிக்கப்படுகிறதாம்.

வடக்கு, கிழக்குக்கு அனுப்பப்படவேண்டியவர்களின் பெயர்ப் பட்டியல் திணைக்களத் தலைவர்களால், திறைசேரிக்கு சமர்ப்பிக்கப்பட்டதும் திறைசேரி மேற்கொண்டு நடவடிக்கை யெடுக்குமென்று எதிர்பார்க்கப்படுகிறது;

அடுத்த ஆண்டு ஆரம்பத்தில் தமிழ்ப்பகுதியிலுள்ள சகல அரசாங்க திணைக்களங்களுக்கும் சிங்கள ஊழியர்கள் ஒரு தொகையினர் அனுப்பப்படுவர் என்று திறைசேரி வட்டாரங்களில் கூறப்படுகிறது.



## இரட்சிப்பீர் யேசுபாலா!

—"வன்னியூர்க் கவிராயர்"—

அன்பறிவு எனுமிரண்டு கருமை — வெண்மை
யாலமைந்து நரர்வாழ்வுக் குதவும் 'கண்' ணில்
அன்பான 'வெண்விழி' புற் றுயழிந்து
அறிவென்ற 'கறுப்புவிழி' பிருந்த போதும்
அன்பு 'வெள்ளைவிழி' இயக்க மற்றதாலே
அறிவாகும் 'கரியவிழி' பார்வையின்றி
மன்பதைகள் படுந்துன்ப விருளைப் போக்கி
வளர் அன்பின் விழிதிறப்பீர் தேவபாலா!

அறிவுமித மாய்வளர்ந்தும் அன்பு முற்றும்
அற்றநிலை... மண்ணாசைப் பதவிப் பித்தர்
நெறிதவறிச் சந்தர்ப்ப வசத்தால் மானர்
நிர்மகிமையைக் கொன்று யுத்த முனையில் நின்று
சிறிதெனினுங் கருணையின்றி புவிநிற் தத்தம்
சித்தாந்தந் திணிக்க 'அணு' ஆயுதத்தால்
குறிவைக்குங் கொடுமைகொன்று அன்பைத்
தேக்கிக்
குவலயத்தை இரட்சிப்பீர் யேசுபாலா!

மற்றோரின் சமாதியிலே தமது வாழ்வை
வளமாக வளர்க்க வெண்ணும் வஞ்சநெஞ்சர்
அற்பதன மாய்க் 'குறுக்குவழி' கள் தேர்ந்து
அரசியற்கொள்கை, கட்சி, மொழி, மதங்கள்
நற் பற்றை வெறியுணர்ச்சி யாக மாற்றி
நாருக்குட் பரஸ்பரத்தாக் குத லுண்டாக்குந்
தொற்றுநோய்க் கிருமிகளிற் கொடிய சூழ்ச்சி
தொலைத்தன்பை வளர்த்திடுக யேசுபாலா!

## ஜீ. ஜீ. க்கும் சிவசிதம்பரத்துக்கும்

சுயநலம் என்ற நோய் இருக்கிறதே, அதைவிட கொடிய நோய் உலகில் வேறு இருக்க முடியாது சாதாரண குடும்பப் பிரச்சினையிலிருந்து மிகப் பெரிய உலகப் பிரச்சினை வரை, சுயநலம் தலை யெடுத்தால் போட்டியும் பிளவும் பெருகுவதற்கு கேட்கவா வேண்டும்? உலக வல்லரசுகளிடையேயும், போட்டியும் மோதலும் அடிக்கடி ஏற்படுவதற்கு காரணமே இந்தச் சுயநலம்தான்.

அரசியல் கட்சிகளுக்கும் இதே நிலைமைதான். அரசியல் கட்சிகளுக்குள் சுய நலமிகள் தலையெடுத்தால், அக் கட்சி பிளவுபட்டு பூண்டோடு அழிய வேண்டியதுதான். இதற்கு பல உதாரணங்கள் உள்ளன.

தமிழகத்தில் திராவிடக் கழகம் இரண்டாக உடைந்தது ஏன்? பெரியாரின் சுயநலம்!

இதே போல இலங்கையில் 1949-ல் தமிழ் காங்கிரஸ் பிளவுண்டதேன்? தமிழ் காங்கிரஸ் தலைவரின் சுயநலமே அதற்கும் காரணம்.

தமிழ் காங்கிரஸ் கட்சியில் தலைவரின் சுயநலப் போக்கு இன்னும் அழிந்தபாடில்லை. இதனால் திரு. ஜீ ஜீ பொன்னம்பலத்தை விட்டுப் பிரிந்து எங்கள் எம். பி திரு மு. சிவசிதம்பரம் தனிக்கட்சி துவக்கப் போவதாக எங்கள் தொகுதியில் பேசப்பட்டு வருகிறது.

எங்கள் எம். பிக்கும் திரு. பொன்னம்பலத்துக்குமிடையே அவ்வளவு பெரும் பிளவு எப்படி ஏற்பட்டது என்கிறீர்களா? அது ஒரு பெரிய கதை. எங்கள் தொகுதியில் அநேகருக்கு அது தெரிந்த பழைய கதை: இருந்த போதிலும், உங்களுக்கும் தெரியவேண்டாமா?

எங்கள் தொகுதி எம். பி. திரு. மு சிவசிதம்பரத்துக்கும், திரு. பொன்னம்பலத்துக்குமிடையே பிளவு புகைவிட்டது இன்று நேற்றல்ல; ஏறத்தாழ 10 ஆண்டுகளுக்கு முன்பு

**கரவையூரான்**

என்று சொன்னால் மயக்கம் போட்டு விழுந்துவிடாதீர்கள்.

உங்கள் சிந்தனைகளை 1956-ம் ஆண்டுக்கு பின்னோக்கி பறக்க விடுங்கள். அப்பொழுதுதான் பிளவு பிறந்த கதையை உங்களால் சரியாகப் புரிந்து கொள்ள முடியும்.

1956-ம் ஆண்டுப் பொதுத் தேர்தலை மறந்திருக்க மாட்டீர்கள்! எப்படி அதை மறக்க முடியும்? தமிழ் இனத்தை விற்றுப் பிழைத்துவந்த எட்டப்பர்களையும், அடிப்படி முன்னணிகளையும், துரோகிகளையும் தூக்கியெறிந்து, ஒரு கட்சியின் கீழ், ஒரு தலைவனின் கீழ், ஒரு கொள்கையின் கீழ் தமிழ்மக்களை அணி வகுக்கச் செய்த தேர்தலல்லவா அது? அந்தத் தேர்தலின் பின்புதான், ஈழத் தமிழினத்தின் வலியும் பொலிவும், உலகுக்கு தெரியவந்ததாயிற்றே!

அந்தத் தேர்தலில் தமிழ் காங்கிரஸ் தலைவர் திரு.பொன்னம்பலம் யாழ்ப்பாணத் தொகுதியில் போட்டியிட்டார். தமிழ் காங்கிரஸ் வேட்பாளராக திரு. சிவசிதம்பரம் பருத்தித்துறை தொகுதியில் போட்டியிட்டார்.

பருத்தித்துறைத் தொகுதியில் திரு. சிவசிதம்பரத்துடன் கம்யூனிஸ்ட் சார்பில் திரு. பி. கந்தையா, தமிழரசு சார்பில் திரு. க துரைரத்தினம், ஆகியோர் போட்டியிட்டனர்.

யாழ்ப்பாணத்தில் திரு. பொன்னம்பலத்தை எதிர்த்து டாக்டர் நாகநாதன், கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் திரு. கார்த்திகேசன், சமசமாஜ கட்சி சார்பில் திரு. விசுவநாதன் ஆகியோர் போட்டியிட்டனர்.

திரு. பொன்னம்பலமும் திரு சிவசிதம்பரமும் தமிழ் காங்கிரஸ் சார்பில் போட்டியிடுவதாக அதிகார பூர்வமாக அறிவிக்கப்பட்டிருந்தபோதிலும், அதுபற்றி எங்கள் ஊர் மக்களுக்கு உள்ளூர சந்தேக

(14-ம் பக்கம் பார்க்க)

## பிளவு பிறந்த வரலாறு இதோ!

## வெங்காய வழக்கும் பொ. கட்சி கூட்டமும்

அண்மையில் முல்லைத்தீவில் ஒரு தமிழ் காங்கிரஸ் கூட்டம் நடந்ததல்லவா? அக்கூட்டம் ஒழுங்கு செய்யப்பட்ட 'முறையை' ஒரு முல்லைத்தீவு வாசி நமது நிருபரிடம் விபரித்தார். அவர் கூறியதாவது:—

'முல்லைத்தீவில் தமிழ் காங்கிரஸ் சார்பில் நடைபெற்ற கூட்டம் திடுதிப்பென்று கூட்டப்பட்டது. தமிழ்காங்கிரஸ் தலைவர், வேறொரு வழக்கொன்றில் பேசுவதற்காக வந்த இடத்தில், அவரை அழைத்து ஒரு கூட்டத்தில் பேசவைத்துவிடவேண்டுமென்று எங்கள் எம். பி. எடுத்த அவசர முயற்சியைத்தான் கூட்டம் நடைபெற்றது.

இதற்குமுன் கடைசியாக தமிழ்காங்கிரஸ் கூட்டம் இவ்வாண்டுத் தொடக்கத்தில் நடைபெற்றது. அதுகூட முன் கூட்டி ஒழுங்கு செய்யப்பட்ட ஒருகூட்டம் அல்ல, வெங்காய வழக்கொன்றில் பேசுவதற்காக வந்திருந்த தமிழ்காங்கிரஸ் தலைவர் அந்தச் சாட்டுடன் முல்லைத்தீவில் ஒரு கூட்டம் நடத்தினார். அதற்குப்பின் இப்போதுதான் பொ. கட்சி கூட்டம் எங்களூரில் நடந்திருக்கிறது.

இனியும் ஏதாவது வழக்குக்கு தமிழ்காங்கிரஸ் தலைவர் எங்களூர்ப்பக்கம் வந்தால், அப்பொழுது அங்கேயொரு தமிழ்காங்கிரஸ் கூட்டம் நடக்கும் என்பதை எதிர்பார்க்கலாம்.'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நடிகர்களுக்கு ஜெமினி வேண்டுகோள்

# மக்கள் திலகம் எம்.ஜி.ஆரை. பின்பற்றி வாழுங்கள்!

"நடிகர்கள் அரசியலில் ஈடுபடுவதில் எந்தத் தவறும் இருக்க முடியாது. இன்றைய முன்னணி நடிகர்கள் அத்தனை பேருக்கும் வழிகாட்டியாக மக்கள் திலகர் எம். ஜி. ஆர். விளங்குகிறார். ஆகவே, கலையுலகிலும் சரி, பொது வாழ்க்கையிலும் சரி, சொந்த வாழ்க்கையிலும் சரி, நடிகர்கள் எம். ஜி. ஆரைப் பின்பற்றி வாழ வேண்டும்" இவ்வாறு பெங்களூரில் தமக்களிக்கப்பட்ட ஒரு வரவேற்பில் பேசிய ஜெமினி கணேசன் கூறினார்.



பெங்களூர் எம். ஜி. ஆர். மன்றம் ஜெமினி கணேசனுக்கு இவ்வரவேற்பை அளித்தது. ஜெமினி கணேசன் மேலும் பேசுகையில் கூறியதாவது:

### பின்பற்றுங்கள்

நடிகர்கள் அரசியலில் ஈடுபடுவது தவறு என்று பலர் கூறுகிறார்கள். ஆனால், நடிகர்கள் அரசியலில் ஈடுபடுவது தவறு அல்ல.

நடிகர் எம். ஜி. ராமச்சந்திரன் இன்று பல லட்சம் பேர்களின் இதயத்தில் நடிகராகவும், அரசியல் தலைவராகவும் இடம் பெற்று இருக்கிறார். சினிமாத் துறையிலும் அரசியலிலும், சொந்த வாழ்க்கையிலும் அவரை நடிகர்கள் பின்பற்றி நடக்க வேண்டும்.

### சிண்டு முடிகிறார்கள்

நடிகர்களாகிய நாங்கள் சகோதரர்களைப் போல பழகுகிறோம். நடிகர்களுக்குள் தகராறு இருக்கிறது என்று சில வேண்டாதவர்கள் ரசிகர்களுக்கு இடையே சிண்டு முடிந்துவிட்டு சண்டை ஏற்படுத்துகிறார்கள். இவர்களைப் பற்றி ரசிகர்கள் எச்சரிக்கையாக இருக்கவேண்டும்.



கண்கண்ட தெய்வம் படத்தில் பத்மினி இப்படித் தோன்றுகிறார். இப்படம் இம்மாதம் 28ந் திகதி முதல் சிலோன் என்டர்டெயின்மண்ஸ் திரைகளில் திரையிடப் படவிருக்கிறது.

# விஜயாவின் திட்டத்தில் திடீர் மாற்றம்!

நடிகை கே. ஆர். விஜயா அடுத்த (ஜனவரி) மாதம் சுவிட்சர்லாந்துக்குப் போக திட்டமிட்டு இருந்தார். அங்கு போய் சில மாதங்கள் தங்கி விட்டு திரும்பவே முடிவு செய்து இருந்தார்.

அதனால் புதுப்பட ஒப்பந்தங்களில் கையெழுத்துப் போடவும் மறுத்து வந்தார்.

இப்போது வெளிநாட்டு சுற்றுப்பயண திட்டத்தில் 'திடீர்' மாற்றம் செய்து விட்டார். வெளி நாடு செல்வதற்கு ஆன 'பாஸ்போர்ட்' புவணச்சீட்டு அனுமதி கிடைக்கவில்லை அதனால் வெளிநாட்டுப் பயணமும் ரத்து செய்யப்பட்டு விட்டது.



ஆனாலும் புதுப் படங்களில் நடிகக இட்போது ஒப்பந்தம் செய்து கொள்ளமாட்டார், சென்னையிலேயே படங்களில் நடிக்காமல் இருக்கும் காரணத்தையும் விரைவில் வெளியிடுவார் என்று தெரிகிறது.

## ஜெயலலிதா புது பங்களா வாங்கினார்

நடிகை ஜெயலலிதா சென்னையில் உள்ள சத்யநாராயணா நகரில் ஒரு பிரமாண்டமான புது பங்களா ஒன்று கட்ட ஏற்பாடு செய்கிறார். 6 கிரவுண்டு நிலத்தை அடைத்துக் கொண்டிருக்கும் விதமாக இந்த பங்களா கட்டப்படுகிறது.. அடுத்த மாதம் முதல் கட்டிட வேலை தொடங்குகிறது.

ஐதராபாத்திலுள்ள பஞ்சார் ஹில்லிலும் 3 லட்சம் ரூபாய்க்கு அழகான பங்களா ஒன்று வாங்கியிருக்கிறார்.

நடிகை சரோஜாதேவி ஒரு லட்சம் ரூபாய் மதிப்புள்ள உல்லாசக்கார் ஒன்றை புதிதாக வாங்கி இருக்கிறார்.

நடிகை தேவிகாவும் சென்னையில் பிரமாண்டமான பங்களா ஒன்று வாங்க திட்டமிட்டுள்ளார்.

## லேடீஸ் வீரமணியின் புதிய முயற்சி

புலவர் ஜே. எம். விக்டோரியா எழுதிய கப்பலோட்டிய தமிழன் வ. உ. சிதம்பரம் பிள்ளை அவர்களின் வீர வரலாற்றை வில்லுப்பாட்டாக அரங்கேற்றிய, கலைஞர் லடிஸ் வீரமணி இடபோது ஒரு புதிய முயற்சியைக் கையாளுகிறார்.

'மஹாகவி' எழுதிய 'கண்மணியாள் காதை' என்னும் கவிதை நாடகத்தை வில்லுப் பாட்டாக அரங்கேற்றுகிறார் லடிஸ்வீரமணி.

தமிழனின் சொத்தான வில் இசையில் இதுவரை சரித்திர வரலாறுகளையும், புராண இதிகாசங்களையுமே பாடிவந்தார்கள் நமது முன்னோர்கள்.

ஆனால், 'மஹாகவி' எழுதிய 'கண்மணியாள் காதை' முழுக்க முழுக்க சமுதாய ஊழல்களைச்சாடும் ஒரு சமூகக் கதையாகும்.

அரசாங்கம் உணவு உற்பத்தியைப் பெருக்குவதற்காக, கோடிக்கணக்கான ரூபாய்களை செலவழித்துவரும் இத்தருணத்தில் பொருத்தமான ஒரு கதையை அதுவும் சாதாரண மக்களும் விரும்பிக் கேட்கும் வில்லுப்பாட்டாக இசைப்பது தற்சமயம் நம் நாட்டிற்குத் தேவையான ஒருஅம்சமாகும்.

எதிர்வரும் 23-12-1967 போயா தினத்தில் கமலா [illegible] ஜே. எம். விக்டோரியா தலை [illegible] அரங்கேற்றும் கண்மணியாள்காதை வில்லுப்பாட்டு'



கலைஞர் கருணாநிதியின் 'பறக்க முடியுமா?' திரைப்படத்தில் தேவிகா, காஞ்சனா. இப்படம் சினிமாஸ் திரைகளில் இம்மாதம் 28-ம் திகதி திரையிடப்படவிருக்கிறது.

திரை விமர்சனம்

# மேஜர் சந்திரகாந்த்

தமிழில் புதுமையான கதையம்சம் கொண்ட படங்களைத் தயாரிக்க முடியாதா? ஏன் முடியாது என்று சவால் விட்டிருக்கிறார் திரு. கே. பாலசந்தர் தமது 'மேஜர் சந்திரகாந்த்' மூலம்.

மேஜர் சந்திரகாந்த் தமிழகத்தில் நாடகமாக நடத்தப்பட்டு சக்கைப்போடு போட்டதென்பதை பலர் அறிவர். அதுவே திரைப்படமாக வெளிவந்துள்ளது.

தங்கையை கெடுத்தவனை அண்ணன் கொலை செய்கிறான். கொலை செய்யப்பட்டவனின் தந்தை கொலைகாரனுக்கு — தன் மகனைக் கொன்றவன் என்பதை அறிந்த பின்பும் - ஆதரவு அளிக்கிறார். பொலீஸ் அதிகாரியான அவரது இன்னொரு மகனே அவரைக் கைது செய்கிறான்.

கடமையுணர்ச்சி பாச உணர்ச்சி இரண்டும் பின்னிப் பிணைய கதை உருவாக்கப்பட்டிருக்கிறது.

படத்துக்கு மேஜர் சந்திரகாந்த் என்பதைவிட மேஜர் சுந்தரராஜன் என்று பெயரிட்டிருக்கலாம். அந்த அளவுக்கு மேஜர் பாத்திரமாகவே மாறிவிட்டிருக்கிறார் சுந்தரராஜன். அந்தக் கண்டிப்பும் உறுதியும் நிறைந்த குரலும், கட்டுப்பாடும்... அப்பப்பா, எத்தனை முறை பார்த்தாலும் சலிக்காது. மேஜர் பாத்திரத்தை சுந்தரராஜனைவிட வேறு எவரும் சிறப்பாகச் செய்திருக்க முடியாதென்று துணிந்து கூறலாம்.

நகைச்சுவை நடிப்பு மட்டும்தான் என்னால் முடியுமென்று நினைக்காதீர், குணசித்திர பாகங்களையும் என்னால் ஏற்று நடிக்க முடியுமென்று நாகேஷ் மீண்டும் முன்னணி நடிகர்களுக்கு சவால் விடுகிறார், இப்படத்தின் மூலம்.

ஜெயலலிதா ஆரம்பத்தில் சில காட்சிகளில் வந்துவிட்டு ஒரேயடியாகவே போய்விடுகிறார். சகோதரர்களாக நடித்திருக்கும் ராஜன், முத்துராமன் நடிப்பு சோபையளிக்கிறது.

பாடல்கள் இனிமை சேர்க்கின்றன. பாலசந்தரின் டைரக்ஷனில் சில இடங்களில் புதுமை மிளிர்கிறது. வசனங்கள் கருத்து செறிந்தவை.

மேஜர் சந்திரகாந்தை பார்த்து விட்டு திரும்பும்போது புதுமையான தமிழ்ப்படம் ஒன்றைப் பார்த்த திருப்தியேற்படுகிறது. இப்படம் இப்பொழுது சினிமாஸ் திரைகளில் காட்சி தருகிறது.

## 'தாழம் பூ'

கலைக் குரிசில் கலை அரங்கம் அளிக்கும் 'தாழம்பூ' என்னும் சமூக நாடகம் 7.1.1968 ஞாயிற்றுக்கிழமை மாலை பம்பலப்பிட்டி சரசுவதி மண்டபத்தில் அரங்கேற்றப்படவிருக்கிறது.

இந்நாடகத்தில், முகமெட் பாருக், ஃ. சந்தையார், எஸ். சந்திரன், பி. சுந்தையா, பி. எம். மாணிக்கம், எம். சதாசிவம் ஆகிய நடிகர்களும், எஸ். சந்தனலெட்சுமி, சூரியகுமாரி சகுந்தலா, குட்டி நடிகை செல்வராணி ஆகிய நடிகைகளும் பங்கேற்கிறார்கள்.

நாடகத்தின் கதை வசனம், பாடல்களையும், இயக்குனர் பொறுப்பையும் நீலவண்ணன் ஏற்றுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மொட்டந் தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சு போட சுபசிங்கா முயலுகிறார்

## சமஷ்டியால் உருசியநாடு பிளவுபட்டு விட்டதா?

### கிளிநொச்சி எம்.பி. இரத்தினம் கேள்வி

'இன்று மாவட்டசபை கேட்கும் சமஷ்டிக் கட்சியினர் நாளை சமஷ்டி கேட்பார்கள், பின்னர் தனிநாடு கேட்பார்கள் என்று காலியில் ஒரு கூட்டத்தில் கட்டுக்கம பா. உ. திரு. டி. பி. சுபசிங்கா கூறியிருக்கிறார்.

உலகிலுள்ள நாடுகளிலே அரைப்பங்குக்கு மேற்பட்டவை இணைப்பாட்சி உள்ள நாடுகளாகும். இந்தநாடுகளிலேயுள்ள உறுப்பாட்சியினர் தனிநாடு கேட்கின்றார்களா? இன்றும் ஒன்றுக்கு மேற்பட்ட இனங்கள் வாழும் நாடுகள் சமஷ்டி ஆட்சியினையே நல்லாட்சிமுறையெனக் கொள்வதனை அவர் அறியாமற் பேசுவதன் மர்மம் என்ன?

திரு. சுபசிங்கா இலங்கையின் தூதராக கடமையாற்றிய ரஷ்யநாட்டில் இச்சமஷ்டி ஆட்சி முறை அங்குள்ள சிறுபான்மை இனங்கள் சமத்துவத்துடனும் ஒற்றுமையுடனும்வாழ வழி வகுத்துள்ள தென்பதை நேரில் அறிந்த அவர் இப்படி பேசலாமா? திரு. சுபசிங்கா யாரை ஏமாற்றப் பார்க்கிறார்?'

இவ்வாறு குமரபுரத்தில் 18-12-67ல் நடந்த கிளிநொச்சிப்பட்டினசபைத் தேர்தற் பிரசாரக் கூட்டத்தில் பேசிய கிளிநொச்சி பா. உ. பண்டிதர் கா. பொ. இரத்தினம் குறிப்பிட்டார்.

அண்மையில் காலியில் நடைபெற்ற ஒரு கூட்டத்தில்பேசிய கட்டுகம்பளை எம் பியும் சுதந்திரக்கட்சிப் பிரமுகருமான திரு டி. பி.சுபசிங்கா, 'இன்று மாவட்டசபைகேட்கும் சமஷ்டிக்கட்சியினர் நாளை சமஷ்டி கேட்பார்கள், பின்னர் தனிநாடு கேட்பர். இது திரு.இரத்தினம் எம். பியின் பேச்சிலிருந்து விளங்குகிறது' என்று குறிப்பிட்டிருந்தார்.

திரு. சுபசிங்காவின் இக் கூற்றுக்கு பதிலளிக்கும் முறையில் திரு. இரத்தினம் பேசினார்.

அவர் மேலும் கூறியதாவது:-

'கட்டுக் கம்பளைப் பா. உ. திரு. டி. பி. சுபசிங்கா நான் பாராளுமன்றத்திலே வரவு செலவுத் திட்ட விவாதத்தின் போது நிகழ்த்திய உரையினை நன்கு கேட்டிருக்கின்றார் என்பதும் அஃது அவருடைய உள்ளத்தை உறுத்தியுள்ளது என்பதும் அவர் காலியிற் பேசிய பேச்சினாலே புலனாகின்றன.

'இதுஎனக்குமிகுந்தமகிழ்ச்சியைக் கொடுக்கின்றது. தேசிய அரசாங்கத்துடன் சேர்ந்திருப்பதால் தமிழரசுக்கட்சி தன் உயிர்க் கொள்கைகளை விட்டுக் கொடுக்கவில்லை என்பதை எதிர்க்கட்சியின் தலைவரே எடுத்துரைத்திருக்கின்றார். இது நம்மிடையே உள்ள 'நரிகளுக்கு' நல்ல சவுக்கடியாகும்.

#### இவரது பண்பு இவ்வளவு தானா?

'இடதுசாரிக் கொள்கை உடையவராயிருந்த திரு சுபசிங்கா வலதுசாரிகள் இயக்கும் சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் செயலாளராக ஆகிக் குத்துக்கரணம் போட்டுள்ளார் எனினும் அரசியல் நாகரிகமும் பண்புமுள்ளவர் எனவே எண்ணிவந்தோம். ஆனால் அவருடைய காலிப் பேச்சு, அதிகாரத்தைப் பெறுதற்குப் பொய்யையும்புனைவுகளையும்கூசாது பேசும்போலிஅரசியல் வாதிகளின் திருக்கூட்டத்தைச் சேர்ந்தவராகிவிட்டார் அவர் என்பதைக் காட்டுகின்றது.

'ஆட்சியிலுள்ள அரசாங்கம் கொண்டுவருபவற்றை எதிர்க்க வேண்டுமென்பதற்காக எதிர்க்கட்சியினர் நெல்லுக்கும் புல்லுக்கும்வேறுபாடு தெரியாமற் பேசுவது இந்நாட்டிலே தமிழரின் வாழ்வை மட்டுமன்றிச் சிங்களவரின் வாழ்வையும் சிதைக்கும் என்பதைச் சுபசிங்கா போன்றவர்கள்கூட உணராமலிருப்பது கவலைக்குரியது.

#### சிங்களவர் சிந்திக்கும் திறனற்றவரா?

''இலங்கையில் இன்றுள்ள கச்சேரி ஆட்சி முறையை மாற்றவேண்டும் என்று பெரும்பாடுபட்டவர் திரு. பண்டாரநாயக்கா. இதற்கு அவர்வகுத்த வழி மாவட்டசபை அமைத்தலே. அவருடைய கட்சியின் செயலாளர் திரு, சுபசிங்கா மாவட்டசபை வேண்டாம் தமிழர்கள் தனிநாடு ''கேட்பார்கள் என்று பூச்சாண்டி காட்டுகின்றார். சிங்கள மக்கள் சிந்திக்கும் திறனற்றவர்கள் என்பதா அவர் கருத்து.

''இந்தியா, தென்னாப்பிரிக்கா முதலிய சமஷ்டி ஆட்சியுடைய நாடுகளில் மாவட்டசபை போன்ற சுய ஆட்சி நிலையங்கள் இன்றும் தொழிற்படுவதை அவர் மறுத்து அழிவழக்குப் பேச முடியுமா? தனிநாடு கேட்பதற்கும் மாவட்டசபைக்கும் எவ்வித தொடர்புமில்லை. முழங்காலுக்கும் மொட்டந் தலைக்கும் முடிச்சு போட முயலும் சுபசிங்கா வெற்றி அடைவாரா?

#### அதிகாரம் மக்களிடம் வரவேண்டும்

இன்று இலங்கையின் ஆட்சித் துறையில்உடனே செய்யப்படவேண்டிய அவசர மாற்றம் ஆட்சியிலே மக்களுக்குப் போதிய அதிகாரம் வழங்குதலே. இதனைச் செய்வதற்கு முதற்படி கச்சேரி நிருவாக முறையை மாற்றி மாவட்டச் சபை ஆட்சி முறையை நிறுவுதலேயாகும். அரசியலில் அரிவரி தெரிந்தவர்களும் உண்மையாக மக்களாட்சி மலர வேண்டுமென்று விழைபவர்களும் மாவட்டசபை நிறுவுதலை எதிர்க்கமாட்டார்கள்.

தம் கட்சிக்கு செல்வாக்குத் தேடுபவர்களும், தாம் தெரியாமற் கூறியதை விழுங்க வேண்டிவருமே என்று அவலப் படுபவர்களுமே மாரித் தவக்கைகளைப்போல மாவட்ட சபை வேண்டாம் வேண்டாம் என்று கத்துவார்கள்.

இலங்கையில் மக்களாட்சி மலர்ந்துஇனஒற்றுமைநிலைத்து ஆட்சி முறை நீதி வழி நடக்கவேண்டுமெனின் மாவட்ட சபையும் சமஷ்டி ஆட்சியும் இன்றியமையாதன.

சமத்துவ சமவாழ்வுச் சமுதாயத்துக்கு இவையே வழி கோலத்தக்கன இவை நிறுவப்படும் வரை இந்நாட்டின் அமைதியும் ஒற்றுமையும் நீதியும் நியாயமும் நிலைத்தல் முடியாதென்பதைக் கடந்த கால வரலாறு காட்டுகின்றது. வரலாறுகாட்டும் இப்பாடத்தைக் கற்றுக் கொள்ள மறுப்பவர்களுக்குரிய தனி இடம் அங்கொடையே யாகும்.

---

## 31-12-67க்கு முன்பு

## நிவாரண நிதிக்கு விண்ணப்பிக்குக!

### வெள்ள அகதிகளுக்கு அரசாங்க அதிபர் அறிவிப்பு

புயலால் பாதிக்கப்பட்ட மக்கள் பண உதவி கோரும் மனுக்களை இம்மாதம் 31ம் திகதிக்கு பிந்தாமல், அனுப்பி வைக்கவேண்டுமென யாழ். அரசாங்க அதிபர் அறிவித்துள்ளார்.

## தமிழ் பகுதிகளிலே..

கரணவாய் தெற்கில் குடியிருக்கக் காணியற்றிருக்கும் 77 குடும்பத்தினருக்கு தாளையடி குடியேற்றத் திட்டத்தில் 120 காணித்துண்டுகள் வழங்கப்படவிருக்கிறது.

வல்வெட்டித்துறை பொதுச் சொத்துக்களை இராணுவத்தினர் வேண்டுமென்றே விஷமத்துக்கு சேதப்படுத்தி வருவதாக வல்வை ப. ச. தலைவர் திரு. இரத்தினவடிவேல் பிரதமருக்கு புகார் செய்துள்ளார்.

கிளிநொச்சித் தொகுதியில் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டுள்ள விவசாயிகளுக்கு இலவச விதைநெல் வளங்கும்படி அரசாங்கத்தை திரு. இரத்தினம் எம். பி. கோரியுள்ளார்.

முள்ளிவளையிலுள்ள அரசினர் மரக்காலையில் தேவையான மரங்கள் இல்லாததால் பொதுமக்கள் அவதிப்படவேண்டியுள்ளது.

யாழ்ப்பாணக்குடா நாட்டிலேற்பட்டு வரும் நல்ல தண்ணீர்த் தட்டுப்பாட்டை தவிர்க்கும் வகையில் கிணறுகளின் உவர்த்தன்மை பற்றிய விபரங்களை சேர்க்கும் முயற்சியில் மாவட்ட காணி அதிகாரி ஈடுபட்டுள்ளார்.

காங்கேசன் துறை முகத்துக்கு 6000 தொன் அரிசியுடன் 'கெம்பரு' என்னும் கப்பல் திருப்பி விடப்பட்டுள்ளது.

குறிகாட்டுவான் பாலம், அணைமையிலேற்பட்ட பெருவெள்ளத்தினால் பெரிதும் சீர் கெட்டுள்ளது.

மண்டூரில் பிரசவ விடுதிகளும் அமைந்த புதிய வைத்தியசாலையொன்று ஒரு லட்சம் ரூபா செலவில் நிறுவப்படும். திரு. இராசமாணிக்கத்தின் முயற்சியால் விளைந்த வெற்றியிது.

மட்டுநகரில் மலேரியா பரவும் ஆபத்து ஏற்பட்டுள்ளதால் சுகாதாரப் பகுதியினர் தடுப்பு நடவடிக்கையிலீடுபட்டுள்ளனர்.

மட்டுநகர் மேயர் திரு. இராசதுரை, இலவச புத்தக விநியோகத்திற்கு 1500 ரூபாவும், சட்ட வாசிகசாலைக்கு 250ரூபாவும், மாதர் சிசு பரிபாலன சங்கத்திற்கு 600ரூபாவும்' சனசமூக நிலையத்திற்கு 500ரூபாவும், விளையாட்டுக் கழகங்களுக்கு 500 ரூபாவும் நன்கொடையாக வழங்க தீர்மானித்துள்ளார்.

மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த உயிலங்குளத்தில் பெற்றோல் ஊற்றுக்கள் இருப்பதாக கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

கல்முனை பஸ் நிலையம், சுமார் 50,000 ரூபா செலவில் விஸ்தரிக்கப்படவிருக்கிறது.

திருமலை நகர சபைத் தலைவர் இ. பொ. ச. ஏகாம்பரம் எழுதிய கடிதமொன்றில் திருமலை முற்றவெளியில் பஸ் நிலையம் அமைப்பதை அனுமதிக்க முடியாதென்று குறிப்பிட்டுள்ளார்.

நயினாதீவில் திராட்சைச் செய்கை பூரண வெற்றியளித்துள்ளது என்று நயினாதீவு விவசாய அபிவிருத்தி அதிகாரி திரு. பசுபதி கருத்து வெளியிட்டார்.

கல்முனையில் லக் சல ஒன்றைத் திறக்க வேண்டுமென்று கல்முனை இஸ்லாமிய இளைஞர் சங்கம், உள் நாட்டமைச்சரைக் கோரியுள்ளது.

வட்டுக்கோட்டை எம். பி. திரு. அ. அமிர்தலிங்கமும் தீவுப்பகுதி எம். பி. திரு. நவரத்தினமும் எடுத்த முயற்சியினால் காரை நகரில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு மேலதிகமாக 1 ருத்தல் மாவு இலவசமாகக் கிடைத்திருக்கிறது.

'ஆசிரியர்கள் இடமாற்றங்களில் தலையிடமாட்டோம் என்று பண்ணாகம் மெய்கண்டான் பாடசாலையில் நடைபெற்ற ஒரு கூட்டத்தில் திரு. அமிர்தலிங்கம் எம். பி. கூறினார்.

## வவுனியா தொகுதிக்கு மந்திரி திரு விஜயம்

வெள்ளத்தாலும் புயலாலும் பாதிக்கப்பட்ட வவுனியா தொகுதி மக்களாகிய எங்களுக்கு உதவுவார் யாருமில்லையா என்ற வவுனியா மக்களுக்கு 'அஞ்சாதீர், நான் இருக்கிறேன்' என்று அபயமளித்துள்ளார் அமைச்சர் மு. திருச்செல்வம்.

நெடுங்கேணி தமிழரசுக் கட்சி கிளைத்தலைவர் திரு. மார்க்குப்பிள்ளையும் செயலாளர் திரு. பொன்கலனும் இம்மாதம் 21ந் திகதி உள்ளூராட்சி அமைச்சரைச் சந்தித்து வவுனியா தொகுதியில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களை யாரும் கவனிக்கவில்லையென்றும், அமைச்சர் நேரில்விஜயம்செய்துநிவாரண வேலைகளை துரிதப்படுத்தவேண்டும் எனக் கேட்டுக் கொண்டனர். இதை ஏற்றுக்கொண்ட அமைச்சர் இவ்வார முடிவில் வவுனியா தொகுதிக்கு ஒரு சுற்றுப் பயணத்தை மேற்கொள்வாரென்று தெரிகிறது.

பாதிக்கப்பட்ட இடங்களைப் பார்வையிட்டு வவுனியா மக்களுக்கு நிவாரணம் கிடைக்க அமைச்சர்நடவடிக்கையெடுக்க இருக்கிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இவ்வாரச் சிறுகதை

# விடிவு காலம்

"மருதூர் வாணன்"

இடி மின்னல் புயல் இவைகளுக்கு உஷார் கொடுப்பதாக வானம் மழையைப் பொழிந்துகொண்டிருந்தது.

''நாய், செய்த்தான், இவன் தொலைஞ்சு போனா எனக்கென்ன நசிட்டம். இவனு எவக்கிப் புள்ளை? - இவன் மறியல்லேரிந்து வாறத்துக்கிடையில, என்ர புள்ளக் குஞ்சியனுக்குக் கலியாணம் முடிச்சிவெக்கத்தான் போறன். இனித்தான் எங்களுக்கு நல்ல காலம் வரப்போகுது'' என்று ஆக்ரோசமாக ஜபித்துக்கொண்டு, நவியான் குளக்கட்டினுல் விறு விறென்று நடந்துகொண்டிருந்தார். ஒரு கையிற் குடையும் மறு கையிற் காகிதமும், முகையதீன் பிச்சைப் போடியாரைப் பார்த்துச் சிரிப்பது போன்ற நிலையிலிருந்தன. போடியாரின் உள்ளம் பொருமுவதும் உடல் சிலிர்ப்பதும் மீசை துடிப்பதும் அவருடைய விடிவு காலத்தை நிர்ணயிப்பதாயமைந்தன. சறுவாலை அரைத்தொடை தெரியும்படி சாறினைக் கொடுக்குக் கட்டி, பச்சைத் துப்பட்டாவைப் போர்த்தி, மழையின் கோர உறுமலுக்குப் பாதுகாத்துக்கொண்ட நாகுக்கான நடைக்கேற்ப மிதிதடி ''சடக் சடக்''கெனத் தாளம் போட்டுக்கொண்டிருந்தன. போடியாரின் நடை வேகத்தில் நவியான்குளக்கட்டினைப் பெயர்த்தோடும் பால்நீரரிப்பைத் திவலை பறக்கச் செய்துகொண்டிருந்தன.

## 2

பச்சைப் பசேலென நன் நன்செய் நிலங்கள் துறைநீலாவணை உப்புத்தண்ணிக்கட்டு வரை நீண்டு கிடந்தன. மேற்கே உலைமுடிமலைச் சாரலில் மேகங்கள் சிறுரச்சியங்கள் அமைத்துக்கொண்டிருந்தன. அந்த வயல் வெளியின் கிழக்கே நவியான் குளக்கட்டின் ஆத்தி மேட்டினை மருத மரங்கள் குட்டி ராசசியமாக்கிக்கொண்டிருந்தன. இவைகளனைத்தையும் சுவீகரிப்பதாக குளத்தோரத்தில் ஒரு மாடி மாளிகை, - அந்த மாளிகையின் அரசியாக சைத்தூனிஸ்ஸா ஜனித்துக்கொண்டிருக்கிருள்.

புது வெள்ள வரவில் 'பறி' கட்டி மீன் பிடித்துவரச் சென்றுவிட்டாள் சைத்தூனிஸ்ஸாவின் தாயார் லைலத்தும்மா. மாலை நேரமாகிக்கொண்டிருந்தது. சைத்தூனின் உள்ளத்திற் பயம் அரும்பிக்கொண்டிருந்தது. அக்கம் பக்கம் அண்டை அயல் வீடோ இல்லை. அதனுற்ருன் சைத்தூன் பயந்தாங்கொள்ளியாக இருக்கிருள் போலும்?

சீறும் புயலின் உறுமலுக்குப் பயந்து மருதங்கனிகள் ''பொத் பொத்''தென சருகுகளின் மேல் பயங்கரமாக விழுந்துகொண்டிருந்தன. இதைக் கேட்டதும் ''பேயோ புலியோ''வென, கிலி பிடித்துக்கொண்டிருந்தாள் சைத்தூனிஸ்ஸா. ''ஊர், கிர் —ட், பிட், குர்...கிர்'' ரென்று மாரித்தவளைகளின் பயங்கர ஊழை வேறு. சைத்தூனைப் பயம் அப்பிக்கொண்டிருந்தபோதுதான் ''பவீர்...ர்...''ரென்று மருதங்கிளை ஒன்று வீட்டுக் கூரையில் 'மள மள'வென விழுந்து ஓடுகளை நொருக்கியது கேட்டதும் ''ஊம்...மோ... வ்... பேய்......ஈ...'' என்று வீவிட்டுக் குளறினாள்.

அந்த வழியினுல் வந்துகொண்டிருந்த அகமது லெப்பையின் காதுகளில் அபயக்குரல் கணீரென்று கேட்டது. என்னமோ ஏதோவென்று தலை தெறிக்க அங்கு ஓடினுன்.

''என்னே... புள்ளே... என்னது...?'' என்று வெட்கச் சுழியோடியவாறு அவளிடம் வினவிக்கொண்டு துடியாய்த் துடித்தான்.

''ஓ... ஒண்டுமில்லே, வா... வாங்க மச்சானிருக்க, வாங்கன்'' என்று நாணித் தவித்தவளாக 'வீச்'செனு ஓடோடிச் சென்று கதவருகில் தலை மறைவாக நின்ருள்.

''ஒண்டுமில்லாட்டி, ஏன் கினி கத்தினியள்? ஒங்கட உம்மா எங்கே பெய்த்தா?'' என்று கூச்சமின்றி அவளருகினிற் சென்ருன்.

''நான்... வந்து... மரம் முறிஞ்சி கூரவே உழுந்து... பயத்திலே...'' என்று பச்சாத்தாபமும் பசபசப்புமாக நாத்தடுமாறினுள் சைத்தூன்.

அவள் என்ன கூறினுள் என்பதைப் புரிந்துகொண்டானே என்னவோ, ''ஹா... ஹா...''வென வாய் கிழிய கிரி கிரியென்று சிரித்தான். பதிலுக்கு அவளும் 'சரசர'வென்று சிரித்துக்கொண்டு, சட்டிலை இழுத்துப் போட்டு, ''இப்பிடி இரியுங்க மச்சான், சாக்குக் கட்டிலலேய்''.

'வேணும்கிளி, ஒருதரும் இல்லாத நேரத்திலே வந்திட்டன். நாவிஞ்சே ஒங்களோடே தனியாப் பேசிக்கி நிக்கத்தே ஆராலும் கண்டா ஏதாச்சும் நெனச்சிக்கிவாங்க கிளி. இது பொல்லாத காலம். நாம இப்படிச் சேந்து கதச்சதே என்ர தம்பி, மாஸ்தர் கேள்விப்பட்டனெண்டா, என்னே அடிச்சிச் சாகவெச்சிப் போட்டிருவான'' என்று பயத்தினுல் மெல்ல நழுவிக்கொண்டிருந்தான்.

''ஹும், நில் லுங்க மச்சான் என்ர மச்சான் இஞ்சே என்னோடே பேசினு அவருக்கு என்ன? என்ர மச்சானுக்கடிச்சிச் சாகவெக்க அவனுக்கென்ன தகுரியம்??? அவர்ர கைய முறிச்சுப்போட்டிருவன்'' என்று எகிறிப் பேசினுள் சைத்தூனிஸ்ஸா.

''ம் போதும் புள்ளே, போதும். அந்தப் பொடியனே அப்பிடிச் செஞ்சிராதே?'' என்று கரகரத்தவாறு கணையான் மீன் கோவையும் பறியுமாக வந்துகொண்டிருந்த தாயாரைக் கண்டதும் அவர்கள் வெட்கித் தலைகுனிந்தனர்.

''ஏம் புள்ளே மெலச்சிப் போய் நிக்காய், மச்சானே இரிப்பாட்டி, ஒரைப்பம் கோப்பித்தண்ணி வெச்சிக் குடன். அந்தப் பொடியனேடே ஒன்னுப்பம் சம்பகம் பேசவேணும் நான்'' என்று வியாபித்தவாறு குசினிப் பக்கமாக நகர்ந்துகொண்டிருந்தாள்.

லைலத்தும்மா, நகர்ந்து சென்ற பின்தான் அந்த இளம் பயிர்களுக்கு நிம்மதி வந்தன.

## 3

காசின் முதலியார் மரண வாயிலில் ஊசாடிக்கொண்டிருக்கும்பொழுது தன் மைத்துனர் முகையதீன் பிச்சையை அழைத்தார்.

''மச்சினன், என்ர மகளைப் படிப்பிச்சி, ஒண்ட மக்களில் ஒருவனை, சைத்தூனுக்குக் கலியாணம் பண்ணி வெச்சி, காணி பூமி, மாடு ஆடு, வீடு வளவையெல்லாம் குடுத்து, நீ சாகு மட்டும் என்ர குடும்பத்தேக் காப்பாத்து'' என்று அறை கூவி ஒப்படைத் விட்டு, மரணித்துவிட்டார் காசின்முதலியார்.

முகையதீன் பிச்சையின் தங்கை, லைலத்தும்மாவைக் காசின் முதலியார் கலியாணம் முடிக்கும்பொழுது, முகையதீன் பிச்சை நன்செய் நிலங்களை ஊதியம் வரச்செய்யும் சாதாரண முல்லைக்காரனுகத் தானிருந்தான். இப்பொழுதெல்லாம், 'போடியார்' என்ற சொல்லுக்கு மருதமுனை எங்கணும் புகழ் பெற்ற புள்ளியாகிவிட்டார் முகையதீன் பிச்சை.

முகையதீன் பிச்சைப்போடியாருக்கு இரண்டு ஆண் மக்கள் உள்ளனர். அகமது லெப்பை, அப்துல் கனி. யாரேனும், அப்துல் கனியை, பிச்சப் போடியார்ர மகன் தானேரா, அப்துல் கனி, நீ?'' என்று தவறுதலாக ஏதேனும், அவன் காதில் விழும்படி சொன்னுற் போதும். ஒரு யுத்த களமானுலும் ஆகலாம். ஏன், ''அப்துல கனி'' என்ற பெயரைக் கேட்டாலே போதும். அவ்வளவுக்கு அந்தப் பெயருக்குரியவன் மருதமுனையில் அவன் மட்டுமே. ஆதலால் முகையதீன் பிச்சைப் போடியாரின் மகன், அப்துல் கனி ''யென்னும் கொடிய பெயரைக் கேட்பவர்களெல்லாம் முகங்களைச் சுழியோடிக் கொண்டிருப்பர். இவைகளுக்குக்காரணம் தீயோனுகக் காடைத்தனம் புரிந்து வந்தான் அந்தக் காமவெறி கொண்ட அரக்க குரன்.

அப்படிக் கொடிய ஜாதியாக அப்துல்கனி மாறியதற்கு ஏதுவாக இருந்தன. காசின் முதலியாரின் ஆஸ்திகள் அத்தனையும் என்று ... ... காத். முகையதீன் பிச்சையிடம் காசின் முதலியார் கொடுத்த அடைக்கல ஜீவ பூமிகளும், ஆடு, மாடு, தோட்டம் தொரவுகளும், எக்கச்சக்கமாகச் செல்வங் கொழித்துக்கொண்டிருந்தன. லைலத்தும்மா, ''இத்தா'' வீட்டைவிட்டு வெளியாவதற்குள், இருந்த சொத்துக்களையெல்லாம் மனைவி மக்களின் பேரில் ... கொண்டுவிட்டார். இவைகளை ... பதிலும் ... வதிலும் குமரிகளை வலை வீசிப் பிடிப்பதிலும், காலச்சக்கரத்தை கடத்திக்கொண்டிருந்தான் அந்தக் கொடியவன் அப்துல்கனி. இவன் பெயரிலுள்ள சொத்துக்கள் கரைந்துவிட்டன. எடுத்தான் ஒரு உபாயம்.

'சைத்தூனிஸ்ஸாவைக் கல்யாணம முடித்துக்கொண்டால், அவளின் பெயரிலுள்ள பெருவாரியான சொத்துக்களை அபேஸ் பண்ணிவிடலாம். நினைத்தபடி ஊரவர்களை ஆட்டி வதைத்துக் குமரிகளைக் கட்டியணைத்துக் குஷியாக வாழலாம் என்ற அபிலாசையில் நீண்ட பெருமூச்சு விட்டுக்கொண்டே இருந்தான் அரக்க குணமுடையோன், கனி. இதற்கு எதிர்ப்பாக இருந்தார் போடியார்.

இவன் எப்பிடியாவது பெரிய படிப்புப் படித்தால் நல்லா வந்துவிடுவான் என்ற மதியூகத்தில் பேராதனைப் பல்கலைக் கழகப் பரீட்சைக்குப் படிப்பித்தார். அதில் சித்தியடைந்து இப்போது பல்கலைக் கழகத்தில் பி. ஏ. ஆனர்சு இறுதியாண்டில் படித்துக்கொண்டிருந்தான். அப்போதுதான் அந்தப் பயங்கரக் கொலைக் கேஸில் ஈடுபட்டான்

ஒரு பிளிமத் கார் வாங்க இருபதினுயிரம் ரூபாய் தந்தால்தான, 'நான பல்கலைக் கழகத்தில் படிப்பேன்' என்று அனுங்குப் பிடியாகத் தாய் தந்தையர்களைக் கொலைசெய்யவும் முயற்சித்தான்.' எப்பிடியாவது செய்து இதோடயாவது தொலஞ்சி போகட்டு'மென்று அகமது லெப்பை வாப்பா போடியாரை வலியுறுத்தி ரூபா 20,000 கட்டுக் கட்டாக அள்ளிக் கொடுத்துவிட்டார்கள்,

விடுமுறைக்கு வந்து நின்றவன், பிளிமத் காருங் கையுமாகப் பல்கலைக் கழகஞ் சென்ருன். அங்கே அவனைப் புதுமைப் பித்தனுக மதித்துக்கொண்டனர். பெண்கள் அவனைக் காமவலை விரித்துப் போதையூட்டிஅபகரிக்கமுயன்றனர். அவைகளில் மர்ஜீனு பேரழகி மட்டுமல்ல அப்துல் கனிக்குப் பிடித்தமானவளும் அவள் மட்டுமே. அவள் மாபீர் என்னும் இளைஞனையும் கனியையும் காதலித்து வந்தாள். கனியைப் பிளிமத் காருக்காகவும், மாபீரை ஸ்கூட்டருக்காகவும், காதலிப்பது தெரிந்த அப்துல்கனி, மர்ஜூனை களவாடிச் செல்ல முனைந்தான். மாபீர் விடவில்லை. முடிவு பயங்கரக் கொலை முயற்சியாகிவிட்டது.

'எனக்கில்லாத இவள், அவனேடு செத்துத் தொலையட்டும்' என்று அசுரகதியாகத் தன் பிளிமத் காரை வேகமாக மோதிவிட்டு மர்ஜூனுவும் மாபீரும் சென்று கொண்டிருந்த ஸ்கூட்டரை மலையடிவாரத்தில் த் தூள் பொடியாக்கி விட்டான்.

வினை விதைத்தவன் பயனை விளக்கி அப்துல் கனியின் நண்பன் கலந்தர் லெப்பை முகையதீன் பிச்சைப் போடியாருக்கு எழுதினுன் நீண்ட கடிதம். அந்தக் கடிதமும் கையுமாகத்தான் போடியார் நவியான் குளக்கட்டினுல் அதிவேகமாக நடந்து கொண்டிருந்தார்.

## (4)

அகமது லெப்பையைப் புத்தி குறைந்தவன் என்று போடியாருக்குப் பெருங் கவலையாகிடமாயிருந்தது. ஏனெனில்; அனுங்குப் பிடியாக விருந்த அப்துல்கனிக்கு, 20,000 ரூபாய்க் காசுக் கட்டுக்களை அள்ளி அள்ளிக் கொடுத்தானே, பயந்து பயந்து. அப்போ இவன் புத்திசாலியா? இப்படியாக் கொத்தகளிமடையனுக்கு சைத் தூனிஸ்ஸாவைக் கல்யாணம் முடித்துக் கொடுப்பதா? என்னும் கேள்வி பிரளயமானுலும், அரசாங்கம், உச்சவரம்புச் சட்டத்தை அமுலுக்குக் கொண்டு வரப் போகிறதே, வந்து விட்டால் விவசாயஞ் செய்யாதவர்களின் காணிகளைப் பறிமுதல் செய்வார்களாமே. அப்படியானுல் சைத்தூனிஸ்ஸாவின் நூறேக்கர் காணிகளையும் பறிமுதல் செய்யுமுன், எப்பிடியாவது, அகமது லெப்பையை அவளுக்குக் கலியாணம் முடிச்சு வெச்சால், வெக்காலம், அவன் சம்மதப் படுவாளோ, இந்த மோடனை.

அகமது லெப்பையை எல்லோரும் அப்பாவி என்று மட்டும் விட்டு விடவில்லை. உலோபி, வகிலன், என்றெல்லாம், கூறிநையப் புடைப்பது, அவன் காது கேட்கச் சொன்னுல் அவ்வளவுதான். 'சோறு கறிதான் ஊட்டிலே சோக்கா, ருஜியாக் கெடக்கிதே, வீடி சுருட்டு, வெத்தில பாக்குக்கு 25ஞ்சிசதம் போதாதடாப்பா மாரே? வீணுச் செலவளிச்சா, நானே ஒரு காலம் நமக்கு நோய் நொடியெண்டு ஏதாச்சும் வந்திற்று என்ன செய்யுக. நமக்கெண்டு ஒரு பத்துநூறே இரிந்தாத்தானே ஒதவும்' என்று எதிர் வாதிகளைத் தத்துவ கோனுகத் திணறடித்துவிடுவான்.

அவனிடம் நாகரீகம் அணுகவே இல்லை. எனினும், வயல் வேலைக் காலங்களில் சறுவால் ஒய்வு நேரங்களில் மருதமுட்டுச் சாறின் வெனியன், பெருநாள் காலங்களில் சில லங்காச் சாறின்களும் சில புத்தாடைகளுந்தான் அகமது லெப்பையின் தேசிய ஆடையணிகள். விலை உயர்ந்த உடுப்புக்களே அவனது முதல் எதிரிகள், கட்டைமுடி சிலிர்த்து நிற்காமல் வட்டத் தொப்பி அணிந்து கொள்வான், இப்போது ஜின்னுத் தொப்பி அடைக்கலமே தரிசனமாகிவிட்டது. நல்ல தேகக் கட்டு நறுக்கு மீசை, குறுகுறுப் பார்வை, சிவலை நிறம், மொத்தத்தில் மூன்ருந்தர நாகரிகப் பிரஜை.

கோப்பிப் 'பீரிசை'க் கொணுந்து மச்சானிடம் நீட்டுகிருள் சைத்தூனிஸ்ஸா. யாரோ கனைக்கும் சப்தம் கேட்டு நிமிர்ந்து இருவரும் தெருவை நோக்குகின்றனர்.

'உம்மா, மாமாவும் வாருங்கோவ், இன்னொரு கோப்பி வைத்து ரோம்மா...' என்று நாணிய பொற்சிலையாக மெல்ல நகர்ந்து நிலையருகே சாய்ந்து நிற்கிருள் சைததூனிஸ்ஸா.

போடியார் கடிதமும் கையுமாக புள்ளேய் லைலத்தும்மா, என்று இடி முழக்கமாகக் கரகரத்த குரலைக் கனைத்துக் கொண்டு வருவதைக் கண்டவர்கள் அதிர்ச்சியுற்றுக்கொண்டிருந்தனர்.

'டேய் மகனும் இஞ்சானடா இரிக்காய். நல்லதாப் போச்சி. இந்தாடா கடிதம். இதைப் படிச்சிக் காட்டச் செல்லுடா சைத்தூனேடா.' என்று மகனிடம் நீட்டினுர் கடிதத்தை. அவன் பயந்தாங் கொள்ளியாக கட்டிலை விட்டு எழுந்தான். போடியார் அந்தக் கட்டிலில் அமர்ந்து கொண்டார்.

'தம்பி அனுப்பினை தா வாப்பா காயி...'

'டேய், அவனைப் பத்தி ஒரு கதையும் இனி எனக்கிட்ட கதைக்கப்படா. ஆருங் கேக்கப்படா ஒவ், கழுதேதொலஞ்சா, எனக்கென்ன, வந்த நட்டம். இனித்தாண்டா நம்மளுக்கு நல்ல காலம் வந்திரிக்கி. ஒனக்கும் செய்த்தூனுக்கும் கலியாணஞ் செஞ்சி வெக்கப் போறன்டா • அப்பான்டா நான் அள்ளித் திங்க சோறு

(14-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுதந்திரன்
SUTANTIRAN
1967 டிசம்பர் மாதம் 23-ந் தேதி
194, ஏ. பண்டாரநாயக்க வீதி, கொழும்பு 12.
தொலை பேசி எண்:—3411 த. பெ. 1183.



# இந்திய தேசிய இனங்களுக்கு சுய நிர்ணய உரிமை

இந்தியப் பாராளுமன்றத்தில் ஓர் ஆட்சிமொழித் திருத்தமசோதாவும் ஓர் ஆட்சிமொழித்தீர்மானமும் இவ்வாரம் நிறைவேறியுள்ளன இவை ராஜ்ய சபையிலும் (மூதவை) நிறைவேறுமென்பதில் ஐயமில்லை.

வரவேற்கக் கூடிய அம்சங்கள் சில அவற்றில் காணப்படுகின்றன, முக்கியமாக இரு அம்சங்களைக் குறிப்பிடலாம்.

(1) மசோதாவும் தீர்மானமும் பாரதநாட்டை இந்தி பேசும் இந்தியா, இந்தி பேசாத இந்தியா என்று இரு கூறாகப் பிரிப்பதற்கு அடிப்படையை அமைத்துள்ளன. இது முதலில் ஏற்படும் பிரிவு.

(2) 14 தனி சுதந்திர அரசாங்கங்கள் ஏற்பட்டு, சிற்சில அத்தியாவசிய அதிகாரங்களுடன் கூடிய பரவலான அடிப்படையில் ஒரு சமஷ்டி அரசு மத்தியில் தோன்றுவதற்கு இந்த மசோதாவும் தீர்மானமும் வழிவகுத்துள்ளன. இது இறுதியில் ஏற்படும் பிரிவு.

இந்தி பேசாத மாநிலங்களுக்கு ஆங்கிலம்—இந்தி பேசும் மாநிலங்களுக்கு இந்தி என்ற அடிப்படையிலே (இந்திக்கு கூடிய வசதிகள் அளிக்கப்பட்டிருந்தாலும்) இந்த மசோதா தோன்றியுள்ளது.

இந்தியை இணைப்பு மொழியாகக் கொண்ட பிரதேசம், ஆங்கிலத்தை இணைப்பு மொழியாகக் கொண்ட பிரதேசம் என்று பாரதநாடு இரு பிரதேசங்களாகச் செயல்படுவதற்கு இந்த மசோதாவும், தீர்மானமும் துணைபுரிகின்றன.

இது நாட்டிலே இரு சமஷ்டி அரசுகள் தோன்றுவதற்கு வழிகாட்டுகிறது. இந்தி பேசாத நாடுகள் ஆங்கிலத்தை இணைப்பு மொழியாகக் கொண்ட ஒரு சமஷ்டி அரசையும், இந்தி பேசும் நாடுகள் இந்தியை அரசகரும மொழியாகக் கொண்ட ஒரு சமஷ்டி அரசையும் எதிர்காலத்தில் நிறுவிக்கொள்ளலாம். இது வரவேற்கத்தக்க மாறுதலாகும்.

மத்திய அரசின் உத்தியோகங்களுக்கு ஆங்கிலம் அல்லது இந்தி, இரண்டிலொன்று தெரிந்திருக்க வேண்டுமென்று தீர்மானம் கூறுகிறது. அதாவது: இந்தி மட்டும் தெரிந்தாலே மத்திய அரசின் உத்தியோகங்களுக்குப் போதுமானதாகும்.

அதேமாதிரி, தமிழ் மட்டும் தெரிந்தால் போதுமானதென்று சட்டம் இயற்றும்படி வற்புறுத்துவதற்கு தமிழகம் நிச்சயம் முன்வரும். இதே மாதிரி அஸாமி, வங்காளி, குஜராத்தி, கன்னடம், காஷ்மீரி, மலையாளம், மராத்தி, ஒரியா, பஞ்சாபி, தெலுங்கு முதலிய மொழிகள் பேசும் மாநிலங்களும் தத்தம் மொழி மட்டும் தெரிந்தாலே மத்திய அரசின் உத்தியோகங்களுக்குப் போதுமானது என்று சட்டம் இயற்றுமாறு வற்புறுத்தும்.

இதே கருத்தைக் காங்கிரஸ் தலைவர் காமராஜரும் தெரிவித்துள்ளார். 'ஆங்கிலம் அல்லது இந்தி தெரிந்திருந்தால் மத்திய உத்தியோகங்களில் சேரலாமென்றால், இந்தி பேசாத பகுதிகளைச் சேர்ந்தவர்கள் தத்தம் சொந்த மொழியிலேயே மத்திய உத்தியோகங்களில் சேர அனுமதிக்க வேண்டும் என்ற கோரிக்கையை நாம் தடுக்க முடியாமல் போய்விடும். இதனால் நாட்டின் ஒருமைப்பாட்டுக்குத் தீங்கு விளையும்' என்று கூறுகிறார் காமராஜ்.

இத்தகைய ஒரு கிளர்ச்சிக்குத் தீர்மானத்தில் இடமளித்திருப்பது வரவேற்கத்தக்கதாகும்.

மத்திய அரசின் உத்தியோகப் பரீட்சைகள் தேசிய மொழிகள் எதில் வேண்டுமானாலும் எழுதுவதற்கு தீர்மானம் பாதை செப்பனிட்டுள்ளது.

இந்தி மூலம் பரீட்சை எழுதலாம் என்றால் இதர தேசிய மொழிகள் மூலமும் எழுதலாம் என்று இந்தி பேசாத மாநிலங்களும் கோரும் என்பதில் ஐயமில்லை.

ஒரே பரீட்சையைப் பல மொழிகளில் நடத்தும்போது அந்தந்த மொழி பேசும் தேசிய இனங்களுக்கு மத்திய அரசின் உத்தியோகங்களில் விகிதாசார பிரதிநிதித்துவம் அளிக்க வேண்டிய நிலை உருவாகும்.

அதாவது: 14 தேசிய மொழிகள் மூலம் மத்திய அரசின் அலுவல்களை நடத்த வேண்டிய நிலை தோன்றும்.

இது நடைமுறையில் சிக்கலை ஏற்படுத்தி, 14 தனிச் சுதந்திர அரசுகள் தோன்ற வழி வகுக்கும். வேறு வார்த்தைகளில் கூறின், இந்திய தேசிய இனங்கள் முழு சுயநிர்ணய உரிமையும் பெற முடியும்.

அத்தியாவசியமான சிற்சில நடவடிக்கைகளை எடுப்பதற்கு ஒரு மத்திய அரசும் இந்த 14 சுதந்திர அரசுகளுக்கும் தேவைப்படும். அது சில வரையறுக்கப்பட்ட அதிகாரங்களுடன் கூடிய ஒரு சமஷ்டி அரசாகத் திகழும். அதற்குத்தான் வழிவகுக்கின்றன இந்த மசோதாவும் தீர்மானமும்.

மத்திய அரசு உத்தியோகங்களுக்கு இந்தி அல்லது ஆங்கிலம் கட்டாயமாக்கப்பட்டிருப்பதால் இந்தி பேசாத மாநிலங்களில் இப்போது இந்தி படிப்பவர்கள் கூட இனி இந்தியைப் படிப்பது அவசியமில்லை என்று கருதுவார்கள் என்று கூறுகிறார் காமராஜ்.

ஆம், தமிழகத்திலும் தற்போது இந்தி படித்துக் கொண்டிருப்பவர்கள் இனி அது தேவையில்லை என்று கருதுவார்கள். மசோதாவால் விளையும் மற்றொரு நன்மை இது:

தமிழக மக்கள் இனிமேல் ஆங்கிலம் கற்பதில் தீவிரக் காட்டக் கூடும். இலங்கையில் தாய் மொழியைப் போதனா மொழியாக்க மசோதா வந்துள்ளது. ஆனால் தமிழகத்திலோ தாய்மொழியைப் போதனா மொழியாக்குவதற்கு இன்னும் தயங்குகிறார்கள். ஆங்கிலம் பெற்றுள்ள புதிய அந்தஸ்து [illegible] நிலைபூருக இருந்து விடக் கூடாது. இவ்விடயத்தில் தமிழ அரசு விழிப்புடன் இருத்தல் வேண்டும்.

# வேண்டாம் இந்த விபரீத நடவடிக்கை

1968 சனவரி முதல் உத்தியோக மொழிச் சட்டத்தை சீராக அமுல் நடத்தும் பொருட்டு ஒரு தொகையான சிங்கள ஊழியர்களை வடக்கு, கிழக்குப் பகுதிகளுக்கு அனுப்புவதற்கு திறைசேரி நடவடிக்கை யெடுத்து வருவதாக ஒரு செய்தி கூறுகிறது.

வவுனியாத் தொகுதிக்குள் திட்டமிட்ட சிங்களக்குடியேற்றத்தை நடத்தி தமிழ்க் கிராமங்களை சிங்கள கிராமங்களாக்க காணியமைச்சு சதித்திட்டம் தீட்டி வருவதாகபிறிதொரு செய்தி கூறுகிறது.

இவ்விரு செய்திகளும் தமிழ் பேசும் மக்களுடைய உள்ளங்களிலே நாராசம் பாய்ச்சக் கூடியனவென்பதில் துளியும் ஐயமில்லை.

தமிழ்பேசும் மக்களைப் பொறுத்தவரை, வேறு எந்த உரிமைகளையும் விட, மொழியுரிமையும் பிரதேச உரிமையுமே இரு கண் போன்றவையென்பதில் யாருக்கும் கருத்து வேறுபாடு இருக்க முடியாது. தமிழ் பேசும் மக்கள் வேறு எதில் விட்டுக்கொடுத்தாலும், மொழியுரிமையிலும் பிரதேச உரிமையிலும் ஒரு போதும் விட்டுக் கொடுக்க மாட்டார்கள் என்பதை 1956 முதல் 1965 வரைஏறத்தாழ10 ஆண்டுகளாக தொடர்ந்து நடத்தி வந்த உரிமைப் போராட்டங்கள் தெற்றென உணர்த்துகின்றன.

## பழைய நினைவுகள் மறக்க வில்லை

தமிழ் பேசும் இனத்தை அடக்கிவிட அப்போதைய அரசாங்கங்கள் எத்தனை முயற்சிகள் எடுத்தன? 1956ம் ஆண்டு காலிமுகத் திடலில் சிந்திய பச்சை இரத்தம் இன்னும் காயவில்லை. 1958ம் ஆண்டு சிங்களவர்களின் கொடூர இனவெறிக்கு பலியாகிய வடுக்கள் இன்னும் ஆறவில்லை. 1961ம் ஆண்டு உலகையே திகைக்க வைத்த மாபெரும் சத்தியாக்கிரகப் போராட்டத்தின் நினைவுகள் இன்னும் அகலவில்லை. தமிழுரிமைப் போராட்டத்திலே உயிரிழந்தோர், உடமையிழந்தோர், கையிழந்தோர், கண்ணிழந்தோர் இன்னும் நம் கண்முன் நிற்கிறார்கள்.

இந்த நிலையில், வடக்குக் கிழக்குக்கு உத்தியோக மொழிச் சட்டத்தை அமுல் நடத்த சிங்கள ஊழியர்கள் அனுப்பப் படவிருக்கிறார்கள் என்ற செய்தி கடந்த கால நினைவுகளை போராட்ட எண்ணங்களை நிச்சயமாக தமிழ் உள்ளங்களிலே ஏற்படுத்துவதில் வியப்பில்லை.

## இரண்டு சட்டம்

உத்தியோக மொழிச் சட்டத்தை வடக்கு கிழக்கில் பூரணமாக அமுல் நடத்த வேண்டியதுதான். ஆனால் எந்த உத்தியோக மொழிச் சட்டம் என்பதுதான் இப்போதைய கேள்வி.

உத்தியோக மொழிச் சட்டங்கள் இரண்டு நிறைவேற்றப்பட்டிருக்கின்றன. ஒன்று 1956ம் ஆண்டின்சிங்களம் மட்டும் சட்டம். மற்றது 1958ம் ஆண்டின் தமிழ் மொழி (விசேட) விதிகள் சட்டம்.

இரண்டாவது மொழிச் சட்டத்தின் கீழ் தமிழ் பேசும் மக்களுக்கு ஓரளவு மொழியுரிமைகளை வழங்குவதற்கான விதிகளும் ஏற்கனவே தேசிய அரசாங்கத்தால் இயற்றப்பட்டு விட்டன.

ஆனால் இவ்விதிகள் சரியான முறையில் அமுல் நடத்தப்படவில்லையென்று பல காலமாகவே தமிழ் பேசும் மக்களும் அவர்தம் பிரதிநிதிகளும் முறையிட்டு வருகிறார்கள். தமிழ் மொழிச் சட்டத்தை முறையாக அமுல் நடத்துவது சம்பந்தமாக ஏற்கனவே தமிழரசுத் தலைவர்கள் பிரதமரையும் நிதியமைச்சரையும் பல முறை பேட்டி கண்டு வற்புறுத்தியிருக்கிறார்கள்; வற்புறுத்தி வருகிறார்கள்.

## வாக்குறுதிக்கு முரண்

தமிழ்மொழிச் சட்டம் பூரணமாக அமுல் நடத்தப்படுவதற்கு முன்னோடியாக விரைவில் திறைசேரியின் புதிய சுற்றறிக்கையொன்று வெளியிடப்படும் என்று அண்மையில் பாராளுமன்றத்தில் நிதியமைச்சரும் வலியுறுத்தியிருந்தார்.

ஆனால், இப்பொழுது உத்தியோக மொழிச் சட்டத்தை அமுல் நடத்துவதற்காக சிங்கள ஊழியர்களை வடக்கு, கிழக்குக்கு அனுப்ப திறைசேரி

**சுதந்திரன் அரசியல் நிருபர்**

நடவடிக்கை யெடுத்து வருவதாக வந்திருக்கும் செய்தி நிதியமைச்சரின் வாக்குறுதிக்கு நேர் முரண்பட்டதாக இருக்கிறது.

வடக்கு, கிழக்குக்கு அரசாங்கநிர்வாகங்களுக்கு தமிழே உபயோகிக்கப்படும் என்பதை அரசாங்கம் ஒப்புக் கொண்டிருக்கிறது. வடக்கு, கிழக்கில் தமிழை அரசாங்க நிர்வாகத்துக்கு பயன்படுத்த வேண்டுமானால், தமிழ்மொழிச் சட்ட விதிகளை பூரணமாக அமுல் நடத்த வேண்டும். தமிழ் மொழிச் சட்ட விதிகளை பூரணமாக அமுல் நடத்த தமிழ் ஊழியர்களையல்லவா அனுப்பி வைக்க வேண்டும்? அதை விடுத்து சிங்கள ஊழியர்களை அனுப்ப திறைசேரி நடவடிக்கை யெடுத்து வருவது ஏன்?

திறைசேரி இப்படியொரு நடவடிக்கையை எடுத்து வருவதாக இருந்தால், அது நிச்சயம் நிதியமைச்சருக்கு தெரியாமலிருக்க முடியாது. ஆகவே நிதியமைச்சரின் சம்மதத்துடன் தான் இது நடைபெறுகிறதா?

தேசிய அரசாங்கத்தின் அமைச்சர்கள் வாயளவில் பேசும் தேசியம் செயலில் காணப்பட வில்லையே? ஏற்கெனவே தமிழ் பேசும் மக்களின் அபிலாஷைகளுக்கு மாறாக, திருமலைத் துறைமுகம் தேசியமயமாக்கப்பட்டதைத் தொடர்ந்து அவர்கள் அரசாங்கத்தின் மேல் விரக்தியடைந்திருக்கிறார்கள்.

## விரும்பத்தகாத விளைவுகள் ஏற்படும்

இந்த நிலையில் வடக்கு, கிழக்கில் தமிழ் மொழிச் சட்டத்தைப் பூரணமாக அமுல் நடத்துவதை கைவிட்டு சிங்கள ஊழியர்களை பெருமளவில் அனுப்பி, சிங்களச் சட்டத்தை அங்கு அமுலாக்க முனைந்தால், தேசிய ஒற்றுமை சிதறுவதுடன், விரும்பத்தகாத விளைவுகளும் ஏற்பட்டே தீரும்.

ஆகவே இது விஷயத்தில் நிதியமைச்சரும் பிரதமரும் உடன் அக்கறையெடுக்க வேண்டுமென்று வலியுறுத்துகிறோம்.

சிங்களக் குடியேற்றம் பற்றியும் ஒன்று குறிப்பிட விரும்புகிறோம். தமிழ் பிரதேசத்தில் திட்டமிடப்பட்ட சிங்களக் குடியேற்றம் நடத்தப்படுவதை தமிழ் பேசும் மக்கள் ஒருபோதும் சகித்துக்கொள்ள மாட்டார்கள்.

தேசிய அரசாங்கம் ஏற்பட்ட பின்னர், திட்டமிடப்பட்ட சிங்களக் குடியேற்றம் பெருமளவில் குறைந்திருந்தாலும், முற்றாக நின்று போகவில்லையென்பதை நாம் இங்கு குறிப்பிடாமலிருக்கமுடியாது.

இப்பொழுது மெல்ல மெல்ல மீண்டும் சிங்களக் குடியேற்றங்கள் நடைபெற்று வருவதாகவும் புதிய குடியேற்றத் திட்டங்கள் ஆரம்பிக்கத் திட்டமிடப்படுவதாகவும் செய்திகள் கூறுகின்றன.

## சிங்களப்படை வாபஸ் ஆகட்டும்

அண்மையில் திருமலையில் சிங்கள விவசாயப் படையினரைக் கொண்டு சென்று குடியேற்றியது தேசிய அரசாங்கம். ஆனால் தமிழரசுக் கட்சியின் கடும் எதிர்ப்பினால் குடியேற்றப்பட்ட சிங்கள விவசாயப்படையினரை திரும்பப் பெற பிரதமர் உத்தரவிட்டார். பிரதமரது உத்தரவு இதுவரை அமுல் நடத்தப்படவில்லையென்றும் திருமலையிலிருந்து சிங்களக் காணிப்பட்டாளம் வாபஸ் வாங்கப்படவில்லையென்றும் தெரிகிறது. உடனடியாக பிரதமரது உத்தரவு அமுலாக்க நடவடிக்கையெடுக்கப்பட வேண்டும்.

## திருமலையில் சிங்களவருக்கு காணி

திருமலையில் பெருந்தொகையான ஏக்கர் காணிகளை பல சிங்களப் பிரமுகர்களுக்கு அரசாங்கம் வழங்கியிருக்கிறது. இக் காணிகளைப் பெற்ற சிங்களப் பிரமுகர்கள், தம் இனத்தார்களை பெருமளவில் திருமலையில் கொண்டு சென்று குடியேற்ற முயலக் கூடும். எனவே இது குறித்து தமிழரசார் மிகுந்த எச்சரிக்கையுடனிருக்க வேண்டியது அவசியமாகிறது.

அந்தந்தப் பகுதியிலுள்ள காணி அந்தந்தப் பகுதியிலுள்ள உள்ளூர் வாசிகளுக்கே அளிக்கப்பட வேண்டுமென்பதையே கொள்கையாகக் கொண்டுள்ள தேசிய அரசாங்

(9-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வவுனியாவில் சிங்களவருக்கு காணி வழங்க இரகசியத் திட்டம்!

வவுனியாத் தொகுதிக்குள் திட்டமிடப்பட்ட சிங்களக் குடியேற்றம் தொடருவதாக தெரிகிறது. வவுனியா தெற்கிலுள்ள தமிழ்ப் பிரிவில் பாவற்குளம் குடியேற்றத் திட்டத்தில் குடியேறியுள்ள சிங்களவர்களுக்கு நிலம் வழங்குவதற்கு ஒரு இரகசியத் திட்டம் உருவாகிவருவதாகத் தகவல் கிடைத்துள்ளது.

தேசிய அரசாங்கம் தோன்றியபுதில் தமிழ்ப் பிரதேசத்தில் சிங்களக் குடியேற்றத் திட்டம் ஓரளவு நிறுத்தப்பட்டிருந்த தெனினும் இன்று மெல்ல மெல்ல மீண்டும் இரகசிய முறையில் ஆங்காங்கு நடைபெற்று வருவதாக தகவல் கிடைத்துள்ளது.

திருமலையில் பெரும் தொகையான ஏக்கர் காணிகள் தங்கையில் சிங்களப் பிரமுகர்களிடையே பங்கிடப்பட்டிருக்கிறது. காணி பெற்ற சிங்களப் பிரமுகர்கள், நிலமற்ற சிங்களவர்களை தங்கள் காணிகளில் கொண்டு சென்று குடியேற்றுவார்கள் என்றும், இதனால் திருமலை பறிபோகும் ஆபத்து தோன்றியிருக்கிறதென்றும் அவதானிகள் கருதுகிறார்கள்.

வவுனியா தெற்கு தமிழ்ப் பிரிவில் உள்ள பணற்குளம் போன்றபல தமிழ்க் கிராமங்கள் சிங்களக் குடியேற்றத்தால் தற்போது சிங்களக் கிராமங்களாக மாற்றப்பட்டு வருகின்றன. இது குறித்து வவுனியா எம். பி. எவ்வித அக்கறையும் செலுத்தியதாக தெரியவில்லை.

இதற்கிடையில் வவுனியாவில் புதியதொரு சிங்களக் குடியேற்றத்துக்கு காணி அமைச்சு திட்டம் தீட்டி வருவதாக தெரியவருகிறது.

வவுனியா தெற்கு தமிழ்ப் பிரிவில் உள்ள பதவுவைத்த குளத்தை தூர்த்து வயல் காணியாக்கி, அதை பாவற்குளம் குடியேற்றத் திட்டத்தில் குடியேறியுள்ள சிங்கள விவசாயிகளுக்கு பகிர்ந்தளிப்பதற்கு திரைமறைவில் திட்டம் தீட்டப்பட்டு வருவதாகவும் அறியப்படுகிறது. இத் திட்டம் குறித்து இப்பகுதி மக்கள் பீதியடைந்துள்ளனர்.

## 1968 சனவரி 30ல்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

முடிந்துவிட்டதென்றும், அடுத்தவாரம் அரசாங்க பாராளுமன்றக் குழுக் கூட்டத்தில் மசோதா சமர்ப்பிக்கப்படலாம் என்றும் அறியப்படுகிறது.

இதற்கிடையில், மாவட்ட சபைகளை எதிர்க்கும் தமிழ் காங்கிரஸ் கட்சி எம். பிக்கள் தங்கள் எதிர்ப்புக்கு செவிசாய்க்காமல் அரசாங்கம் மாவட்ட சபை மசோதாவைக் கொண்டு வந்து நிறைவேற்றும் பட்சத்தில் அதை எதிர்த்து வாக்களிப்பதுடன் அரசாங்கத்திலிருந்து வெளியேறிவிடுவோம் என்றும் பயமுறுத்தி வருகின்றனர்.

தமிழ் காங்கிரஸ் தலைவர் திரு. பொன்னம்பலமும் மாவட்ட சபை மசோதாவை கொண்டுவந்து அரசாங்கம் நிறைவேற்றினால், தாமும் தமது கட்சியும் அரசாங்கத்தை விட்டு வெளியேறிவிடும் என்று ஐயத்துக்கிடமின்றி கூறியுள்ளார் என்று அறியப்படுகிறது.

அண்மையில் உடுப்பிட்டி எம். பி. யும் தமிழ் காங்கிரஸ் பொதுச் செயலாளருமான திரு. மு. சிவசிதம்பரம், உடுவில் எம். பி. திரு. வி. தர்மலிங்கத்துடன் பேசும்போதும் இது பற்றி பின்வருமாறு குறிப்பிட்டதாக தெரிகிறது.

"மாவட்ட சபை வந்தால் நாங்கள் அரசாங்கத்தை விட்டு விலகிவிடுவோம். மாவட்ட சபை வராவிட்டால் அரசாங்கத்திலிருந்து நீங்கள் (தமிழரசுக் கட்சியினர்) வெளியேறவேண்டியதுதான். நாங்களா, நீங்களா அரசாங்கத்திலிருந்து வெளியேறுவதென்பது 1968 சனவரி 30-க்கிடையில் தெரிந்துவிடும்" என்று கூறினாராம்.


## புதிய பாணியில் தொடர் நவீனம்!

- புதிய பாணியில் எழுதப்பட்ட தொடர் நவீனம்!!
- இலங்கையில் இதுவரை வெளிவராத புதிய கோணத்திலிருந்து படைக்கப்பட்ட மர்ம நாவல்!
- அத்தியாயத்துக்கு அத்தியாயம் திகிலும் பரபரப்புமான சம்பவங்கள் நிறைந்தது!
- ஒவ்வொரு வாரமும் அடுத்து எப்போது வரும் என்று உங்களை ஆவலுடன் காக்க வைக்கும்!

## 'இரத்தப் பிசாசு'

7-1-68 முதல் சுதந்திரனில் வாசிக்கத் தவறாதீர்கள்!


## அடுத்த இதழில்

- ★ சுதந்திரனுக்கு இ. தொ. கா. செயலாளர் திரு. செல்லச்சாமி விடுத்த எச்சரிக்கையும் அதற்கான பதிலும்!
- ★ தோட்டத் தொழிலாளர்களின் கஷ்டம் தீர நவரத்தினத்தின் நவயான திட்டம்.
- ★ வவுனியா எம். பி. யின் கையாலாகாத்தனம்!
- ★ திருமலைக்கு மாணிக்கராசா தரும் பரிசு!
- ★ இ. போ. ச. வும் 27 ம்!
- ★ விவசாயப் படை அமைப்பதில் நடந்த சூழ்ச்சி!

குறிப்பு

இலங்கைப் பிரஜாவுரிமை பெற தேவையான அத்தாட்சிப்பத்திரங்களை எப்படி பெறுவது என்ற விபரமும் அடுத்த வாரம் வெளியாகும்.

## வேண்டாம் இந்த...

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

கம், திருமலையில் வெளியூரைச் சேர்ந்த சிங்கள பிரமுகர்களுக்கு பெருந்தொகையான காணி வழங்கியுள்ள செயல் தமிழ்பேசும் மக்களுக்கு சந்தேகத்தை அளிப்பதாக இருக்கிறது.

### வவுனியாவில் புதியசதி

வவுனியாத் தொகுதியிலும், பல தமிழ் கிராமங்கள் சிங்களக் குடியேற்றத்தால் நிரப்பப்பட்டு சிங்கள கிராமங்களாகி விட்டன. இப்பொழுது வவுனியா தெற்கில் உள்ள தமிழ்ப் பிரிவில் பாவற்குளத்திலிருந்து சிங்களவர்களைக் கொண்டு சென்று குடியேற்றுவதற்கு திட்டமிடப்படுகிறதாம்.

எல்லா விஷயங்களும் அரசாங்கத்துக்கு தெரிந்தே நடக்கின்றன என்று நாம் நம்பவில்லை. காணி அமைச்சிலுள்ள வகுப்புவாத கூட்டரசாங்க ஆதரவாளர்களான அரசாங்க அதிகாரிகள் தங்கள் அதிகாரத்தைப் பயன்படுத்தி, சிங்களக் குடியேற்றத்தை ஆங்காங்கே சிறு சிறு அளவில் நடத்தி வருகிறார்கள் என்பதே நமது தீர்க்கமான முடிவு.

ஆகவே இப்பிரச்சினைகளை அரசாங்கத்துக்கு சுட்டிக்காட்டி சிங்களக் குடியேற்றத்தை [illegible] நிறுத்த தமிழரசார் உடன் முயற்சியெடுப்பார்களாக.

## ஒரு இராசிக்கு 3 நாட்களாக ஒரே பலன்

வாசகர் வட்டங்களையும் கலைவிழாக்களையும் நடத்துவதாக 'ஷோ' காட்டி விற்பனையைப் பெருக்க முயலும் 'தினபதி' என்னும் ஏடு எவ்வளவு தூரம் வாசகர்களை ஏமாற்றி வருகிறது என்பதற்கு ஒரு சின்ன உதாரணம் வேண்டுமா?

இம்மாதம் 17, 18, 19, மூன்று தினங்களிலும் ஒரே ராசபலனை வெளியிட்டு வாசகர்களை முட்டாள்களாக்கியிருக்கிறது 'தினபதி.' மூன்று நாட்களாக 12 ராசிகளுக்கும் ஒரே பலனே பிரசுரிக்கப்பட்டிருக்கிறது.

12 இராசிகளில் ஒரே ஒரு இராசிக்காவது 3 நாட்களாக பலன் மாறாமல் இருக்க முடியுமா?

சோதிடம் எழுதுபவர் எழுதியனுப்பவில்லையென்றால், அதற்கு இப்படியா வாசகர்களை ஏமாற்றுவது?

இதுதவிர எந்தச் செய்தியையும் பிந்தித் தருவது தினபதி என்பதற்கு சென்றவாரம் சில உதாரணங்களைச் சுட்டிக் காட்டியிருந்தோம். இதோ வேறு சில இவ்வாரம் தருகிறோம். பழைய செய்திகளையே தரும் ஏடு தினபதி என்பதை வாசகர்கள் கண்டு கொள்வார்களாக.

1. சென்னையில் நடைபெறும் இசைவிழாவில் ஈழத்துக் கலைஞர்கள் சிலர் கலந்து கொள்ளும் செய்தியை தினகரன் டிசம்பர் 15ந் திகதி வெளியிட்டது.

தினபதியோ இச்செய்தியை 17ம் திகதியே வெளியிட்டது.

2. பத்திரிகை நிருபர் ஒருவர் ஒரு தொழிலாளியாக மாட்டார் என்ற தொழில் நீதிமன்றத்தின் தீர்ப்பை தினகரன் 19-12-67ல் வெளியிட, அதே செய்தியை தினபதி 20-12-67ல் தான் வெளியிட்டது.

3. ஆர். ரி. டி. சில்வாமீது லஞ்சக் குற்றச்சாட்டு நிராகரிக்கப்பட்ட செய்தியையும் தினகரன் 19-12-67ல் முன்பக்கச் செய்தியாக வெளியிட்டது. இந்த பழைய செய்தி தினபதியில் 20-12-67ல் முன்பக்கச் செய்தியாக வெளிவந்திருக்கிறது.

## இ. தொ. க....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

"ரூபாய் நாணய மதிப்புக் குறைப்பைத் தொடர்ந்து அரசாங்கம் அரசாங்க ஊழியர்களுக்கும், தனியார் துறையினருக்கும் மேலதிக அலவன்ஸ் வழங்க முன் வந்தது. வர்த்தக துறையில் உள்ள தொழிலாளர்களுக்கு தினச் சம்பள உயர்வு 40 சதம் அலவன்ஸ் வழங்கிய அதே வேளையில் தோட்டத் தொழிலாளர்களுக்கு 15 சதம் மாத்திரமே வழங்க அரசாங்கம் முன் வந்தது.

இதை தோட்டத் தொழிலாளர்களுக்கு எதிராக வேண்டுமென்றே காட்டப்படும் பாரபட்ச நடவடிக்கையென்று கழகம் கருதியது.

எனவே இது பற்றி 17-10-67ல இ. தொ. கழக செயலாளர் கலிய பெருமாள். திரு எல்லாளன், திரு. சா. ஜே. வே. செல்வநாயகம் ஆகியோர் கூடி ஆலோசித்தோம். ஆலோசனை முடிவில் வர்த்தக துறையிலுள்ள தொழிலாளர்களுக்கு அரசாங்கம் அளிக்க முன் வந்திருக்கும் 40 சத அலவன்சை தோட்டத் தொழிலாளர்களுக்கும் வழங்க அரசாங்கம் முன் வர வேண்டுமென்றும், அதை வழங்கத் தவறினால், 21ம் திகதி வேலை நிறுத்தத்தில் ஈடுபடுவதென்றும் தீர்மானித்தோம். இந்த முடிவை 18ம் திகதி காலை நான் தொழில் அமைச்சருக்கு அறிவித்தேன்.

18ந் திகதி முழுவதும், மலையகத்தின் முக்கிய நகரங்களுக்கு சென்று வேலை நிறுத்தத்திற்கு தொழிலாளர்களை ஆயத்தம் செய்யும் முயற்சியில் ஈடுபட்டேன்.

19ந் திகதி மாலை 4.30க்கு நான் ஹட்டனிலிருந்த சமயம் பிரதமரிடமிருந்தும் தொழில் மைச்சரிடமிருந்தும் எனக்கு ஒரு அவசரச் செய்தி வந்தது. தோட்டத் தொழிலாளர்களுக்கு 30 சதம் அலவன்ஸ் வழங்க அரசாங்கம் முடிவு செய்துள்ளதாகவும், வேலை நிறுத்தத்தை கைவிடும்படியும் தெரிவித்தனர்.

ஆனால் இதில் கூட 10 சதம் தோட்டத் தொழிலாளர்களுக்கு குறைவாகவே வழங்கப்படுகிறது. இதை நான் பிரதமரிடம் சுட்டிக் காட்டினேன். அதற்குப் பிரதமர், தோட்டத் தொழிலாளர்களில் உழைக்கும் தொகையினர் சராசரி ஒரு குடும்பத்துக்கு 1.9 வீதம் பேர் என்றும், வர்த்தக துறையிலுள்ள தொழிலாளர்களில் உழைக்கும் தொகையினர் சராசரி ஒரு குடும்பத்துக்கு 1.4 வீதம் பேர் என்றும் சுட்டிக் காட்டினார். ஆகவே இந்த முடிவை தற்காலிகமாக ஏற்றுக் கொண்டு வேலை நிறுத்தத்தை கைவிட முடிவு செய்தோம்.

எனினும், தொடர்ந்து சம்பள உயர்வுக்கும் ஏனைய உரிமைகளுக்கும் தொடர்ந்து இ. தொ. க. போராடிவரும் என்பதை அரசாங்கத்துக்கு அறிவித்து விட்டேன்.


மில்க்வைற்
நீல சோப், பார் சோப்
சீரான சலவைக்கேற்ற சிக்கனமான சோப்




புதிய மேலுறைகளுடன் இலங்கை முழுவதிலும் விற்பனையாகிறது


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்த் தொழிலாளர்களுடன் ஆங்கிலத்தில் தொடர்பு வேண்டாம்!

## இந்திய தூதுவருக்கு இ. தொ. கா. ஆட்சேபம்

இலங்கையிலுள்ள தமிழ் பேசும் தோட்டத் தொழிலாளர்கள் கொழும்பிலுள்ள இந்தியத் தூதுவர் அலுவலகத்துடனும், கண்டியிலுள்ள கிளை அலுவலகத்துடனும் தொடர்புகொள்ள வேண்டிய நிலை ஏற்படும்போது ஆங்கில மொழியில் மட்டுமே தொடர்பு கொள்ள வேண்டிய நிர்ப்பந்த நிலை இருந்துவருகிறது.

இந்நிலையை பரிசீலனை செய்த இலங்கைத் தொழிலாளர் கழகம் மேற்படி விடயம் சம்பந்தமாக இந்தியத் தூதுவரின் அலுவலகத்துடனும், கிளை அலுவலகத்துடனும் தொடர்பு கொள்ளும் தமிழ் பேசும் சகல தோட்டத் தொழிலாளர்க்கும் தங்கள் தாய் மொழியிலேயே தொடர்பு கொள்ளக் கூடியவாறு, தமிழ் பத்திரங்களையும், படிவங்களையும் விநியோகிக்குமாறும், கடிதத் தொடர்புகள் யாவும் தமிழ் மொழியிலேயே வைத்துக்கொள்ளுமாறும் இந்தியத் தூதுவரைக் கேட்டுக்கொண்டுள்ளது.

இந்தியத் தூதரகத்துடன் தமிழில் தொடர்பு கொள்வது சம்பந்தமாக இ. தொ. கழகத்தின் காரியதரிசி திரு. செ. கவியபெருமாள் இந்தியத் தூதர் திரு. கண்டேலியாவுக்கு ஒரு கடிதம் எழுதியுள்ளார்.

அக்கடிதத்தில் குறிப்பிட்டிருப்பதாவது:—

இந்திய பிரஜா உரிமையும், போக்குவரத்து அத்தாட்சி பத்திரங்களைக் கோரியும் மனுச் செய்யும்போது ஆங்கில மொழியில் மட்டுமே நிரப்பக் கூடியதான மனுப்பத்திரங்களும், படிவங்களும் இவ்வலுவலகங்களிலிருந்து விநியோகிக்கப்படுகின்றன.

ஆங்கில மொழியில் கடிதத் தொடர்பை வைத்துக்கொள்வதன் மூலம் அநாவசியமான சிரமங்களுக்கும், பணச் செலவுகளுக்கும் ஆளாக வேண்டிய நிலை இருந்து வருகிறதென எமது கிளை அலுவலகங்கள் இயங்கிவரும் அட்டன், மஸ்கெலியா, தலவாக்கொல்லை, பசுமலை இராகலை, பதுளை பன்விலை போன்ற பகுதிகளிலிருந்து கண்டி அலுவலகத்துடன் தொடர்புகொண்டுள்ள ஏராளமானோர் எமக்கு முறைப்பாடுகள் செய்துள்ளார்கள்.

ஆங்கில மொழியின் மூலம் ஏற்படும் சிரமங்களைப் பற்றியும், கண்டி கிளை அலுவலகத்திலிருந்து சம்பந்தப்பட்டவர்களுக்கு அனுப்பி வைக்கப்படும் அஞ்சல் அட்டையில் உள்ள ஒரு சிறு விசயத்தை விளக்கிக்கொள்வதற்கும், ஒரு சிறு தகவல் பற்றிய பதில் கடிதத்தை அனுப்பி வைப்பதற்கும் பிறரின் உதவியை நாட வேண்டிய நிலை இருந்து வருவதையும், இதற்காக பணச் செலவுகளும் மற்றும் அசௌகரியங்களும் ஏற்படுவதையும் சம்பந்தப்பட்டவர்கள் சுட்டிக் காட்டியுள்ளார்கள்.

ஆகவே இந்தியத் தூதரின் அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளும் கழக உறுப்பினர்கள் சகலரையும் தமிழ் மொழியிலேயே தொடர்பு கொள்ள வைப்பதெனத் இ. தொ. க. முடிவு செய்துள்ளது.

ஆகவே தமிழ்பேசும் தோட்டத் தொழிலாளர்களுக்கு அநாவசியமான பணச் செலவும், சிரமங்களும் ஏற்படுவதைப் போக்குவதற்காக கழகத்தின் ஆலோசனையை ஏற்று அமுல் செய்யுமாறு இந்தியத் தூதரைக் கேட்டுக் கொள்கின்றோம்.

---

## "சாதிசமய வேறுபாடுகளை கைவிட்டால் தமிழ் இனம் சமஅந்தஸ்துடன் வாழும்"


### —நவரத்தினம் எம். பி.

வெள்ளத்தால் கஷ்டப்படும் மக்களுக்கு நாம் ஒவ்வொருவரும் முன்வந்து உதவவேண்டும். அத்தகைய பரஸ்பர உதவியால் கஷ்டங்களைப் போக்கிவிடலாம். இஸ்ரவேல் நாட்டு மக்களும் அப்படித்தான் வாழ்கிறார்கள். சாதி, சமய வேறுபாடுகளை நாம் கைவிட்டு விட்டால் நாம் சமத்துவ மனிதர்களாய் இப்புனித பூமியிலே வாழமுடியும். நாம் ஒவ்வொருவரும் வெள்ள அகதிகளுக்கு உதவும் முதல் மனிதராவதற்கு முயற்சிசெய்யவேண்டும்.

இவ்வாறு வெளிநாடுகளில் சுற்றுப் பிரயாணம் செய்து நாடுதிரும்பிய பாராளுமன்றப் பிரதிநிதி திரு. வி. என். நவரத்தினம் தமக்கு சாவகச்சேரியில் அளிக்கப்பட்ட ஒரு வரவேற்புக் கூட்டத்தில் பேசுகையில் கூறினார்.

இக் கூட்டத்துக்குத் திரு. மு. தா. சுப்பிரமணியம் தலைமைவகித்தார்.

வெள்ளத்தால் மக்கள்படும் துன்பங்களைக் கண்டு கலங்கிய திரு. நவரத்தினம் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டபிரதேசங்களுக்குச் சென்று மக்களை நேரில் சந்திப்பதற்குத் துடித்துக்கொண்டிருந்ததால் கூட்டத்தை விரைவில் முடிக்கும்படி கேட்டுக்கொண்டார்.



போதகர் பேசிய பின்னர் பேசிய அந்தப் பகுதி காரியாதிகாரி பேசினார். திரு. நவரத்தினம் சொல்லின் வீரராக இல்லாவிட்டாலும், செயலில் வீரன் என்றும், வெள்ள அகதிகளுக்கு நிவாரணம் அளிக்கும் பணியில் அவருடன் மனப்பூர்வமாக ஒத்துழைக்கத் தான் தயாராயிருப்பதாகவும் காரியாதிகாரி கூறினார்.

பின்னர், திரு நவரத்தினம் ஒரு போலிஸ் ஜீப் வண்டியில் ஏறி, வெள்ளத்தால் வீடுகளை இழந்த மக்கள் தஞ்சம்புகுந்துள்ள இடங்களுக்கு இரவோடு இரவாகச் சென்று மக்களை நேரில் சந்தித்து, அவர்களின் குறைகளை கேட்டறிந்து, அவர்களுக்கு ஆறுதல்கூறி, வீடு திரும்பும்போது இரவு இரண்டு மணியாகிவிட்டது.

திரு. நவரத்தினம் மார்க்கிலும், ஜெனிவாவிலும் நடைபெற்ற கருத்தரங்குகளில் பங்குகொண்டு, பின்னர் இங்கிலாந்து, ஜெர்மனி, இஸ்ரவேல் ஆகிய நாடுகளுக்கும் விஜயம் செய்துவிட்டு இம்மாதம் 8ந் திகதி தாயகம் திரும்பிய போது விமான நிலையத்தில் அவருக்கு ஒரு மாபெரும் வரவேற்பு அளிக்கப்பட்டது. ஏராளமான மக்கள் கூடி நின்று அவருக்கு வாழ்த்து கூறினர்.

விமான நிலையத்திலிருந்து வரும் வழியில் அவருக்குப் பல்வேறு இடங்களில் வரவேற்புகள் அளிக்கப்பட்டன. வெள்ளத்தால் வீடுகளை இழந்து ஒரு பள்ளிக்கூடத்தில் அடைக்கலம் புகுந்திருந்த அகதிகளும் வரவேற்பு அளித்தனர்.

அவர்களின் துன்பத்தைக் கண்டு உள்ளம்நெகிழ்ந்து கண்ணீர் விட்ட திரு. நவரத்தினம் அவர்களுக்கு ஆறுதல் கூறினார். நள்ளிரவில் அகதிகளைச் சந்தித்து திரும்பும் வழியில் இளைஞர் முன்னேற்றக் கழகமும் அவரை வரவேற்றது.

---

### நிறைவு விழா

நடைமுறைத் தமிழ் இயக்கத்தின் ஓர் ஆண்டு நிறைவு விழா இன்று (23-12-67) சனிக்கிழமை மாலை 4 மணிக்கு விவேகானந்தசபை மண்டபத்தில் திரு. ஐ. தி. சம்பந்தன் தலைமையில் நடைபெறுகிறது. விழாவில் தமிழ் மொழி வளர்ச்சியில் நமது பங்கு என்னும் பொருள்பற்றி பண்டிதர் கா. பொ. இரத்தினமும் கடமையும் உரிமையும் என்பது [illegible] சொற்பொழிவாற்றுகிறார்கள்.

---

## நவீன சந்தையால் ஏற்படும் பயன்கள்

இன்றைய முக்கிய பொருளாதாரப் பிரச்சினை சந்தைப் பிரச்சனையே. உற்பத்தி செய்த பொருட்களை உடனுக்குடன் தகுந்த விலையில் வாங்குவோனிடம் கையளிக்க முடியாமை உற்பத்தியாளன் பிரச்சனை. வாங்கச் செல்வோன் தனக்கு வேண்டிய பதம், தரம், அளவில் பெறமுடியாமை வாங்குவோனது பிரச்சனை. இவற்றிடையே கொள்ளைலாபமடிக்கும் ஒரு சிலருக்குத்தான் வாய்ப்பும் வருமானமும் ஏற்படுகிறது. இவர்கள் மக்களைத் தவறாக வழிகாட்டி கழுத்தறுக்கின்றனர்.

இந்நிலை சிறந்த சந்தை அற்ற எந்நாட்டிலும் உண்டு. இத்தீராக் குறையை யாழ் நகரில் அகற்றவே யாழ்ப்பாணத்தில் நவீன சந்தை அமைக்கப்பட்டிருக்கிறது. அதன பயனை அனுபவிக்கும் காலம் வெகு தொலைவில் இல்லை.

சந்தைவசதியே எம்மக்களிம் உற்பத்தி பெருக ஊக்குவிக்கிறது. சிறந்த மலையாளம் புகையிலை ஏற்றுமதிதான் சிலகாலத்துக்கு முன்பு யாழ்ப்பாணப் புகையிலைஉற்பத்தியைத் தூண்டிற்று.

இவ்வாறே இந்திய ஈரவெங்காயம் இறக்குமதித் தடை எம் வெங்காய சந்தையைப் பெருக்கியது.

இதேபோல யாழ்க்குடாவிலும் எமது உற்பத்திப் பொருள்கள் தெளிவான சந்தையைப் பெற வேண்டும். அப்பொழுதுதான் உற்பத்தியாளர் திட்டமிட்டு செயல் படமுடியும்.

உள்நாட்டு சந்தை நிரந்தரமானது. நம்பிக்கையானது. இதனால் உற்பத்தியைத் துணிந்து செய்ய முடியும். அதற்காக வசதிமிக்க சந்தை அவசியம். இன்று குடா நாட்டின் நாலாபக்கத்திலும் பலவகைப் பொருட்கள் அதிகம் உற்பத்தி செய்யப்படுகின்றன. இவை அவ்வப் பிரதேசச் சந்தையில் முற்றாக விலை போகாமல் மலிந்த விலையில விற்கப்படுகின்றன. விலை மலியும் போது அந்தப் பொருளை உற்பத்தி செய்வதில் மக்கள் கவனம் செலுத்துவதில்லை. அத்துடன் வேறு தொழில்களிலும் ஈடுபடுகின்றனர். அதனால் அந்தப் பொருளை உற்பத்தி செய்வதில் அதிக செலவு ஏற்படுகிறது செலவு கூடும் போது விலையும் கூடுகிறது. ஆனால் அதே வேளை குடா நாட்டின் இன்னொரு பகுதியில் அப்பொருள் தேவை கூடுகிறது. அதனால் அந்தப் பகுதியில் பொருள் தட்டுப்பாட்டால் விலை உயருகிறது இவ் விழி நிலை நீங்கி உற்பத்தியும் விலையும் பொதுமக்கள் நலனும் உயர நகரில் நவீன சந்தை அவசியம். இத் தேவையை நவீன யாழ் சந்தை பூர்த்தி செய்து தரும்.

நவீன வானொலி, மின்சாரம், அறைகள், சுகாதார வசதிகள், நிர்வாக வசதிகளோடு கூடிய சந்தை மலிவான, இலகுவான, நோய் அபாயமற்ற பொருள் கொள்வனவு விற்பனை நிலையமாக அமையும். இதனாலேயே யாழ்ப்பாண மக்களின் அடிப்படைத் தேவைகளில் சந்தையும் ஒன்று. இதைப் பெற்றுத் தருவதற்கு உள்ளூராட்சி அமைச்சர் எடுத்த முயற்சிக்கு வடமாகாண மக்கள் என்றும் கடமைப்பட்டவர்கள்.

இ. அப்பாத்துரை
சங்கானை

---

### எம். பி. உதவியை நாடவில்லை

9-12-67 ந் திகதி சுதந்திரனில் 'வவுனியா எம். பி' முகத்திற்கரி' என்னும் தலைப்பின் கீழ் வெளியான செய்தியிற் காணப்படும் ஒரு தவறை நான் உங்கள் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகின்றேன்.

ஆசிரியர் திரு. திருச்செல்வம் அவர்கள் முல்லைத்தீவு மகாவித்தியாலயத்தில்இருந்த போதும், மாற்றப்பட்ட போதும் வித்தியாலய அதிபராகக் கடமையாற்றியவன் நான். அவரை மாற்றுவதற்கு வவுனியா எம். பியின் உதவியை நான் நாடவில்லை.

பாடசாலைகளின் புனரமைப்பு வேலைகளைக் கவனிப்பதற்காக வட்டாரக் கல்வியதிகாரிக்கு உதவியாக இன்று முல்லைத்தீவிலேயே கடமையாற்றுகின்றேனேதவிர நான் இங்கிருந்து மாற்றப்படவில்லை.

இக்கடிதத்தைத் தங்கள் பத்திரிகையிற் பிரசுரிக்குமாறு வேண்டுகின்றேன்.

டி. அலோசியஸ்
முல்லைத்தீவு

---

### சங்கக் கடை ஊழியர்கள்

கூட்டுறவு ஐக்கிய பண்டசாலையானது பொது மக்கள் அனைவரதும் நன்மைக்காக நிறுவப்பட்டதாகும். எனவே அச் சொல்லுக்கமையவே, அந்நிறுவனங்களை நிருவகிப்பவர்களும், ஊழியர்களும் பலதரப்பட்ட இனத்தவர்களையும் தன்னகத்தே உடைத்தாகத் திகழவேண்டும்.

ஒரு சங்கக் கடையில் பதிவு செய்யப்பட்ட அங்கத்தவர்களின் இன விகிதாச்சார அடிப்படையில் பணிபுரிவோர் இடம் பெற வழிகோல வேண்டும். குறிப்பிட்ட [illegible] குறிப்பிட்ட சங்கக் கடையில் குறிப்பிட்ட ஒரே சாதியத்த[illegible]

(-14ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'பாலி' இனத்தவர்களின் விசித்திர வழக்கம்

## தலைவன் இறந்தால் பணியாட்கள் உயிருடன் எரிக்கப்படுவர்

இந்தோனேசியாவைச் சேர்ந்த கியாஞ்சர் பகுதியில் வாழும் பாலி இனத்தைச் சேர்ந்த மக்களது தலைவர் ஒருவர் அண்மையில் இறந்தார். அவரது சடலத்தோடு நூறு பேரை உயிருடன் எரித்தனர். எரிக்கப்பட்ட நூறு பேரும் இறந்த தலைவரின் அந்தரங்கப் பணியாட்களாக இருந்தவர்கள். இந்த வழக்கம் பாரம்பரியமாக இருந்து வருகிறது என்று பாலி இனத்தவர்கள் கூறுகின்றனர். பாலி இனத்தின் தலைவரின் இறுதிச் சடங்குக்காக அம்மக்கள் செலவிட்ட தொகை பத்து லட்சம் ரூபாய். இது தவிர சீனவிலிருந்து தருவிக்கப்பட்ட பட்டுத் துணி ஐநூறு அடி நீளம், தங்கக் கட்டிகள்—வெள்ளிக் கட்டிகள்-பித்தளைப் பாத்திரங்கள்-சந்தன மரத்தாலான கட்டில்-நாற்காலி முதலிய அலங்காரப் பொருட்கள் ஆகிய அனைத்தையும் தீயிட்டு எரித்தனர்.

இறந்துவிட்ட தங்களது தலைவரை இரண்டு ஆண்டுகள் அப்படியே வைத்துப் பாதுகாத்துப் பின்னர்தான் இறுதிச் சடங்கை நடத்தினார்கள். சந்தன மரத்தால் செய்யப்பட்ட மிகப் பெரிய காளை உருவத்திலுள்ள சவப்பெட்டியில் இறந்தவரின் சடலத்தை வைத்து, 900 சதுர அடிப் பரப்புள்ள மிகப் பெரிய சப்பரம் செய்து, அந்தச் சப்பரத்தில் சந்தன மரத்தால் செய்யப்பட்ட சவப் பெட்டியை வைத்து, ஆயிரக் கணக்கானவர்கள் தூக்கிச் சென்று சுடு காட்டுக்குக் கொண்டு போனார்கள்.

இந்தச் சவ ஊர்வலத்துக்கு முன்பு அறுபது அடி உயரமுள்ள சந்தன மரத்தால் செய்யப்பட்ட தேர் ஒன்று நவரத்தினங்களாலும் மலர்களாலும் பஞ்ச உலோகங்களாலும் அலங்கரிக்கப்பட்டு எடுத்துச் செல்லப்பட்டது. இறுதியில் அந்தத் தேரும் எரிக்கப்பட்டது.

வைக்கோல்-பட்டுத் துணி-சந்தன மரம்—மற்றுமுள்ள பொருட்கள் ஆகிய அனைத்தும் பற்றி எரியும் போது அந்தத் தலைவரின் அந்தரங்கப் பணியாட்கள் நூறு பேரையும் ஒவ்வொருவராகத் தூக்கி அந்த நெருப்பில் போட்டனர். அந்த நூறு பேரும் பற்றி எரிந்து சாம்பலானார்கள்.

அதன் பின்னர் திரும்பி வந்து மூன்று நாட்கள் விழாக் கொண்டாடினார்கள். இந்த விழாவின்போது கியாஞ்சர் பகுதியினரும் தென்பஸார் பகுதியினரும் தங்களது தலைவருக்குக் காணிக்கையாகத் தங்களிடமுள்ள பொருட்கள் அனைத்தையும் செலவிட்டனர்.

தலைவரின் ஆத்மா சாந்தியடையவும் அவருக்கு சொர்க்கத்தில் இடம் கிடைக்கவும் கடவுளுக்குப் பிரியமானவற்றைச் செய்வதாக அவர்கள் கூறுகின்றனர்.

இந்தத் தலைவர் இறந்த பின் கியாஞ்சர்-தென் பஸார் பகுதியைச் சேர்ந்த மக்கள் தங்களிடமிருந்த பொருட்களையெல்லாம் அழித்துவிட்டு வறுமையால் வாடுகிறார்கள். இந்தத் தகவலறிந்த இந்தோனேசிய அரசு இனிமேல் இப்படிப்பட்ட இறுதிச் சடங்குகள் நடைபெறக் கூடாது என்று உத்தரவிட்டுள்ளது.

# அமெரிக்கப் பெண்களின் கூந்தல் மோகம்

நாடகங்களில் பெண் வேஷம் போடும் ஆண்கள் தலைக்கு 'டோப்பா' அணிவது வழககம். ஆனால் பெண்களே விதவிதமான டோப்பாக்களை அணிந்து அழகுபடுத்திக் கொள்கிறார்கள். இது இங்கு அல்ல, அமெரிக்காவில்! அமெரிக்கப் பெண்கள் டோப்பா அணியும் நாகரிகம் 1960-ல் ஆரம்பித்து, இப்பொழுது உச்ச கட்டத்தை எட்டியிருக்கிறது. டோப்பாவை அணிந்து கொள்வதற்கென்றே தலையை மொட்டையடித்துக் கொள்கிறார்கள். அல்லது தலைமுடியைக் குட்டையாக வெட்டிக் கொள்கிறார்கள்!

அமெரிக்காவில் கோடிக் கணக்கான டாலர்களை முதலீடு செய்து டோப்பாக்களைத் தயாரிக்கும் தொழிற்சாலைகளை ஏற்படுத்தியிருக்கிறார்கள். அதற்குத் தேவையான கூந்தலை வெளி நாடுகளிலிருந்து இறக்குமதி செய்கிறார்கள். இந்தக் கூந்தலைக்கொண்டு அங்கு வகை வகையான டோப்பாக்களைச் செய்கிறார்கள். இத்தாலியரின் கூந்தல் வெல்வெட் போல மென்மையாகவும் பளப்பளப்பாகவும் இருப்பதால் அதன் மீது அமெரிக்கப் பெண்களுக்கு மோகம் அதிகம். அது அங்கிருந்து இறக்குமதி செய்யப்படுவதும் ஏராளம்.

சுமார் ஒரு கோடி ரூபாய் மதிப்புள்ள 20 லட்சம் டோப்பாக்களை அமெரிக்கப் பெண்கள் பயன்படுத்துகின்றனர். அவர்கள் வேளைக்கு ஒரு விதமாக, வெவ்வேறு வர்ணங்களில் தலை முடி அலங்காரத்தை மாற்றிக் கொள்வதில் ஆர்வம் கொண்டவர்கள். அதற்குப் பயன்படுபவைதான் டோப்பாக்கள்.

ஒரு டோப்பாவைச் செய்து முடிக்க நூறு மணி நேரம் பிடிக்குமாம். சுருட்டைமயிர் டோப்பாக்களைச் செய்து முடிக்க இன்னும் அதிக நேரம் பிடிக்கும். அவை ஒன்று ரூ 900 முதல் ரூ. 2500 வரை விலை போகிறது. தலைமயிருடன் நைலான் இழைகளைக் கலந்தும் டோப்பாவைத் தயாரிக்கிறார்கள். அது ரூ. 250 முதல் ரூ. 500 வரை விலையுடையது.

தலைமுடி கறுப்பாக இருப்பதை விட பழுப்பாகவோ சிவப்பாகவோ வெளுப்பாகவோ இருப்பதையே அமெரிக்கப் பெண்கள் அதிகம் விரும்புகின்றனர். இறக்குமதி செய்யப்படும் கறுப்பு விசேஷ சாயக் கலவைகளைப் பயன்படுத்தி மேற் கூறிய வர்ணங்களில் மாற்றி டோப்பா தயாரிக்கின்றனர். தூய வெண்மையான டோப்பாவுக்கு மவுசும் கிராக்கியும் அதிகம். அதைத் தயாரிக்க நான்கு மாதங்கள் பிடிக்கும். அதன் விலை ரூ. 2500!

# தூக்கம் உம் கண்களை தழுவட்டுமே!

ஒரு மனிதன் சமாதி நிலையை அடைய முடியுமானால், அவன் ஆயிரக் கணக்கான ஆண்டுகள் வாழக் கூடும் என்று ஒரு புகழ் பெற்ற உடற்கூற்றியலாளர் ஒருமுறை கூறினார். அது வேடிக்கையாகக் கூறப்பட்டது தான் என்றாலும் அதிலும் ஒரு உண்மை இருக்கத்தான் செய்கிறது. ஒரு ஆண்டில் 9 மாதம் சமாதி நிலையிலிருப்பதால் தான் ஆமை நூற்றுக் கணக்கான ஆண்டுகள் உயிர்வாழ முடிகிறது என்று கூறப்படுகிறது.

மனிதனது உணர்வு பூர்வ வாழ்க்கையில் மூன்றில் ஒரு பங்காக அமைந்துள்ள தூக்கம், அவனது வாழ்க்கைக்கு இன்றியமையாதது ஆகும். இயற்கையில் காணப்படும் எல்லா உயிரினமும் — தாவரமாயினும், பிராணியாயினும், மாறி மாறி செயற்தன்மையையும், ஓய்வு நிலையையுமே வாழ்க்கை நியதியாகக் கடைப்பிடிக்கின்றன. எளிய உயிர்ப் பொருளாயினும் மிக உயரிய பிராணியாயினும் தூக்கம் என்பது அவற்றிற்குத் தவிர்க்க முடியா ஒரு அவசிய நிலையாகும்.

### தூக்கத்தின் காரணம் என்ன?

தூக்கத்தின் காரணம் என்ன? அது எப்படி ஏற்படுகிறது? அதைக் கட்டுப்படுத்துவது எங்ஙனம்? தூக்கத்தின் காலம் எவ்வளவு ஆக இருத்தல் வேண்டும்? — இவையெலாம் விஞ்ஞானிகளின் மனதைக் குழப்பிக் கொண்டுள்ள கேள்விகள்.

மனிதனது செயல் நிலையின் போது, அவனது உடலில் தோன்றும் ஒரு வகை இரசாயனப் பொருள் அவனது மத்திய நரம்பு மண்டலத்தைப் பாதிப்பதால் அவனுக்கு உறக்கம் வருகிறது என்று சில விஞ்ஞானிகள் கருதுகின்றனர்.

### தூக்க காலம்

தூக்க காலம் எவ்வளவாக இருக்க வேண்டும்? தூக்கமின்மையால் ஏற்படும் தீய விளைவுகள் நமக்குத் தெரியும்; எனினும் அதிகத் தூக்கத்திற்கு எந்தவித நியாயமும் கிடையாது என்பதுடன், அது தரத் தக்கதுமாகும். ஒரு மனிதனின் உடல், மன, நிலையும் அவனுக்குத் தேவையான தூக்க அளவும் நேரடியாகத் தொடர்புள்ளவை. அதாவது இரண்டும் எதிர் விகிதப் பொருத்தம் உடையவை. உடல் ஆரோக்கியம் குறைந்தால் அதிகத் தூக்கம் தேவைப் படுகிறது. பலவீனமான உணர்வும், குறைந்த அறிவு வளர்ச்சியுமுள்ளவர்கள் நீண்ட நேரம் தூங்குவர்; அறிவுத் துறையில் உழைக்கும் வயது வந்தவர்கள், குறைவான நேரமே தூங்குகின்றனர்.

### ஆழ்ந்த நித்திரை

சிறந்த உடற்கூற்றியலாளர்களின் கருத்துப்படி, தூக்க காலத்தைவிட தூக்கத்தின் தன்மையே முக்கியமானது. குறுகிய காலமேயெனினும், ஆழ்ந்த நித்திரை, பெரிதும் விரும்பத்தக்கது.

### தூக்கமாத்திரையின் அபாயம்

பலரும் டாக்டர்களின் ஆலோசனைப்படியோ அல்லது தாங்களாகவோ தூக்க மருந்துகளை உபயோகிக்கின்றனர். இவற்றை அடிக்கடி உபயோகிப்பதால், விளைவு நேர் மாறானதாகவும் ஆகக்கூடும்; அதாவது, அவர்களுக்கு தூக்கமில்லா நிலை ஏற்படக்கூடும்; அல்லது அடிக்கடி தூக்கம் கலையும்.

வியன்னா மருத்துவரான டாக்டர் கிளாஸ் ஹோல்ம் என்பவர், ஒவ்வொருவருக்கும் தனது சொந்த தூக்க அளவு தெரிந்திருக்க வேண்டும் என்று கூறுகிறார். அனைவருக்கும் இது 7-8 மணி நேரமே இருக்க வேண்டும் என்பதில்லை. சிலருக்கு 9-10 மணி நேரமும் பிறருக்கு 5-6 மணி நேரமும் இருந்தால் போதுமானது. நடுத்தர வயதினருக்கும், வயோதிபர்களுக்கும் நண்பகல் தூக்கம் அவசியமானது என்று கூறுகிறார் அவர். கையை நன்கு விரித்து இருட்டான அறையில், கவலைகளையும், எண்ணங்களையும் மறந்து தூங்குதல் அவசியம் என்பது அவரது கருத்து.

பிரிட்டிஷ் டாக்டரான ஆல்ஃபிரட்மாரோ என்பார் ஒரு சுவையான தகவலைத் தெரிவித்துள்ளார். ஒவ்வொருவருக்கும், அவரவர் பிறந்த நேரமே நல்ல தூக்க நேரமாக அமையுமாம். உதாரணமாக நீங்கள் காலை 2 மணிக்குப் பிறந்திருந்தால், அதுவே உங்களுக்குச் சிறந்த தூக்க நேரமாகும்.

ஆகவே, அறிவார்ந்த முறையில் ஒழுங்கமைத்துக் கொள்ளும் தூக்கமே நமது ஆரோக்கியத்தைப் பாதுகாப்பதுடன், நமது சக்தி மூலங்களுக்கு ஒரு [illegible]கவும் பயன்படுகின்றது.


உள்நாட்டு உற்பத்தியைப் பெருக்கவும், வெளிநாட்டு செலாவணியை சேமிக்கவும் பாவியுங்கள்.




ராஜபீடி 'ஸ்பெஷல்'

போலிகளை வாங்கி ஏமாறுதிருக்க நம்பிக்கையான வியாபாரிகளிடம் இருந்து அசல்

ராஜ பீடியை

வாங்குங்கள்

ராஜா பீடி கம்பெனி,

கொழும்பு-14


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தென்னுபிரிக்க இனவெறியின் கொடுமைகள்

இன ஒதுக்கல் கொள்கை பற்றி உலகம் வெகுவாக அறிந்து கொண்டிருக்கிறது. 1,40 00,000 தென் ஆபிரிக்கர்களுக்கு, வெள்ளை நிறம் இல்லாதவர்கள் என்ற ஒரே காரணத்துக்காக, அரசியல் பிரதிநிதித்துவம் இல்லாமல் மறுக்கும் கொடுமை வாய்ந்த ஓர் அரசியல் முறைதான் இந்தக் கொள்கை: நிறம் ஒன்றையே அடிப்படையாகக் கொண்டு கருணையற்ற முறையில் மக்களைப் பிரிந்து வைக்கிற ஒரு சமுதாய அமைப்பு முறை இந்தக் கொள்கை.

அந்த மக்கள் இந்தப் பிரிவினைக் கோடுகளைத் தாண்ட முற்பட்டால், அவர்களைத் தண்டிக்கும் சூழ்நிலையும் அங்கே உருவாகியுள்ளது. இவற்றையெல்லாம் உலகோர் அறிவார்கள். என்றாலும், மக்களின் சமுதாய வாழ்க்கையையும் பண்பாட்டு வளர்ச்சியையும் இது எந்த அளவு பாதித்திருக்கிறது என்பது பற்றிப் பலருக்கு அதிகம் தெரியாது.

## அன்றாட வாழ்க்கையில் இனவெறி

இன ஒதுக்கல் கொள்கையை நன்கு அறிந்து கொள்ள வேண்டுமேயானால், 'தென்னாபிரிக்க மக்களின் அன்றாட வாழ்க்கை எப்படி நடக்கிறது? இந்தச் சட்டத்தின் அடிப்படையில் அவர்களுடைய வாழ்க்கை எப்படிக் கட்டுப்படுத்தப்படுகிறார்கள்?' என்பதை விளக்கும் சட்ட அடிப்படையிலும் சமுதாய பரபு அடிப்படையிலும் அறிய வேண்டும். இந்தக் கட்டுப்பாடு எவ்விதம் நடைமுறையில் அமுலாக்கப்படுகிறது என்பதையும் தெரிந்துகொள்ள வேண்டும்.

கறுப்பு நிறம் உடையவர்களுக்கென்று மிகக் குறைவான பஸ்களே இருக்கின்றன. எனவே, பஸ்களுக்கு நெடிய வரிசையில் பல மணி நேரம் நிற்க வேண்டிய நிலை அவர்களுக்கு ஏற்படுகிறது; வழியில் காணும் நாடக அரங்கிலோ, நீந்தும் குளத்திலோ உள்ளே நுழைய லாம் என்ற எண்ணத்துக்கே இடம் கொடுக்காமல் அவர்கள் கடந்து செல்ல வேண்டும்.

இந்தக் கட்டுப்பாடுகள் மக்களை சிந்தனையைக் கூடப் பாதிக்கின்றன. கறுப்பர், வெள்ளையர் என்ற இருவரையுமே இவை கட்டுப்படுத்துகின்றன. தென்னாப்பிரிக்காவிலுள்ள அனைவருமே, தாம் விரும்பியதைப் படிக்கக்கூட முடியாத நிலையில் இருக்கிறார்கள் காரணம்: தனது இன ஒதுக்கல் கொள்கைக்கு எதிரான கருத்துக்களைப் பரப்புபவை என்று சில நூல்களை அரசாங்கம் தடுக்கிறது.

### விளையாட்டுத் துறையில்

விளையாட்டுத் துறையில் மேம்பட்டுள்ள கிரிக்கெட் வீரரான 'பாஸில்தா லோலிவேரா' கால் பந்தாட்டத்தில் சிறந்த 'ஸ்டீவ் மக்கோன்', பளு தூக்குவதில் சிறந்த 'பிரஷ்ஷியஸ் பெக்கல்சி' போன்றவர்கள் வெள்ளையர் அல்ல என்ற ஒரே காரணத்துக்காக இவர்கள் தம் தாய் நாட்டின் பிரதிநிதிகளாக எங்கும் செல்ல முடியாமல் இருக்கிறார்கள். சிறந்த இசைக் கலைஞர்களும் நாடகக் கலைஞர்களும 'மேரியம் மேக்கடா', 'ஷேனல் மொசக்கனே' போன்றவர்கள் தோலின் நிறம் காரணமாகச் சில அரங்கங்களில், சில ரசிகர்கள் முன்னிலையில் கூடத் தோன்ற முடியாத நிலையில் இருக்கிறார்கள்.

கருநிறம் உடைய சிலர், 'வோடி' என்பவரின் 'லாடிரேவியாத்தா' என்ற நாடகத்தை நடிக்கலாம்; என்றாலும், மற்றக் கறுப்பர்கள் அரசாங்கத் தலைவரின் எதிரில் அதைச் சென்று பார்க்க முடியாது!

இந்தக் கட்டுப்பாடுகளுக்கு ஓர் அளவே இல்லை. இங்கே காட்டியவை மிகச் சில உதாரணங்களே. இந்தச் சிறு சிறு நிகழ்ச்சிகள் அனைத்தும் ஒன்று சேர்ந்து ஒரு மக்கள் இனத்தையே பாகுபாடு செய்வதாக அமைந்து விடுகின்றன. இந்தப் பிரிவினை, மனக்கசப்பையும் பகைமையையும் வளர்க்கிறது. கறுப்பர்களும் வெள்ளையர்களும், வெடிக்கை பார்க்கும் விளையாட்டு அரங்கங்களில் கூட அவரவர் இனத்தவர்களையே ஊக்கிவிடுவதால் ஒரு வித கசப்பு வளர்கிறது.

இதன் பயனைப் பல்வேறு விளையாட்டு அரங்கங்களில் மட்டுமே அநுபவிக்கிறார்கள்.

### கோயில்களிலும் நிறவெறி

பூங்காவிலுள்ள விளையாட்டு இடங்களில் குழந்தைகள் விளையாடுவதற்காக உள்ள ஏற்றம், ஊஞ்சல் முதலியவற்றிலிருந்து இளங்குழந்தைகளை வெருட்டி அடிப்பதை என் கண்ணால் பார்த்திருக்கிறேன். அந்தக் குழந்தைகள் செய்த ஒரே குற்றம் அவர்கள் கறுப்பாக இருப்பதுதான். வெள்ளையர்களும் கறுப்பர்களும் இன்றும் ஒன்றாகச் சென்று வழிபடக்கூடிய சில மாதா கோவில்கள் இருக்கின்றன. அவற்றில் கூட வெள்ளையர்களுக்குப் பின்புதான் கறுப்பர்கள் மண்டியிட வேண்டும். ஆசீர்வாதத்தைப் பெறுவதற்கும் வெள்ளையர்களுக்கு அப்புறம்தான் சொல்ல வேண்டும்.

### சதுரங்கம் ஆடுவது சட்ட விரோதம்

இந்த நாட்டில் வெள்ளையரும் கறுப்பரும் ஒன்றாகக் கூடிச் சதுரங்கம் ஆடுவது சட்ட விரோதம். இங்கே சதுரங்கத்தில் இந்த நிறவெறி இருப்பதனாலும், அகில உலகச் சதுரங்க சம்மேளனத்தில் தென்னாப்பிரிக்கா இன்னும் ஓர் உறுப்பாகவே இருந்து வருகிறது. கறுப்பர்களோடு கலந்து கால் பந்து ஆட முயன்ற சில வெள்ளையர்கள் மீது குற்றஞ்சாட்டி நீதிமன்றத்தில் நிறுத்தி விட்டார்கள்.

வெள்ளையர்களும் கறுப்பர்களும் தனித்தனிப் பிராந்தியங்களில் வசிக்கிறார்கள்; ஆகவே, கறுப்பர்களுக்கு வீடு தேடுவது கடினமில்லை. கூட்டாகவுள்ள வீடுகளை நகராட்சியின் வீடு கட்டும் திட்டத்தின் கீழ் கட்டுகிறார்கள். அவை கோழிக்கூண்டு வீடுகளாகவும், தகரத்தால் மூடிய குடிசைகளாகவும் இருப்பதைக் காணலாம்.

### எழுத்தாளர் நிலை

இப்படிப்பட்ட கேவலமான தடைகள் நிறைந்துள்ள ஒரு சமுதாயத்தில், தடைகளே இல்லாதது போல பாவனை செய்து கொண்டு வாழ்வது நல்லதுதான். ஆனால் இதன் பயன் என்ன? வெள்ளைத் தென் ஆப்பிரிக்கர்களிடையே வாழும் எழுத்தாளர்களும் கவிஞர்களும் சமுதாய நிலைமை உள்ளபடி பிரதிபலிக்கும் இலக்கியப் படைப்புக்களைத் தோற்றுவிக்க முடியாத நிலையை அடைந்து விட்டார்கள்.

சமுதாயத்தின் இந்தநிலையைக் காணமுறுகளும் கண்டுபிடித்தனம். எவ்வளவு தூரம் ஆழமாகச் சென்றுள்ளது தெரியுமா? பல்லாண்டுகளாகத் தென் ஆப்பிரிக்காவில் உண்மையான தகுதியுள்ள ஒரே ஒரு நாவலும் தோன்றவில்லை.

எழுத்தாளர்கள் எழுத முடியாமல் இருப்பதும் மக்கள் ஒருவரையொருவர் அறிந்து கொள்ளாமல் இருப்பதும் ஆகிய இவையெல்லாம், இந்தத் தீமை எவ்வளவு ஆழம் சென்றிருக்கிறது என்பதை எடுத்துக் காட்டுகின்றன. கருத்துப் பரிமாற்றமே இல்லாமல் போய்விட்டது. இத்தகைய ஒரு நிலைமையைச் சட்டபூர்வமாக வேண்டுமென்றே செய்து விட்டார்கள் என்பதை வெளி உலகம் அறிந்து கொள்ள வாய்ப்பு இல்லை. இந்தக் கொடுமை ஆராய்ந்து வருத்த ஒன்று.

### நிறவெறிக் கொள்கையின் பொருள்

'கறுப்பர் - வெள்ளையரின் தொடர்பைத் துண்டித்து ஒருவரையொருவர் அறிந்து கொள்ளாமல் செய்ய வேண்டும்' - இதுதான் நிறவெறிக் கொள்கையின் உண்மையான பொருள். தென் ஆப்பிரிக்கச் சமுதாயத்தில் ஆழமான காயத்தை உண்டாக்குவது இதுதான்.

இன்றைய தென் ஆப்பிரிக்காவில் அரசு தோற்றுவித்துள்ள சூழ்நிலை இது. மனக்கோட்டங்கள் உண்மையாகவே இருக்கின்றன. இம்சை முறையில குழப்பங்கள் எந்த நேரத்திலும் தோன்றலாம். அரசியல்வாதிகள் எவரோ சிலர் கூறுகிற கூற்றுக்கள் என்று இவற்றை நினைத்து விடக்கூடாது. அரசியலின் அடிப்படையில் தோன்றிய பயன் என்றும் ஒதுக்கி விடக் கூடாது.

மக்களிடையேயுள்ள உறவு இதுவரை மிக மோசமான நிலையை அடைந்துவிட்டது. அது மீண்டும் அடைய முடியாதபடி இன ஒதுக்கல் சட்டங்கள் தடுக்கின்றன; ஒருவருக்கொருவர் பேசிக்கொள்வது, புரிந்துகொள்வது, நட்புப் புரிவது ஆகியவை இயலாத காரியம் - இவையெல்லாம் மறுக்க முடியாத உண்மைகள்.

(ஐ. நா. சபை வெளியிடும் 'கூரியன்' என்னும் தமிழ் சஞ்சிகையிலிருந்து இக்கட்டுரை எடுக்கப் பட்டது.)




# எழுது வினைஞர் சங்கத்தை பிரிக்க முயன்ற ஜீ. ஜீ. யிடம் கோடீசுவரன் சென்றதேன்?

திரு. கோடீசுவரனும் அரசாங்க எழுது வினைஞர் சங்கத்தலைவரும் பிரிவி கவுன்சிலுக்கு வரவிருக்கும் மொழி வழக்குக்கு உதவிசெய்யும்படி கோரி யாழ்ப்பாண எம். பி. திரு. ஜீ. ஜீ. பொன்னம்பலத்திடம் சென்றதாக அண்மையில் பத்திரிகைகளில் ஒருசெய்தி வெளியாகியிருந்தது. கோடீசுவரன் வழக்கில் வெற்றி கிடைத்தற்கு காரணம் திரு. சா. ஜே. வே. செல்வநாயகத்தின் உதவியும் தமிழ் அரசாங்க ஊழியர்களின் ஒத்தாசையுமே.

இந்த வழக்கு வெற்றி பெற இந்நாட்டின் பிரபலமான வழக்கறிஞர்கள் முன்னின்று உழைத்தபோது திரு. பொன்னம்பலம் எங்கேயிருந்தார்?

தேசிய அரசாங்கம் ஏற்பட்டபின்னர் சாமுமக்கள் முன்தோன்றி அரசாங்க எழுதுவினைஞர் சங்கத்தை உடைக்க முற்பட்டார்.

இப்படிப்பட்டவரிடம் திரு. கோடீசுவரன் உதவி கோரிச் சென்றதேன? திரு. கோடீசுவரன் அரசாங்க எழுதுவினைஞர் சங்கத்தின் ஒரு முக்கிய உறுப்பினர் என்ற காரணத்தால், திரு. பொன்னம்பலத்திடம் இப்பொழுது உதவி கோரி சென்றதற்கு காரணமென்ன வென்பதை அவர் விளக்கவேண்டும்.'

மேற்கண்டவாறு இம்மாதம் 14ந் திகதி 'சன்' பத்திரிகையில் யாழ்ப்பாணத்தைசேர்ந்ததிரு. பி. கணேசலிங்கம் என்பவர் எழுதியிருந்தார்.

திரு. கணேசலிங்கம் எழுதியுள்ள கடித விபரம் வருமாறு:

விரைவில் பிரிவி கவுன்சிலல் எடுத்துக்கொள்ளப்பட விருக்கும் கோடீசுவரன் மொழி வழக்குக்கு உதவிகோரி யாழ். எம். பி. திரு. பொன்னம்பலத்திடம் திரு. கோடீசுவரனும், அரசாங்க எழுதுவினைஞர் சங்கத்தலைவரும் சென்றதாக அண்மையில் பத்திரிகைகளில் ஒரு செய்தி வெளியாகியிருந்தது.

கோடீசுவரன் வழக்கு, தமிழ் அரசாங்க ஊழியர்களால், திரு. சா. ஜே. வே. செல்வநாயகத்தின் உதவியுடன், வென்றெடுக்கப்பட்டது. இந்தக் கோரிக்கைக்காக நாட்டிலுள்ள பிரபல வழக்கறிஞர்கள் போராடியபோது திரு. பொன்னம்பலம் எங்கேயிருந்தார்?

1965ம் ஆண்டு தேசிய அரசாங்கம் ஏற்பட்டதைத் தொடர்ந்து, நீண்டகால அஞ்ஞாதவாசத்துக்குப்பின் திரு. பொன்னம்பலம் தமிழ் மக்கள் முன்பு தோன்றினர். தமிழ் அரசாங்க ஊழியர்களின் நம்பிக்கையைப்பெற்ற தொழிற்சங்கமான அரசாங்க எழுதுவினைஞர் சங்கத்தின் தனித்தன்மையையும், அபிலாஷைகளையும் உடைக்கும் நோக்கத்துடன் போட்டி தொழிற்சங்கங்களை உருவாக்குவதில் முழுமூச்சுடன் ஈடுபட்டார்.

திரு. கோடீசுவரன் அரசாங்க எழுதுவினைஞர் சங்கத்தின் ஒரு பிரபல உறுப்பினர். ஆகவே, மொழிவழக்கு சம்பந்தமாக திரு. பொன்னம்பலத்தின் உதவியை அவர் ஏன் இப்போது நாடுகிறார் என்பதை திரு. கோடீசுவரன் விளக்க வேண்டியது அவசியம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குறைப்பிரவசத்தையும் கர்ப்பச்சிதைவையும் தடுக்க முடியுமா?

எல்லா செல்வங்களிலும் உயர்ந்தது, மழலைச் செல்வம். இதில் எவருக்கும் மாறுபட்ட கருத்து இருக்க முடியாது. தாய்மைப் பேறு ஒன்றே, பெண்களின் வாழ்க்கையில் குறிக்கோள். ஆனால் சிலருக்கு அரை குறைப் பிரசவமும், கருச்சிதைவும் ஆவதுண்டு. குறைப் பிரசவத்தை தவிர்க்க வழியுண்டா? உண்டு. இதற்குப் புரட்சிகரமான சிகிச்சை முறை கண்டு பிடிக்கப்பட்டிருக்கிறது.

குழந்தை வேண்டாம் என்று சொல்லும் பெண்ணே இருக்க முடியாது. பத்துமாதம்சுமந்து குழந்தையை பெற்றெடுத்து தாலாட்டி சீராட்டி வளர்க்க, ஒவ்வொரு பெண்ணும்விரும்புவாள்.

தாய்மைப்பேறு சில பெண்களுக்கு எளிதில்கிட்டுவதில்லை. சிலருக்கு கருதரித்ததும் சிறிது காலத்தில் சிதைந்துவிடும்; மற்றும் சிலருக்கு, பத்து மாதங்களுக்கு முன்னரே குழந்தை பிறந்துவிடும்; குழந்தை முழு வளர்ச்சி அடைந்திருக்காது:

இவ்வித கருச்சிதைவினாலும் குறைப் பிரசவத்தினாலும், தாயின் உடலுக்கும், உயிருக்கும் தீங்கு ஏற்படக் கூடும்.

கருச் சிதைவையும், குறைப் பிரசவத்தையும் தவிர்க்க முடியுமா? முடியும் என்று மேற்கு ஜெர்மன் டாக்டர்கள் கூறியுள்ளனர். இதற்காக புரட்சிகரமான சிகிச்சை முறையைக் கண்டுபிடித்துள்ளனர். சமீபத்தில் ஜெர்மனியில் ஹனேவரில் நடைபெற்ற மகப்பேறு மருத்துவர்கள் மாநாட்டில் இந்த செய்தி வெளியிடப்பட்டது.

பெண் கர்ப்பம் தரித்திருக்கும் காலத்தில் ஒருவித ஹார்மோன் சிகிச்சை அளித்தால், கர்ப்பம் கலையாது என்று பேராசிரியர் ஜாண்டர், இம் மாநாட்டில் அறிவித்தார்.

கர்ப்பத்தை பாதுகாக்கும் சக்தி, ஆஸ்ட்ரோஜன், கெஸ்டஜன் ஆகியஇரு ஹார்மோன்களுக்கும் உண்டு பெண், கர்ப்பம் தரித்த காலத்தில் இந்த ஹார்மோன்களைக் கொண்டு சிகிச்சை அளித்தால், கர்ப்பம் பாதுகாக்கப்படும். குறைப்பிரசவமோ கருச்சிதைவோ ஏற்படாது. ஏற்கனவே கருச்சிதைவு அல்லது குறைப் பிரசவம் அடைந்த பெண் மீண்டும் கருதரிக்கத் தொடங்கிய உடனேயே இந்த அதிசய ஹார்மோன்களைக் கொண்டு சிகிச்சை அளித்தால், கர்ப்பம் கலையாது; குறைப் பிரசவம் ஆகாது; 'கொழு...கொழு' என்று குழந்தை பிறக்கும்.

இவ்வித ஹார்மோன் சிகிச்சை அளிக்கப்பட்ட பெண்கள், அழகிய குழந்தைகளைப் பெற்றெடுத்துக் கொண்டு ஆனந்தமாக வீடு திரும்பியிருக்கிறார்கள் என்று பேராசிரியர் கிர்ச்சாப் தெரிவித்திருக்கிறார்.

குறைப் பிரசவமும் கருச்சிதைவும் ஏன் நிகழ்கின்றன என்பது இன்னும்மர்மமாகவே இருக்கிறது மருத்துவதுறை எவ்வளவோ முன்னேறியிருந்த போதிலும் இப்புதிருக்கு இன்னும் விடை காண முடியவில்லை. கருச்சிதைவும்,குறைப் பிரசவமும் ஏற்படுகிற பெண்ணில் உடலுறுப்புகள் மீண்டும் கர்ப்பம் தரிப்பதற்குரிய நிலையை எட்டுகின்றன என்பதும் புதிராக இருக்கிறது. இது விஷயத்தில் இன்னும் நிறைய ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப் பட வேண்டியிருக்கிறது.

ஹார்மோன்களைச் செயற்கையாக உற்பத்தி செய்வது மிகவும் கடினம். இதுவரை ஒருவித ஹார்மோன் தயாரிப்பதில் தான் விஞ்ஞானிகள் வெற்றி பெற்றிருக்கிறார்கள். மற்ற ஹார்மோன்களைசெயற்கையாகத் தயாரிப்பதில் விஞ்ஞானிகள் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்.

# திரைவாணன் பதில்கள்

முத்துலிங்கர்,
கொலலங்கலட்டி.

கே: உங்களிடம் கேள்வி கேட்க விரும்புகிறேன். அதற்கு பதில் தர எவ்வளவு பணம் தர வேண்டும்?

ப: என்னையா, 'இலஞ்சம்' கொடுத்து பதில் பெறப் பார்க்கிறீரா? நல்ல ஆளையா நீர்!

பொ சந்திரசேகரம்
ஆரையம்பதி

கே: எம். ஜி. ஆர். பத்து வேடங்களில் படம் நடிப்பதாக பத்திரிகைகளில் செய்தி வெளியாகியிருந்ததே இதன் முடிவு என்ன?

ப: ஆம், எம். ஜி. ஆரை பத்து வேடங்களில் நடிக்க வைத்து ஒரு படம் தயாரிக்கப் போவதாக தேவர் அறிவித்தார். தற்காலிகமாக அத்திட்டத்தை இப்போது அவர் கைவிட்டுள்ளார்.

ஃ

எம். சாலிமுத்து
விராலிப்பட்டுதனே

கே: நடிகை ஜெயலலிதாவின் முகவரி என்ன?

ப: 8/1 சிவஞானம் ரோட், தியாகராஜநகர் சென்னை-17.

ஃ

சு. மனோகரன்,
இறந்தோட்டை

கே: 'ஜெய்' 'ரவி' என்போர் ஏதேனும் அரசியல் கட்சிகளை மறைமுகமாகவேனும் ஆதரிக்கின்றனரா?

ப: ஜெய்சங்கர் தி. மு. க. ஆதரவாளர். 'ரவி' எந்தக் கட்சியையும் ஆதரிப்பதாகத் தெரியவில்லை சினிமாக்கட்சியை தவிர.

கே: ஜெய்சங்கரால் எம். ஜி. ஆரின் இடத்தை பிடிக்க முடியுமா?

ப: இதற்கு காலம் தான் பதில் சொல்ல வேண்டும்.

ஃ

மு. வயித்தீஸ்வரன்,
கொத்தாவத்தை.

கே: எம். ஜி. ஆர். இதுவரை நடித்த கலர்ப்படங்கள் ஐந்து என்று அல்லையில் ஒரு கேள்விக்கு பதிலெழுதியிருக்கிறீர்கள். ஆனால் அவர் இதுவரை 7 கலர் படங்களில் நடித்துள்ளார். அவை, அலிபாபாவும் 40 திருடர்களும், நாடோடி மன்னன், படகோட்டி, எங்க வீட்டுப் பிள்ளை, ஆயிரத்தில் ஒருவன், அன்பே வா, பறக்கும் பாவை. ஆகவே உங்கள் பதில் தவறுதானே!

ப: அலிபாபாவும் 40 திருடர்களும், நாடோடி மன்னன் — இவையிரண்டும் முழுநீள கலர்ப்படங்கள் அல்ல. இப்படங்களில் குறிப்பிட்ட சில பகுதிகளிலே கலரில் தயாரிக்கப்பட்டுள்ளன. எனவே தான் இவையிரண்டையும் தவிர்த்து முழுநீள கலர்ப் படங்கள் 5 என்று குறிப்பிட்டேன்.

ஃ

சொல்லின் செல்வன்,
கொட்டடி.

கே: அன்று அண்ணா அவர்கள் வாழ்த்திய வி. சி. கணேசனுக்கு இன்று பத்மஸ்ரீ பட்டம் கிடைத்ததை யிட்டு அவரை அண்ணா வாழ்த்தினாரா?

ப: மனத்திற்குள் கண்டிப்பாக வாழ்த்தியிருப்பார்!

ஃ

எம். திருகலன்,
உருத்திரபுரம்.

கே: ஆர். முத்துராமன் கதாநாயகனாக எத்தனை படங்களில் நடித்துவருகின்றார்?

ப: சுமார் அரை டஜன் படங்களில்!

ஃ

எஸ். கலைச்செல்வன்,
கொம்மாதுறை.

கே: சிவாஜி ஓர் இணையற்ற நடிகர். இது தெரிந்தும் எம். ஜி ஆர். ரசிகர்கள் இதை ஒப்புக் கொள்வதில்லையே ஏன்?

ப: எம். ஜி. ஆர். இணையற்ற ஸ்டண்ட் நடிகர். அப்படியிருந்தும் சிவாஜி ரசிகர்கள் அதை ஒப்புக்கொள்வதில்லையே ஏன் என்று கேட்கிறார் ஒரு எம். ஜி. ஆர். ரசிகர்.

ஃ

சந்திரபவான்
நொச்சிமோட்டை

கே: தீபாவளியன்று வெளியான படங்களான ஊட்டிவரை உறவு, இருமலர்கள், விவசாயி காதலித்தால் போதுமா ஆகிய படங்களில் வசூலிலும், தரத்திலும் முன்னணியில் நிற்கும் படங்களை வரிசைப்படி தருக?

ப: தரத்தில் 'இரு மலர்களும்' வசூலில் 'விவசாயி'யும் முன்னணி வகிக்கின்றன.

ஃ

வ. இராசநாதன்
அல்வாய்

கே: அடுத்து இலங்கையில் திரையிடப்பட விருக்கும், நடிகர் திலகம் சிவாஜி கணேசனின் படம் எது?

ப: பேசும் தெய்வம்.

ஃ

எஸ் வீ. தேவா
அக்கரைப்பற்று

கே: விவசாயி தமிழ்நாட்டில் தற்போது எத்தனையாவது நாளாக ஓடிக்கொண்டிருக்கின்றது?

ப: 15-12-67 உடன் 45 நாள் முடிகிறது.

கே: ஊட்டிவரை உறவு தமிழ் நாட்டில் நூறு நாட்கள் ஓடுமா?

ப: ஓடாது!

ஃ

ஜோய்ஸ்ரீபன்
மருதானை

கே: எம். ஜி. ஆர் பெருங்காசுத்தான் கொடை கொடுக்கிறார் என சிலர் கூறுகிறார்கள் அது உண்மையா?

ப: கொடை கொடுத்துத் தான் பெயரைத் தேடிக் கொள்ள வேண்டிய நிலையில் தற்போது எம். ஜி. ஆர் இல்லையே!

ஃ

ப. பத்மசோதி
கொழும்பு-3

கே: நடிகர்களில் புகைபிடிக்காமலும் மது அருந்தாமலும் இருப்பவர் யார்?

ப: எம். ஜி. ஆர்!

## இரவில் போகும் இடம்

6. இரவு எங்கே போகிறீர்கள், எதற்காக போகிறீர்கள் என்பதை மனைவியிடம் மறைக்காமல் சொல்லுங்கள். உங்கள் நடத்தையில் சந்தேகப்படும் படியான தர்ம சங்கடமான நிலைமையை அவளுக்கு தராதீர்கள்.

7. வருங்காலத்துக்கு பணம் சேமித்து வையுங்கள்.

8. குழந்தைகளின் நலனில் அக்கறை காட்டுங்கள்.

9. உங்கள் மனைவியின் முன்பு பிற பெண்களை ரசிக்கவோ, அல்லது இன்னொருத்தியை விரும்புவது போலவோ காட்டிக் கொள்ளாதீர்கள்.

10. இன்ப துன்பங்களை இருவருமே பகிர்ந்து கொள்ளுங்கள்.

சமையல் குறிப்பு:

## வடைகறி

தேவையானவை:

கடலைப் பருப்பு, உப்பு, பம்பாய் வெங்காயம், பச்சைமிளகாய், கடுகு, உளுத்தம்பருப்பு, பெருங்காயம், கருவேப்பிலை, தேங்காய் எண்ணெய்.

செய்முறை:

கடலைப் பருப்பை சுத்தம் செய்து தண்ணீரில் ஊறவைக்கவும். சுமார் 1 மணி நேரம் வரை ஊறிய பின்பு நன்றாக களைந்து ஆட்டுக் கல்லில் போட்டு அரைக்கவும் தேவையான அளவு உப்பில் பாதி உப்பையும் சேர்த்து அரைக்கலாம்.

பிறகு வாணலியை அடுப்பில் வைத்து தேங்காயெண்ணை விட்டு, அதுகாய்ந்ததும் அரைத்தெடுத்து வைத்திருக்கும் கடலை பருப்பைச் சிறு சிறு உருண்டைகளாக்கி, எண்ணெயில் போட்டு, முக்கால் பாகம் வெந்ததும், எடுத்து வைக்கவும்.

பின்னர், வெங்காயத்தையும், பச்சை மிளகாயையும் நறுக்கிக் கொள்ளவும். பிறகு அடுப்பில்வாணலியை வைத்து, அது காய்ந்ததும் ஒரு டீஸ்பூன் எண்ணெய் விட்டு, அது காய்ந்ததும், கடுகு உளுத்தம்பருப்பு, பெருங்காயம், இவற்றைப் போட்டு அது படபடவென்று வெடித்ததும் நறுக்கிய வெங்காயம், பச்சை மிளகாய் போடவும். வெங்காயம் நன்றாக வதங்கிய பின்னர், சிறிதளவு தண்ணீரை அதில் ஊற்றி, மீதியுள்ள உப்பையும் அத்துடன் சிறிதளவு மஞ்சள் பொடியையும் தூவவும்.

சிறிது நேரத்திற்கு பிறகு கொதி வந்ததும் எண்ணெயில் சுட்டெடுத்த கடலை மாவு உருண்டைகளை போட்டுக் கிளறி விடவும். தேவையான அளவுக்கு சுண்டவிட்டு பிறகு இறக்கி, வேறொரு பாத்திரத்தில் கொட்டி உபயோகிக்கவும்.

## விவாகரத்து ஏற்படாதிருக்க என்னசெய்ய வேண்டும்

இல்லற வாழ்க்கையில் 'ஊடல்' வரலாம் ஆனால் அதுவே பிளவாகமாறி விடக் கூடாது. மனைவியின் உணர்ச்சிகளை புரிந்து கொண்டு அனுசரித்து குடும்பம் நடத்தினால், விவாகரத்து வரவேவராது என்று கருதப் படுகிறது.

விவாகரத்து செய்து கொண்ட ஒரு பெண் மற்ற கணவர்கள் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்பது பற்றி, 10 யோசனைகளை சொல்லி இருக்கிறார். படித்து பாருங்கள்:—

### உரிமைகளை வழங்குங்கள்

1. மனைவியை கவுரவமாக நடத்துங்கள். ஆடு மாடு போல் அடித்து துன்புறுத்தாதீர்கள். அவளுக்கு உரிய நியாயமான உரிமைகளை தாராளமாக வழங்குங்கள்.

2. ஊதாரித்தனமான செலவுகளை குறையுங்கள்.

3. அவளுக்கும் உற்சாக மூட்ட பணம் கொடுங்கள். சினிமா, நாடகங்களுக்கு அழைத்துச் செல்லுங்கள்.

4. உங்கள் பிரச்சினைகளை அவளிடம் மனம் விட்டு விவாதியுங்கள்.

5. அவளின் பிரச்சினைகளை [illegible] துடனும், அன்புடனும் கேளுங்கள்.

## தக்காளி கொஜ்ஜு

தேவையானவை:

தக்காளி, புளி, உப்பு, மஞ்சள் பொடி, பச்சை மிளகாய், எண்ணெய், பெருங்காயம், கடலைப் பருப்பு.

செய்முறை:

தக்காளியை நன்றாக நறுக்கி ஒரு ஈயம் பூசிய பாத்திரத்தில் போட்டு தண்ணீர் விட்டு கொதிக்க வைக்கவும். தக்காளித் துண்டுகள் நன்றாக வெந்து குழைந்து வரும்போது ஒரு சிட்டிகை மஞ்சள் பொடியைப் போட்டு சிறிதளவு புளியை கரைத்து ஊற்றி, அத்துடன் உப்பையும் போட்டுகிளறவும்.

இதற்கிடையில் வாணலியை அடுப்பில் வைத்து எண்ணெய் விட்டு அது காய்ந்ததும் கடுகு, கடலைப் பருப்பு, பெருங்காயம் இவற்றைப் போட்டு தாளித்து அடுப்பிலிருக்கும் தக்காளியில் கொட்டவும். அத்துடன் பச்சை மிளகாயையும் நறுக்கிப் போடவும்.

தேவையான அளவிற்கு கொஜ்ஜு சுண்டியதும், இறக்கி, ஆறியதும், உபயோகிக்கவும்.

இதே போல கத்தரிக்காயிலும் கொஜ்ஜு தயாரிக்கலாம்.

—விஜயா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாம் என்ற பொது நோக்கு தமிழ் மக்களுக்கு இன்று தேவை

**— சாவகச்சேரி எம். பி.**

'நான்'. என்ற ஒருமைப் பாட்டுச் சொல்லகற்றி 'நாம்' என்ற பொது நோக்குக்குத் தேசிய மந்திரம் தான் எமது தமிழினத்தின் விடுதலைக்குரிய தாரகை மந்திரம்! இலங்கைத் தமிழ் மக்களிடையே குறிப்பாகச் சிறுர்களிடையே இந்த 'நாம்' என்ற 'ஈரெழுத்துப் பொதுநோக்கு மந்திரத்தை உருவாக்குவதின் மூலமே தமிழினத்தின் விடுதலைக்கான உதயதாரகையை காண முடியும்!

இந்தஉண்மைமைத்தான் எனது வெளி நாட்டுப் பிரயாணத்தில் நான் கண்ட அனுபவம் எனக்கு உணர்ந்துகிறது.' இவ்வாறு மட்டுவிலில் வெள்ள அகதிகளுக்கு உதவிய தொண்டர்கள் மத்தியில் பேசிய திரு. வி. என். நவரத்தினம் குறிப்பிட்டார்.

அவர்மேலும் கூறியதாவறு: 'எமது சிறுர்களிடம் இந்தத் தாரக மந்திரத்தை உபதேசிப்பதே, எனது கடமையும், திடசங்கல்பமும் ஆகும். இதற்கு உதாரணமாக இஸ்ரேல் நாட்டைப் பாருங்கள் 25 இலட்சம் மக்களைக் கொண்ட இந்தஇஸ்ரேல்நாடு, 600 இலடசம் மக்களைக் கொண்ட நாட்டுடன் பொருதி, வெற்றியீட்டி, ஒரு உலக சாதனையை நிலை நாட்டியுள்ளது.

15 ஆண்டுகளுக்கு முன்பு பாலைவனமாகக் கிடந்த பகுதிகளில் தான், இஸ்ரேல் மக்கள் குடியேறி அதைச் சோலை வனமாக மாற்றினுர்கள். மூன்று நூற்ருண்டுகளுக்கிப்பால் தோன்றிய 'ஈபுறு' மொழியை ஈரேல் அரசகரும மொழியாக்கி, பொறியியல், மருத்துவம், ஆராய்ச்சித் துறைகளுக்கு ஏற்ற மொழியாக்கினுர்கள்.

போர்க்காலத்தில் அந்தநாட்டிலுள்ள போர் வீரர்கள் மட்டுமல்ல விவசாயிகளே போர் வீரர்களாக மாறித் தமது உரிமைக்காகப் போராடிஞர்கள். பெருந்தொகையான மக்களை எதிர்த்து வெற்றியுமீட்டிஞர்கள்.

இந்த நிலைக்கு அவர்கள் சிறந்து விளங்கக் காரணமென்ன? அவர்களின் 'நாம்' என்ற பொது நோக்குக்கொள்கையே தான்!

நம்மிடையே இந்தப் பொது நோக்கு மந்திரமான 'நாம்' என்ற நிலை செழித்தோங்குமானுல் கல்தோன்றி மண்தோன்ருக் காலத்தின் முன்தோன்றிய மூத்த தமிழ் ஏன் தனித்துச் சிறந்த அரசகரும மொழியாகவும் பரிமளிக்க முடியாது?

எனவே இன்று முதல் 'நாம்' என்ற பொது நோக்குக் கொள்கை பூணுங்கள். எமது, மொழி, கலை, கலாச்சாரம், எமது மக்கள், நாடு செழிப்புற வேண்டும் என்றும், அதற்காக, நாம் ஒன்று பட்டு உழைக்க வேண்டும் என்றும், திடசங்கல்பம் பூணுங்கள் எமது மொழி இன உரிமைகள் நிட்சயம் நாம் பெற்றுக் கொள்ளுவோம். இது திண்ணம்."

நூற்றுக்கும் அதிகமான வாலிப தொண்டர்கள், திரு. நவரத்தினம் தலைமையில் சைக்கிளில் சென்று, நாலா பக்கங்களிலுமுள்ள வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அளப்பரிய தொண்டுகளைச் செய்து அகதிகளின் துன்பம் தோய்ந்த வாழ்க்கையிலும் ஒரு புதுத் தெம்பையும் உற்சாகத்தையும் உண்டுபண்ணினர். திரு நவரத்தினம் பயணத்தால், திருப்பியதும், பெற்ற பிள்ளைகளையோ, பசிதாகத்தையோ மறந்து, இரவு பகல் பாராது உறக்கமின்றி, தொண்டர்களோடு தொண்டராகக் கலந்து, மண்வெட்டி பிடித்தும் உடலைப் பிழிந்தும், வெள்ள அகதிகளுக்கு தீவிர தொண்டாற்றினுர்.



### பேய்!

ஞ்ஞானியைப் பேய் விரட்டியது.

—செய்தி.

மனப்பேய் யாரை விட்டது?

### ஆயுதசாலை!

உலகம் ஒரு பெரிய ஆயுத உற்பத்தி சாலையாக மாறிவிட்டது.

—பாப்பரசர்.

—உலகத்தை ஆத்மீக உற்பத்திசாலையாக்க மதங்கள் தவறிவிட்டது இதற்கு காரணமாக இருக்குமோ?

### நாயினும் கடையன்

நாயினுல் ஒரு மனிதரின் உயிர் தப்பியது.

—செய்தி.

—ஆனுல் மனிதனுல் தினசரி எத்தனை உயிர்கள் பலியாகிக் கொண்டிருக்கின்றன!

### பெருமை!

தமிழில் பொறிக்கப்பட்ட கார் இலக்கத் தகட்டுடன் டெல்லியில் திரு. செழியன் எம். பி. ஊர்வலம் வந்தார்.

—செய்தி.

—செழியனின் துணிச்சல் பாராட்டப்பட வேண்டியது தான். ஆனுல் உலகில் முதன் முதலாக தமிழில் பொறிக்கப்பட்ட கார் இலக்கத் தகடுகளை உபயோகித்தவர்கள் இலங்கைத் தமிழர்களே என்று பெருமைப்படுகிருர் ஸ்ரீ எதிர்ப்புப் போராட்டத்தில் சிறை சென்ற ஒரு தொண்டர்.

### தொப்பி போடவா?

இலங்கையிலிருந்து வெளிநாடுகளுக்கு தொப்பியும் ஏற்றுமதியாகும்.

—செய்தி.

—வெளிநாடுகளுக்கு "தொப்பிபோட" இலங்கையும் முயல்கிறதோ?

### முன் அனுபவம்

கிணற்றில் குதித்த பெண்ணை பருத்தித்துறை எம். பி. காப்பாற்றினுர்.

—செய்தி.

—ஏற்கெனவே சிங்கள ஏகாதிபத்தியம் என்னும் காட்டாற்றிலிருந்து தமிழ்த் தாயை காப்பாற்றிய முன் அனுபவம் அவருக்குண்டல்லவா?

## ஜீ.ஜீ.க்கும்......

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

மாகவேயிருந்துவந்தது. ஏன் தெரியுமா?

திரு பொன்னம்பலத்தை ஆதரித்து யாழ்ப்பாணத்தில் நடந்த பொதுக் கூட்டங்களுக்கெல்லாம் திரு. சிவசிதம்பரம் ஓடோடிச் சென்று முழங்கு முழங்கென்று முழங்கித் தீர்த்தார்.

ஆனுல், பாவம், திரு. சிவசிதம்பரத்தை ஆதரித்து பருத்தித்துறைத் தொகுதியில் நடைபெற்ற ஒரு கூட்டத்துக்கேனும் திரு. பொன்னம்பலம் சமூகம் கொடுக்கவுமில்லை; பேசவுமில்லை.

இதுபற்றி எங்கள் ஊரிலும், பொதுவாக பருத்தித்துறைத் தொகுதியிலும் பரபரப்பாக பேசப்பட்டு வந்தது. திரு. பொன்னம்பலம் எதற்காக இப்படி 'டிமிக்கி' கொடுக்கிருர் என்பது புரியாத புதிராகவேயிருந்து வந்தது. திரு. சிவசிதம்பரத்திடததிலும் பலர் இது குறித்து நேரடியாக கேட்க ஆரம்பித்துவிட்டார்கள். என்ன காரணமோ, திரு. பொன்னம்பலம் எங்கள் பக்கமே வரவில்லை.

தேர்தலுக்கு இன்னும் 3 நாட்கள்தான் இருந்தன. அன்று எங்கள் ஊரெங்கும் பெரிய பெரிய போஸ்டர்கள் காணப்பட்டன. அதைப் பார்த்ததும் திரு. சிவசிதம்பரத்தின் ஆதரவாளர்கள் களிபேருவகையடைந்தனர். மாபெருஞ் செயலை 'சாதித்து' விட்டதாக மகிழ்ச்சி அடைந்தனர். அப்படி அவர்களை மகிழ வைத்த செய்தி இது தான். அப்போஸ்டரில், 'இன்று மாலை மாலி சந்தையில் நடக்கும் தமிழ் காங்கிரஸ் கூட்டத்தில் திரு. சிவசிதம்பரத்தை ஆதரித்து திரு. ஜீ. ஜீ பொன்னம்பலம் பேசவிருக்கிருர்' என்று காணப்பட்டது.

'லவுட்ஸ்பீக்கர்' எங்கும் அலறியது. திரு. பொன்னம்பலம் வருகிருர், வருகிருர் என்று ஊரெங்கும் ஒரே கதை பரவியது.

குறித்த நேரமும் வந்தது: ஊர்வலம் ஆரம்பித்தது. ஊர்வலத்தில் திரு. பொன்னம்பலம் கழுத்தை மூடி மாலைகளுடன் வந்தார்.

ஊர்வலம் கூட்டம் நடைபெற வேண்டிய மாலி சந்தையை வந்தடைந்தது. மக்கள் மைதானத்தில் நிறைந்தனர். கூட்டம் ஆரம்பமாக வேண்டிய நேரம்.

திடீரென்று ஒரே பரபரப்பு. அவர் எங்கே எங்கேயென்று குரல்கள் எழுந்தன.

—(தொடரும்)

## விடிவு காலம்

(7-ம் பக்கத்தொடர்ச்சி)

பத்தியமாரிக்கும். 'என்று செம்மறியாட்டுக் கொம்பு மீசைகள் படபடக்கக் கர்ச்சித்துக் கொண்டிருந்த போடியாரைப் பார்த்தவர்கள் மூவரும் 'திக்' பிரமை பிடித்துக்கொண்டிருந்தனர்.

'அவனப்பத்தி ஆரோ எனக்கிக் காயிதம் எழுதிரிக்கான். படிச்சித் தெரிஞ்சுக்குங்க எனக்கி, அவிசரமான வேலரிச்கி. கலியாணத்துக்கு, உடுபொடவே, சாமான் சக்கட்டு வாங்கப் போப்பறன். காயிதத்தேப் படிச்சிப் போட்டுக் கையோடே வாங்கி யாடா மகன்' என்று கூறியவாறு விடுவிடென்று நகர்ந்து கொண்டிருந்தார் போடியார்.

'காக்கா கோப்பியக் குடிச்சித்......' என்று லைலத்தும்மா சொல்லி முடிப்பதற்குள் தெருப் படலையினுல்த துள்ளிப் பாய்ந்து கொண்டிருக்கும் குஷாலே அவர்களுக்குத் தித்திப்பாகவும் திகைப்பாகவுமிருந்தன.

'இதொண்டும் வெளங்கல்லே. படிகிளிகேப்பம' என்று அவளிடம் நீட்டினுன் கடிதத்தை. அவன் வாங்கி, நாண போதையுடன் படிக்கவாரம்பித்தாள்.

அன்புடையீர்!

அஸ்ஸலாமு அலைக்கும்.

முகைபதீன் பிச்சைப் போடியாருக்கு அப்துல் கனியின் நண்பன் எழுதுவது.

தங்களின் மகனைப் பற்றி நான் அடிக்கடி எழுதிய கடிதங்கள் ஏராளம். நானும் அப்துல்கனியும் நெருங்கிய நண்பர்கள். அதனுற்ருன் உங்கள் மகனைப்பற்றிய புள்ளி விபரங்களை எழுதி வந்துள்ளேன். நான் முன்பெல்லாம் எழுதி வந்தேனல்லவா, மர்ஜூனு மாபீர் என்பவர்களை, அவர்கள் இருவரையும் கனி, காரினுல் மோதிக் கொலை செய்து விட்டான். பதருதீர்கள்.

அப்துல் கனியின் ஆள்க்கொல்லித் தனத்தை அறிந்த மர்ஜூனுவும் மாபீரும் பதிவுத் திருமணம் செய்வதற்காகக் கண்டி பொலீஸ் கச்சேரியை அடைந்து கொண்டிருக்கும் போது கனி, தன் பிளிமத் காரினுல், அவர்கள் இருவரும் சென்று கொண்டிருந்த ஸ்கூட்டரில் மோதி விட்டான். யாரார் செய்தபுண்ணியமோ, மாபீருக்குச் சிறிது காயம். மர்ஜூனு மரணத்துடன் போராடிக் கொண்டிருக்கிருள். கனி ரிமான்டில் இருக்கிருன். நான் கனியைப் பிணையிற் கேட்டேன். 10,000 ரூபாய் ஆதனப் பிணை கேட்டார்கள். என்னுல் முடிந்த காரியமா அது.

கொலை செய்ய முயற்சித்த குற்றத்திற்காகவும், மர்ஜூனுவின் முழங்காலைக் கழற்ற ஊனம் வரப்பட்டு, மொடத்தி என்ற வடுப் பெயர் அவளுக்கு வந்து விட்டகாரணத்திற்காகவும், ஏகப்பட்ட கடும் குற்றங்கள் புரிந்துள்ளமையால் பத்து வருடக் கடுங்காவல் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது. எனினும் இவன் ஒரு பல்கலைக்கழக மாணவன் என்பதினுல், இம்மாம் பெரிய கொலைக்குற்றத்திற்காக, ஏழு வருடம் கடுங்காவலும், ஊழியமும் சிறையில் அனுபவிக்குமாறு நீதவான் ஹைக் கோர்ட்டில் தீர்ப்பளித்து விட்டார்.

'ஐயோ, போடியார் இப்படியாக கொத்த மகனை நீங்கள் ஏன் பெற்றீர்களோ. இப்படி ஒரு கல்நெஞ்சக்காரன் இந்த உலகத்தில் இருப்பானு போடியார் என்று தோன்றுகிறது! உம், என்ன செய்யலாம் ... களின் தலைவிதியும் மகனின் மண்டை எழுத்தும் இப்படியாக்கும், நீங்கள் ஒன்றுக்கும் மனங்கலங்காமலிருங்க போடியார். என்னுல் முடிந்த உதவியைச் சிறையிலிருக்கும் கனிக்குச் செய்து கொண்டே இருப்பேன். உங்களின் உள்ளத் தூய்மைக்கும், உங்களின் வீட்டிறகு வந்த காலத்தில் சில வேளைகளில் தங்களின் உப்பைத்தின்று வளர்ந்த காரணத்துக்காக, என்னுல் முடிந்தளவு அந்த நன்றியை மறக்க மாட்டேன் போடியார்.

இன்னும் எழுதுவதானுல் எழுதலாம், ஆனுல் எனக்கு அலுப்புத் தட்டி விட்டது. ஒன்றை மட்டும் நினைவிற் கொள்ளுங்கள் போடியார். உங்கள் குடும்பத்துக்கு இனிமேல்தான் 'விடிவுகாலம்' வரப் போகின்றது போடியார். உங்கள் மகன் கனி நல்லா வரப் பிரார்த்திப்போமாக. ஆமீன்.

இங்ஙனம்,

கலந்தர் லெப்பை.

இந்தக் கடிதத்தைப் படித்து முடிப்பதற்குள் சைத்தூன் பட்டபாடு, அகமது லெப்பை அழுத அழுகை, லைலத்தும்மா விட்ட பெருமூச்சுகள் சிறையிலிருக்கும் அப்துல்க் கனிக்கா புரையோடப்போகிறது.

(யாவும் கற்பனை)

## மக்கள் குரல்

(10-ம் பக்கத் தொடர்ச்சி)

ரின் நிருவாகத்துக் குள்ளேயே தனித்து இயங்கக் கூடியதாகவே தற்போதைய சங்கக் கடைகள் அமைந்துள்ளன.

எனவே ஆங்காங்குள்ள சிறுபான்மை இனத்தவர்களையும் ஊழியர்களாக உள்ளடக்கி, ஐக்கியம் கூட்டுறவு- என்னும் சொல்லுக்குரிய மகத்துவத்தைப் பிரதிபலிக்கக் கூடியதாக சங்கக் கடை பணி புரிய வேண்டும்.

அவ்வப்பகுதி மக்களின் தொகுதியின் குடிசனச் செறிவு, இன விகிதாச்சாரப்படியே, சிங்களவர், தமிழர், முஸ்லீம்கள் ஆகியோர் ஒரு குறிப்பிட்ட சங்கக் கடையில் ஊழியர்களாக இடம் பெறுவார்களாகில் பல் வகைப்பட்ட ஊழல் மோசடிகளைத் தவிர்க்கலாம்.

இன்றேல், ஒரு குறிப்பிட்ட சாதியத்தாருக்குள்ளேயே நிறுவனம் நிருவகிக்கப்படும் போது அக்குழுவினர் மட்டுமே பூரணபயன் பெறக் கூடியதாயும் பொது மக்கள் வஞ்சிக்கப்படக் கூடியதாகவும் அமைந்துவிடும். எனவே அரசினர் இது பற்றி ஆவன செய்வார்களாக!

—சொ. ந. க. பாலசுந்தரம்
பதுளை.

## சிலுவையில் எட்டு கோடி வருடத்திற்கு முன் இருந்த மரம

மேற்கு ஜெர்மனியிலுள்ள ஸெணின்ட் ஆன்னஸ் மாதா கோவிலின் சிலுவையின் ஒரு பகுதியாக எட்டு கோடி வருடத்திற்கு முன் இருந்த மரம் இடம் பெற்றிருக்கிறது. இம் மரம் வட அமெரிககவாசியான அரிஸோனுவில் வளர்ந்த தெனத் தெரிகிறது. (யூ. பி. எஸ்.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் வளர்த்த முஸ்லிம் அறிஞர் புறக்கணிக்கப்படுவதேன்?

அந்தக் கடற்கரை வழியாக அரபு நாட்டிலிருந்து இஸ்லாமிய ஞான தீபம் கொண்டுவரப்பட்டதோ, அதே கடற்கரைப் பகுதிகளிலிருந்துதான் கன்னித் தமிழும் மணம் கமழ்ந்து காட்டியது.

கடமை செய்வதில் கழகங்களாக இருந்து, கலை பல வளர்த்து பச்சைக் கொடி காட்டி, தமிழை வாழவைத்த வள்ளல்கள் தமிழ் முஸ்லிம்கள்.

தமிழ்த்தாயின் தேவையறிந்து சேவை செய்தார்கள். முத்தமிழ்த் துறையில் முற்போக்காளராய் இருந்தார்கள். எவர் ஒருவர்க்கும் ஏகபோக உரிமையாக்காமல், எல்லார்க்கும் பொதுச் சொத்தாகும் வகையில் தமிழ்ப் பயிரை கண்ணீர்விட்டு வளர்த்தார்கள்.

அவர்கள் தமிழ் ஞானப் புதையல் போன்றவர்கள்— இன்றோ புதைகுழிகளுள் புகுந்திருக்கிறார்கள். புதைகுழி மண்மேட்டின் மேல் முளைத்துக் காய்ந்திருக்கும் புல்லுக்குப் பேசும் வாயிருந்தால், கடற்கரை பொன்நிற மணலுக்கு வாயிருந்தால், மரித்த மாமேதைகளின் தொண்டுள்ளத்தைக் கதை கதையாகச் சொல்லும். அவை இலக்கியமாக அமையும்.

கீழ்க்கரையில் கறுத்தசதகுத்தம்பிப் பாவலர்,

நாகூரில் குலாம் காதிறு நாவலர்,

தேங்காய்ப் பட்டினத்தில் குஞ்சு மூசுப் புலவர்,

பரங்கிப்பேட்டையில் காதிர சன மரைக்காயர்,

காயல் பட்டினத்தில் சேகனுப் புலவர்,

ரைக்காலில் சையத் இப்ராஹீம் கவிராயர் போன்ற மொழித்துறை மணிமகுடதாரிகள், கடற்கரைப் பகுதிகளையே பிறந்தகமாகக் கொண்டவர்கள்.

## தமிழ் பிழைத்தது

துன்பம் பல துளைத்தும், தொண்டு சோர்ந்ததில்லை!

அன்னவர் பரம்பரையினர் இங்கு இல்லாமலில்லை—ஏராளம்—ஏராளம்!

அன்னைக்கு இஸ்லாமிய ஆடைமீது ஆசை இருந்தது. கலாச்சார உணவை உண்டு களித்திட விருப்பம் இருந்தது. நவீன அணிகலன்கள் மேல் அவா இருந்தது.

காவியம், புராணம், பிரபந்தம் போன்ற வடிவில் வழங்கி, ஆவலை நிறைவேற்றி வைத்தனர் அக்கால முஸ்லிம் புலவர்கள். இதனால் மனத்தூய்மையும் விளைத்தூய்மையும் பெற்றுள் அன்னை.

இதைவிட சாதித்த சாதனை வேறொன்று உண்டு. தமிழனுக்கு மனப்பாடத் திற்குரியது,

அவர்கள் மட்டும் இலக்கியத் துறையில் ஈடுபடாமலிருந்தால், மொழித்துறைக்கு சோக வரலாறு முளைத்திருக்கும் நிச்சயமாக—

உமறுப் புலவர் உதிக்காதிருந்தால் தமிழுக்கு ஓங்கும் புகழ் ஏது?

காயல் கண்ணகுமது புலவர் பிறப் பெடுக்காமலிருந்தால் பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்களின் மதிப்பு தமிழுக்கு ஏது?

மன்னார்குடி யூசுப் பாவலர் இல்லையென்றால், தமிழுக்கு மணிமகுடம் ஏது?

பொதியமலை தமிழ்ப் பயிரை ஆதியிலேயே முளைக்கச் செய்தது என்றால், அப்பயிரைச் சங்க காலப் புலவர்கள் வளர்த்தனர் என்றால், வளரும் அப்பயிருக்கு பாதுகாப்பு வேலியாகயிருந்தவர்கள் தான் முஸ்லிம் புலவர்கள்.

தமிழ்ச் சங்கங்கள் இவர்களைப் பற்றி எண்ணியதுண்டா? நினைவுநாள் கொண்டாடியதுண்டா? இலக்கியப் படைப்புக்களைப் பாராட்டியவர்; நல்ல பலனை அனுபவிக்க முடியும் அதுபோது.

அப் புலமை அற்ற அரசியல் தலைவர்கள் சிலரை மொழி பற்றிப் பேசவைப்பது என்பது அறிவிற்கு உடன்பாடாகாத வினை மட்டுமல்ல; கேலிக்கூத்துமாகும்.

மொழித்தொண்டின் உண்மையை அது பிரதிபலிக்கச் செய்யாது; வெற்றுரவாரமாகவே விளங்கும்.

சடங்கு முறைக்காகக் கூடினோம், அனைத்து அரசியல் கட்சித் தலைவரையும் அழைத்தோம். ஓர் அரங்கில் அணி வகுக்கச் செய்தோம். ஆளுக்கு அரைமணி நேரப் பேச்சுக்கு சந்தப்பம் அளித்தோம். அறுசுவை உண்டிக்குப்பின் அமைதியாகக் கலைந்தோம் என்ற தான திருப்திக்கு வேண்டுமானால் மகாநாடு பயன்படலாம்; வேறெதற்கு ஆகலாம்,

வீண் செலவினங்களுக்கும், ஆரவார ஆர்ப்பாட்டங்களுக்கும் உண்டானதுபோல் ஆகாமல் நல்லறிஞரை நாடி அழைத்து நறுந்தமிழின் மாண்பை நானிலத்தார் அறிந்து வியப்புறும் வகையில் போற்றிப் புகழ்ந்திடும் முறையில் கடனாற்ற வேண்டும்; கருத்தூன்ற வேண்டும்; இதில் தான் பொருளுண்டு, புனிதமுண்டு.

ஆராய்ச்சித்துறை மீது அழுக்குப்படியாமல் அகிலத்து மொழித்துறை அறிஞர் அகடவிகடம் புரியாமல், எதிர்கால இலக்கியத் தலைமுறையின் ஏச்சுக்கும் பேச்சுக்கும் ஆளாகாமல் மகாநாடு அமைவதில் தமிழக அரசு முன்னெச்சரிக்கையில் ஈடுபடுவது அவசியமாகிவிட்டது.

மொழிக்கு சீலமும் சிறப்பும் கொடுத்த தமிழ் முஸ்லிம் சான்றோரை நினையாமல், மதியாமல் நன்றிகொன்றவர்களாயிருந்து வருகின்றனர் சாதி வெறிப் புலவர் பலர். இனிமேலும் இச்செயல் தொடர்கதையாகப் போகாமல், தடுக்கும் தீர்மானம் ஒன்றை மகாநாட்டில் கொண்டுவருவது தமிழக அரசின் பொறுப்பாகிவிட்டது. மொழிவளர்ச்சி வரலாற்றிலே மகாநாடு புதியதோர் அத்தியாயத்தைத் தொடங்கட்டும்; நமது ஆர்வக் கனவு நனவாகட்டும்.

— "மறுமலர்ச்சி"

## இந்நிலை தொடராதிருக்க தமிழ் மாநாடு தீர்மானிக்குமா?

'உள்ளச்சம் வையும் பிள்ளாய்' என்ற உமறின் எச்சரிக்கைத் தொடர், தமிழ்ப் பகைவரை அச்சுறுத்தி ஓடச் செய்தது தமிழை உயரச் செய்தது. 17-ம் நூற்றாண்டு சம்பவம் இது எட்டயபுரத்தில்!

உமறுப் புலவரைப் போல் இங்கிருந்த எந்த மத சார்புடைய ஒரு புலவரேனும் தமிழின் தன்மானங் காத்திட வீர முரசம்கொட்டவில்லை, போராடிக் கொடி தூக்கிக் காட்டவில்லை எதிரிக்கு ஈட்டியாகி மொழிக்கு புகழை ஈட்டித் தந்தவர் எவருமில்லை.

ஜவ்வாதுப் புலவர் பிறக்கவில்லை என்றால், மொழிக்கு அறங்காக்கும் தமிழே! என்ற அழைப்பு ஏது?

காசிம் புலவர் அவதரிக்காவிட்டால் தமிழுக்குத் திருப்புகழ் ஏது?

துண்டா? நன்றிக்கடன் செலுத்தியதுண்டா? ஏன் இல்லை?

தமிழ்த்துறையிலே சமய உணர்வுமுதலிடம் பெறுவதனால் அன்றோ குறுகிய மனப்பான்மை கோலோச்சுகிறது? சமரச உணர்வும், பொதுமை நெறியும் தேவை! சங்கங்கள் இதை மறந்ததேன்? அன்னை களிப்பாளா? கவலைப்படுவாளா? சிந்திக்கவேண்டாமா? திரும்புகட்டம் தென்னகம் காணவேண்டாமா?

எந்த விழாக்களிலும் முஸ்லிம் தமிழர்கள் கலந்து கொள்வதற்கான சந்தர்ப்பம் அளிக்கப்படக் காணோம்! உண்மைத் தமிழ்த் தொண்டாகுமா இது! பண்பாடு என்பதற்குப் பொருள் தான் என்ன?

இஸ்லாமியத்தமிழறிஞர்களை ஏற்காதவரை, இலக்கியத் துறையில் சத்திய தரிசனம்

மீன்பிடிக்கும் சிறுவனை மின்சாரக் கலை பற்றிப் பேசச் சொன்னால் பூக்கூடைக்காரியிடம் பௌதிக சாஸ்திரத்துக்கு விளக்கங் கேட்டால்! எப்படி இருக்கும்?

மலேசியா தமிழ் மாநாடு அலட்சியம் செய்தது போல்

## தமிழுக்கு வலிவும் பொலிவும் கொடுத்தவர்கள் முஸ்லிம் அறிஞர்களே!

இன்ப சுகம் அனைத்தும் துறந்தனர். ஆனால் தமிழை மட்டும் துறக்கவில்லை. தமிழால் இவர்கள் பிழைக்கவில்லை. இவர்களால்தான் தமிழ் பிழைத்தது! உண்மை வரலாறுகள் உருவாகவில்லை! அதனால்தான் இந்த அற்புதக் காட்சிகள் புலனாகவில்லை.

அதேபோல், தென்னகத்து நதிநிரலும் மதிவாணர் சிலரைத் தமிழுக்குக் கதியாக்கி வைத்திருந்தது.

காவேரி, பிச்சை இப்ராஹீம் புலவனை,

வைகை, சையது முஹம்மது அண்ணாவியாரை,

தாமிரவருணி, ஆலிப் புலவரைக்காண வைத்தது. இத்தகையோர்க்கு முன்னும் பின்னுமாக, சுமார் 350 புலவர்கள் வரை அவ்வப்போது அவதரித்து 500 ஆண்டுகாலமாக அரிய தமிழ்த் தொண்டாற்றியிருக்கின்றனர்; இன்னமும்

இளையான்குடி பாட்சாப் புலவர் இல்லாதிருப்பின் தமிழன்னைக்கு இதயம் ஏது!

சேகுதம்பிப் பாவலர் இல்லாதிருந்தால், தமிழுக்கு உயிர்நிலை ஏது?

செவத்த மரைக்காயர் தோன்றாதிருந்தால், தமிழுக்கு அஞ்சாமை பண்பு ஏது?

தக்கலை பீர்முஹம்மது தவயோகியை முஸ்லிம் சமூகம் தந்திராவிட்டால் ஆத்மீகக் கலை அணிகலன் தமிழுக்கு ஏது?

அப்துல் மஜீத் பாடாதிருந்தால் தமிழர்க்கு வாணிபக் கலை விளக்கும் ஏது?

ஆசுகவி அப்துல்கபூர் அருந்தொண்டில்லையெனில் தமிழுக்கு வண்ணம் ஏது?

சையதிமாம் பாவலர் திருக்கரம் திரவியம் தேடுவதி... யில் ஈடுபட்டிருந்தால், சித்திர கவிகளுக்குச் சிறப்பேது?

என்பது இல்லை! கிடைப்பது அரிதிலும் அரிது! இது உண்மை! வெறுங் கனவோ, கற்பனையோ அல்ல! நினைவிருக்கட்டும்!

முஸ்லிம் புலவர் பெருமக்களைக் கவுரவித்தல்,

முஸ்லிம் பேச்சாளர்க்கு சங்கங்கள் மீது உரிமைகொண்டாட வாய்ப்பளித்தல்.

இலக்கிய அரங்கில் சமதரிசனத்திற்கு சந்தர்ப்பமளித்தல்.

இவை மூன்றும் இன்றியமையாதனவாகும்.

இச்சந்தர்ப்பத்தில் உலகத் தமிழ்மகாநாட்டுக்கு கோரிக்கை ஒன்று விடுப்பது பொருத்தமாகும்.

... வரே மொழித்துறை பற்றிப் பேசத் தகுதிவாய்ந்தோரா


## வியாபாரத்திற்கழகு விளம்பரம் செய்தல்

**இதோ ஒரு தலைசிறந்த வாய்ப்பு!**

சு ★ நியாயமான கட்டணத்தில்...
த ★ குறித்த நேரத்தில்...
ந் ★ கவர்ச்சியான அமைப்பில்...
தி ★ திறமையான வேலைப்பாட்டுடன்...
ர ★ சகல அச்சுவேலைகளும்
ன் உடனுக்குடன் செய்து கொடுப்போம்.

**அச்சகம்**

சுதந்திரன் அச்சகத்துக்கு நீங்களும் ஒரு சந்தர்ப்பத்தை ஏன் கொடுக்கக் கூடாது?

20 ஆண்டுகளாக பணியாற்றி வரும் அச்சகம்.

194ஏ, பண்டாரநாயக்க வீதி, கொழும்பு - 12.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இப்பொழுது காட்சி தருகிறது

செல்லமகால் (கொழும்பு) ஈரோஸ் (பாமன்கடை) இம்பீரியல் (குருநாகல) சாமனல (பொகவந்தலாவ)

செல்வி (செங்கலடி) சந்திரா (பசறை) சண்முகா (கிளிநொச்சி) றீகல் (கண்டி)

★ ஜெமினி கணேசன் ★ கே. ஆர். விஜயா, ★ நாகேஷ்
★ சுந்தரராசன் ★ சோ ★ மனோரமா நடித்த



# தேன் மழை

## டிசம்பர் 29] வெள்ளி முதல்!

எல்பின்ஸ்டன் (மருதானை) ரொக்சி (வெள்ளவத்தை) வின்சர் (யாழ்ப்பாணம்) வேல்ஸ் (கண்டி) றீகல் (நீர்கொழும்பு) கிங்ஸ் (பதுளை) நெல்சன் (திருமலை) குயின்ஸ் (காலி) றீகல் (அம்பாறை) இம்பீரியல் (மட்டுநகர்)

சிவாஜி கணேசன் நாகேஷ் பத்மினி சகஸ்ரநாமம் சௌகார் ஜானகி சுந்தரிபாய்

# பேசும் தெய்வம்

---



# 5வது வாரமாக பவனி வரும் பதுமை

முத்தான வசனங்களில் சத்தான கருத்துக்களை கொத்துக் கொத்தாக அள்ளித் தந்திருக்கிறார் கோபாலகிருஷ்ணன் பார்த்த குடும்பப் பெண்கள் அனைவரும் பெருமைப்படுமளவிற்கு பவானி தன் இல்லற மாண்பை குறைவறக் காட்டியுள்ளார்!

சென்ட்ரல் (மருதானை) ராணி (யாழ்ப்பாணம்) ஜோதி (திருமலை) சென்ட்ரல் (நாவலப்பிட்டி)

ஜெய்சங்கர் நாகேஷ் எல். விஜயலட்சுமி அசோகன் விஜயகுமாரி ராஜம்மா நடித்த

அன்னு புரொடக்ஷன்ஸ்

# பவானி

டைரக்ஷன் ராமண்ணா

---

# அடுத்த மாபெரும் வெளியீடு

கே. எஸ். கோபாலகிருஷ்ணன் இதுவரை உருவாக்கிய படங்களில் எல்லாம் சிறந்த படம்! ஒற்றுமைக்கு எடுத்துக்காட்டான குடும்பத்தில் வேற்றுமை புகுந்து செய்யும் அட்டகாசம்!

★ எஸ். வி. ரங்கராவ் ★ எஸ். வி. சுப்பையா ★ பத்மினி ★ விஜயராணி
★ ஓ. ஏ. கே. தேவர் ★ நாகேஷ் ★ ஜோதிலட்சுமி மற்றும் பலர் நடித்த

கமால் பிரதர்ஸ் அளிக்கும்



# கண் கண்ட தெய்வம்

கதை — வசனம் — டைரக்ஷன் கே. எஸ். கோபாலகிருஷ்ணன்

---

# இப்பொழுது வெற்றி நடைபோடுகிறது!

கிங்ஸ்லி (கொழும்பு) பிளாசா (வெள்ளவத்தை) வெலிங்டன் (யாழ்ப்பாணம்) விஜயா (மட்டுநகர்) ஸ்ரீ கிருஷ்ணா (திருமலை)

28ம் திகதி முதல் விஜிதா (அட்டன்) மொடேர்ன் (பதுளை) நியூ சினிமா (குருநாகல்)

முத்துராமன், ஏ. வி. எம். ராசன், ஜெயலலிதா
★ சுந்தரராஜன் ★ நாகேஷ் நடிக்கும்

ஏ. வி. எம். அளிக்கும்



# மேஜர் சந்திரகாந்த்

## 28ந் திகதி முதல்

மைலன் (கொழும்பு) ஈரோஸ் (பாமன்கடை) சந்தியா (கம்பளை) தாஜ்மகால் (கல்முனை) அயன் (மன்னார்) கிறசென்ட் (புத்தளம்)

எஸ். எஸ். ஆர். தேவிகா காஞ்சனா நடிக்கும்

# மறக்க முடியுமா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை சிலோன் நியூஸ்பேப்பர்ஸ் லிமிடெட்டாரால் ... பண்டாரநாயக்கா வீதி, 194, ஏ, இலக்கத்தில் 1967-ம் வருடம் டிசம்பர் மாதம் 23-ம் திகதி சனிக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.